Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
நவ. 30 - டிச. 06, 2006
ரூபா 20.00

வாரமலர்

# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 689

## இறுகும் இலங்கைப் பிரச்சினையில் இணைத்தலைமை நாடுகள், இந்திய பங்களிப்பு!



தற்போதைய யாழ்ப்பாணம்!

சிறப்புப் பார்வை!







திரிஷா- குஷ்பூ இன்டர்நெட்டில் ஆபாசம்!

'சிவாஜி' யில் ரஜினி கரகாட்டம்!



# ஆன்மீகம்

## தத்துவம் உணர்ந்து வழிபடுவோம்

புலித்தோல் இடையுடுத்தி, திரிசடை விரித்து, மான் மழு ஏந்திய பிறை சூடிய பெருமானாகிய சிவபெருமானை, சும்மா வெறுமனே வணங்கிச் செல்லாமல், அரிய தத்துவம் உணர்த்தும் அவரது திருக்கோலத்தைப் பொருளுணர்ந்து வழிபட்டால்தான் பலன் உண்டு என்பது பெரியோர்கள் வாக்கு. தெரிந்து கொள்வோமா சிவ சொரூபம் தரும் தத்துவ விளக்கத்தை...

***சந்திரன்*** : ஈசன் ஜடாமுடியில் சூடிய சந்திரன் நம்முடைய இன்பமும், துன்பமும் மாறி மாறி வளர்பிறை, தேய்பிறையாக வரும் என்பதைக் குறிக்கிறது.

***கங்கை***: கங்கையின் தூய்மை ஒரு போதும் கெடுவதில்லை. அதைப் போல எவ்வளவோ ஆசைகள் நம்மை அலைக்கழித்தாலும் நம்முடைய மனம் அதனால் கெட்டுப்போகாது இறை சிந்தனையில் ஈடுபட வேண்டும் என்பதைத் திரிசடை மேல் அமைந்த கங்கை உணர்த்துகிறது.

***பாம்பு*** : ஒவ்வொரு நிமிடமும் நம்மை பாவக்குழியில் தள்ளும், நச்சுப் பாம்பாக சூழ்நிலைகள் சுற்றிக்கொண்டு காத்திருக்கின்றன. ஆனால் அந்த விஷம் நம்மைத் தாக்காது விழிப்புடன் இருந்து இறையருள் பெற வேண்டும் என்பதைப் பாம்பு மாலை உணர்த்துகிறது.

***புலித்தோல்*** : நம்மைப் பாதிக்கும் மிருக உணர்ச்சிலியிருந்து விடுபட்டு மேலான உணர்வோடு பரமனை தியானிக்க வேண்டும் என்பதைப் புலித்தோல் உணர்த்துகிறது.

***தேவி*** : ஈசன் தம் இடப்பாகத்தில் தேவியை ஏற்றருளினாலும் அவர் காமத்தை வென்றவர். நாமும் இல்லறத்தில் இருந்தாலும் காமத்துக்கு அடிமையாகாது, நல்லறம் காணவேண்டும் என்பதையே ஈசனோடு உறையும் தேவியின் சொரூபம் உணர்த்துகிறது.

**என். எஸ். ராஜா, தம்பலகமம்.**



## மனதில் உறுதி வேண்டும்!

**க**ண்கள் நல்லதைப் பார்க்கட்டும். காதுகள் நல்லதைக் கேட்கட்டும். வாய் நல்லதைப் பேசட்டும். மனம் நல்லதை நாடட்டும். இப்படி நாம் சிந்தித்து நேர்மையாகச் செயல் பட்டால் எல்லாமே நல்லதாகத்தான் நடக்கும் என்றில்லை. சாத்தான் நல்லவர்களைத் தான் அதிகம் சோதிக்கிறான். துன்ப இருளில் தள்ளுகிறான். அப்போது பலவீனமான நாம் அவனுக்கு அடிமையாகிவிட்டால் அவன் ஜெயிக்கிறான். தேவனின் பிள்ளைகளாகிய நாமோ தேவ விசுவாசத்திற்குப் பங்கம் ஏற்படுத்தி கர்த்தரை வேதனைப்படுத்துகிறோம்.

'எதுவரினும் வரட்டும்! நான் சாத்தானுக்கு இடம் தரமாட்டேன்' என்று கர்த்தர் மீது இதய சுத்தியோடு விசுவாசித்தால் சாத்தான் தோற்றுப்போவான். அதற்கு மன உறுதிவேண்டும்.

நாம் போகும் பாதையில் மேடு, பள்ளம் இருப்பதுபோல் வாழ்க்கைப் பாதையில் இன்பமும் - துன்பமும் உண்டு. கால் இடறி விட்டால் ஆபத்து நேரும். எனவே வாழ்க்கைப் பாதையை வளமுடன் கடக்க வல்லவர் கர்த்தரின் துணையை நாடி நிற்போம். அவரே நமது வாழ்வும் - வழியும்.

**-வி. எஸ். மதிவாணன், ஹெந்தளை**

## புறம் பேசாதே!

புறம் பேசுவது கோள் உரைப்பது போன்றதொரு பெரும் பாவச் செயல் வேறொன்றுமில்லை.

பிறர் பேசுவதைக் கேட்டு அதனை மற்றவரிடம் கூறுவது கோள் ஆகும். ஆனால், பிறரைப்பற்றி எந்நேரமும் ஏதாவது கூறிக்கொண்டிருப்பது புறம் பேசுதலாகும்.

ஒருவன் மற்றவனைப் பற்றிப் புறம் பேசிக்கொண்டேயிருப்பதால் அவன் தன் வாழ்வில் மிகச் சிரமப்பட்டுச் சேர்த்துவரும் நன்மைகள் அனைத்தும் அவனை விட்டுச் சிறிது சிறிதாக நீங்கிக் கொண்டேயிருக்கும்.


அண்ணல் நபி (ஸல்) அவர்கள், "என்னுடைய உம்மத்தில் பத்துப் பேர்கள் சுவனம் செல்லமாட்டார்கள். அவர்கள் தவ்பாச் செய்தாலன்றி" என்று கூறினார். (அவர்களில் ஒருவன்) ஜினாவில் பிறந்து புறம் பேசித் திரிகின்றவன் என்றும் கூறினார்.

அறிவிப்பு :- ஹஸரத் இப்னு அப்பாஸ் (ரலி)

நூல் :- 'முதப்பிஹாத்'

**-முஹம்மது ஹஸனி, கல்முனை - 07**

## கவிதைப் போட்டி இல.686



பரிசுக்குரிய கவிதை

### விடுதலை

விடுதலை - அதற்காக
கொடு தலை என்றார்கள்.
சுடுகணை ஏந்தினோம்
சுடுகாடு தூங்கினோம்
சொந்த மக்களையே
சுட்டுச் செய் கொலை
என்றார்கள்.
படுபாதகம் அதுவென்று
வீடு தேடி
வந்துவிட்டோம்.

*- தாமரைமகன்,*
*திருமலை.*

# கவிதைப் போட்டி இல.689



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 05.12.2006.

கவிதைப் போட்டி இல.689
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.




### அவா!

வெளியில் கொஞ்சம்
விளையாட வந்தோம்.
வெடித்தது குண்டு
அதிர்ந்து நின்றோம்!
வெடிகுண்டு
விதைக்கப்படாத இடம்
விளையாட
இருக்குமா?

*- மு. பாத்திமா,*
*புத்தளம்.*

### நிற்கின்றேன் வீதியோரத்தில்....!

நிற்கின்றேன் வீதியோரத்தில்....
காரணம் - யுத்தத்தினால்
இல்லாமல் போன எனது வீட்டையும்
என் உறவுகளையும்
வருபவர்களிடம்
விசாரிக்க.....

*- தி.சரண்யா,*
*மஸ்கெலியா.*

### யார் துணை?

தாகங்கள் எத்தனை?
சோகங்கள் எத்தனை? - இந்தப்
போரினில்
இழந்தவை எத்தனை?
இழக்கப் போபவை எத்தனை?
எத்தனை? எத்தனை?
இத்தனைக்கும் மத்தியில்
எம் வாழ்வுக்கு யார் துணை?

*- வி.சாரூபன்,*
*மட்டக்களப்பு.*

### காத்திருப்பு எதற்காக?

கால் கடுக்க நீங்கள் காத்திருப்பதேன்?
காற்றில் கலந்த சமாதானத்துக்கா?
கஷ்டப்பட்டுக் கடலில் வரும் உணவுக் கப்பலுக்கா?
பொழுதெல்லாம் நடக்கும் போரின் நிறுத்தத்துக்கா?
போகாத ஏ- ஒன்பது பாதை வண்டிக்கா?

*- சீ. தங்கவடிவேல்,*
*மட்டக்களப்பு.*

### கொடூர ஆக்கம்!

பிறப்பாலல்ல,
இனவாதக் கொடூரத்தால்
அநாதைகளாக....
அகதிகளாக....
ஆக்கப்பட்டவர்கள்
நாங்கள்!

*- அ. சந்தியாகோ,*
*கண்டி.*

### சுதந்திரம் எப்போது?

ஊருக்குள்ளே சுதந்திரமாக
ஓடி விளையாடிய நாம்
இன்று ஊருக்கு ஒதுக்குப்புறத்தில்
ஒளிந்து நிற்கிறோம்
இனக்கலவரத்திற்கு அஞ்சி.

*- M.M.Z. சுஹதா,*
*பாணந்துறை.*

# உங்கள் பக்கம்

## பாதிக்கப்பட்டவர்கள் உரிய முறையில் கவனிக்கப் படுகிறார்களா?

***அண்மையில்*** நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் ஏற்பட்ட கடும் மழை, வெள்ளப் பெருக்கினால் பல இடங்களில் மக்கள் குடியிருப்புகளைவிட்டு இடம் பெயர்ந்து, அகதிகளாகப் பாடசாலைகளிலும், கோயில்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். மலையகப் பகுதிகளில் கடுமையான மண் சரிவினால் பலர் கொல்லப்பட்டமையும், கடைகள், வீடுகள் கடுமையாகச் சேதமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. புஸல்லாவ இரட்டைப் பாதையில் ஏற்பட்ட பாரிய மண் சரிவினால் அப்பகுதி மக்கள் இடம் பெயர்ந்து சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களுக்கான நிவாரணங்கள் வழங்கப்பட்டாலும் அது அவர்களது தேவையைப் பூரணமாகப் பூர்த்தி செய்யவில்லை.

மேலும் மழைக் காலமாதலாலும், பரவலாக எங்கும் காய்ச்சல் பரவுவதாலும் சிறுவர்கள், குழந்தைகள் பெருமளவில் பாதிக்கப்பட வாய்ப்புண்டு.

எனவே இவ்வாறு இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு அகதிகளாகியுள்ள மக்களின் மேலதிக நலன்களையும், பாதுகாப்பையும் முன்னிட்டு உரிய அதிகாரிகள் கருணை கொண்டு உதவிகளைச் செய்ய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

*-சி.ராகவன்,*
*புஸல்லாவ.*

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

# வாசகர் சாலை

### தினமுரசுக்கு திருடாத கவிதை

தித்திக்கும் தினமுரசே!
தினந்தோறும் நீ தருகின்ற
திடுக்கிடவைக்கும் செய்திகள்
திணற வைக்கிறது சிலரை.
திரு அற்புதனின் ஆரம்பம்
திசைகள் எங்கும் பரந்து
திரும்பிப் பார்க்க வைக்கிறது.
திருட்டுத்தனமாக நடாத்தும்
திருட்டுச் செயல்களை
திருமுகத்துடன் பயப்படாமல்
திமிர் திமிர் என நீ
திகிலாய் தருகின்றாய்.
திருப்பு முனைகள் வந்தாலும்
திடுக்கிடாமல் நீ தரும்
திட்டங்கள் அனைத்தும்
திரும்பத் திரும்ப வாசிக்க
தின் பண்டமாய் இனிக்கிறது.
திரும்பாதவர்களை எல்லாம்
திரும்பிப் பார்க்க வைக்கும்
திருவிளையாடல் உன்னைத் தவிர
திரும்ப யாருக்குத்தான் வரும்?
திருந்தாத ஜென்மங்களை
திருந்தவைக்கும் உன் சேவை
திருநாட்டில் எல்லாம்
திருமுகத்துடனே வர வேண்டும்.
தினமுரசே! இக்கவி
திருடி எடுத்து உனக்குத் தீட்டிய
திருட்டுக் கவிதை அல்ல;
திரும்பத் திரும்ப யோசித்து
திட்டம் போட்டு வரைந்தது.
தினமுரசே! உன் வரவு
தினமும் தேவை எனக் கூறி
திரும்பவும் உனக்காக
திருடாமல் வரைவேன்
தித்திக்க வைப்பேன்
தினமுரசே! உனக்காக மட்டும்.

*-ஜே.முகுந்தகுமார்,*
*வவுனியா.*

### இனிய முரசே!

வியாழன் தோறும் வீறுநடை
போட்டுவரும் தினமுரசே
நீ அள்ளித் தந்து கொண்டிருக்கும்
அனைத்து
தகவல்களும் மிகவும்
சுவையானவை.
மனித வாழ்விற்கு உன் வருகை
விழிப்பைத்
தருகிறது. நலம் மிக்க உன்
சேவை என்
போன்ற உள்ளங்களை வாழ
வைக்கின்றது.
உனை வாழ்த்த என்னிடம்
வார்த்தை இல்லை.
இருந்தும் வாழ்த்துகின்றேன்.
உன் அன்பு நண்பி.

*-ரி.எம்.வதனி,*
*மகிழூர் - 01, களுவாஞ்சிக்குடி.*

### முரசே வாழ்க!

தேன் போன்ற சுவையான
பல தகவல்களையும்
மான் போன்ற அழகான
பல வர்ணங்களையும்
எடுப்பான துடிப்பான
நடுப்பகுதியில்
சினிமாவையும்
அறுபது இருபதுக்குமான
அனைத்து அம்சங்களையும்
தன்னில் தாங்கி வரும்
தினமுரசே உனக்கென்
வாழ்த்துக்கள் பல கோடி.

*-அ.கா.மு.றிஸ்வின்,*
*மூதூர் - 01.*

# பிரபாகரனின் யுத்தச் சூழுரை; அப்பாவித் தமிழர்களுக்கே பேரிடி!

## வன்செயல்களைக் கைவிட்டு அமைதித் தீர்வுக்கு உதவுமாறு கோரிக்கை

"தமிழீழ தனி அரசுக்கான யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோமென்று இவ்வருட தனது பிறந்த நாள் உரையில் திடசங்கற்பம் பூண்டிருக்கும் புலித் தலைவர் பிரபாகரன், இருட்டறைக்குள் கறுப்புப் பூனையைத் தேடிக் கொண்டிருக்கிறார். 1990ஆம் ஆண்டு முதல், தான் பலி கொடுத்த மனித உயிர்களுக்காகப் பிரபாகரன் நிகழ்த்திய உரைகளைப் படித்துப் பார்த்தவர்கள், அவர் என்றுமே சமாதானத் தீர்வுக்கு அழைப்பு விடுக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும். பொய்யை அடிக்கடி கூறினால் அது உண்மையாகி விடுமென்ற பச்சைப் பொய்யைக் கூறிய கோயபல்ஸ் (ஹிட்லரின் சகா) பாணியில் வார்த்தைகளைக் கொட்டும் அவர், ஓர் ஏமாற்றுப் பேர்வழி மட்டுமல்ல, அப்பாவித் தமிழ் மக்களின் சகஜ வாழ்வுக்கு ஆப்பு வைக்கும் துரோகியுமாவார்" என்று அரசியல் ஆய்வாளர் மதிவண்ணன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

"ஒவ்வொரு வருடமும் தனது பிறந்த தின உரையில், தானோ தனது புலிகள் இயக்கமோ போர் வெறியர்களல்லர் என்றும், சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அர்ப்பண சிந்தையோடு செயற்பட்டு வந்தவர்களென்றும் "போர்மியூலா" பாணியில் பிரபாகரன் புறூடா விட்டு வருகிறார். அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு ஓர் தீர்வினைக் காண்பதற்காக தம்மை அர்ப்பணித்ததிலிருந்து ஆறு ஆண்டுகள் கடந்து விட்டனவென்றும், இந்த நீண்ட காலத்தில் தமிழர்களின் பிரச்சினைத் தீர்வுக்கு காத்திரமான எதுவும் நிகழ்ந்து விடவில்லையென்றும்



பிரபாகரன்

கதையளக்கிறார் பிரபாகரன். கிட்டத்தட்ட நான்கு வருடத்திற்கு மேற்பட்ட யுத்த நிறுத்த காலத்தில் ஐயாயிரத்திற்கு மேற்பட்ட அத்துமீறல்களைப் புலிகள் இயக்கம் மேற்கொண்டிருப்பதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு குற்றஞ்சாட்டியிருக்கிறது. கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லையென்பதையே இது காட்டுகிறது. இவ் வருடம் இதுவரை இந்த யுத்தத்தினால் 3500க்கும் மேற்பட்டவர்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றனவென்று புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இவற்றுள் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களை (சிங்கள மக்கள் உட்பட) கொன்றவர்கள் புலிகள் தான். புலிகளின் கருத்துகளுக்கு விரோதமானவர்கள் வகைதொகையின்றி சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பிரபாகரனின் இரத்தப் பலி பீடத்தில்தான் அஹிம்சை வழியில் போராடிய மிதவாதத் தலைவர்களான அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், நீலன் திருச்செல்வம், சாம் தம்பி முத்து, சரோஜினி யோகேஸ்வரன், சிவபாலன் உட்பட ஐம்பதுக்கு மேற்பட்ட தமிழ்த் தலைவர்கள் காணிக்கை செலுத்தப்பட்டிருக்கிறார்கள். பாதைத் தடையை ஏற்படுத்தி தமிழ் மக்கள் மீது அரசாங்கம் பொருளாதாரத் தடையை ஏற்படுத்தியிருப்பதாக பிரபாகரன் குற்றம் சாட்டியிருக்கிறார். 2002ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் யாழ்ப்பாணத்தில் சகஜ நிலை ஏற்படுத்தப்பட்டு மக்கள் அமைதி வாழ்வை அனுபவித்து வந்தார்கள். புலிகளின் வரி, கப்பம், மிரட்டிப் பணம் பறித்தல் போன்ற அடாவடித்தனங்களுக்கு மத்தியிலும் யாழ். மக்கள் தமது அன்றாடத் தேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியும் அவர்களுக்கு இருந்தது. இறுதி யுத்தமென்று கூறி கடந்த ஜனவரியிலேயே ஐரோப்பிய நாடுகளில் பணம் சேர்த்தவர்கள் யார்? விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கொள்வனவு செய்வதற்கு லண்டனிலிருந்தும் கனடாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் அமெரிக்காவுக்குச் சென்றவர்கள் யார்? புலிகள் யுத்தத்தை ஆரம்பித்திருக்காவிட்டால் யாழ்.மக்களும் வாகரை மக்களும் நிம்மதியாக வாழ்ந்திருப்பார்கள். "ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுத கதை தான்" அப்பாவித் தமிழ் மக்களுக்காகப் பிரபாகரன் கண்ணீர் வடிப்பதைப் பார்க்கும்போது நினைவுக்கு வருகிறது.

"அறிவியலில் ஏற்படும் வளர்ச்சிக்கேற்ப சிந்தனையும், கருத்துக்களும், சித்தாந்தங்களும் மாற்றங்களுக்கு உள்ளாகி சமூகப் புறநிலைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆயினும் சிங்கள தேசத்தின் சிந்தனைகள், சித்தாந்தங்களில் எவ்வித மாற்றங்களும் ஏற்படவில்லையென்று" கூறியிருக்கும் பிரபாகரன், காலவோட்டத்தின் மாற்றங்களுக்கேற்ப தன்னையும் தனது இயக்கத்தின் இலக்குகளையும் மாற்றிக் கொள்ளத் தவறியது ஏன்? 1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இலங்கைத் தமிழ் மக்களின் போராட்ட திசைமார்க்கத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சகோதர தமிழ் இயக்கங்களை வேட்டையாடி பல பத்தாயிரம் தமிழ் இளைஞர்களைக் கொன்று குவித்த புலிகள் இயக்கம், இன்னமும் தமிழீழத் தனியரசுக்காகப் போராட முனைவது நகைப்புக்கிடமானது.

வடக்கு, கிழக்கில் பெரும்பாலான தமிழ் மக்கள் கௌரவமான தீர்வுடன் தமது அன்றாடத் தேவைகளும் குறுகியகால, நீண்டகால அபிலாஷைகளும் நிறைவேற்றப்பட வேண்டுமென்றே விரும்புகின்றனர். இதற்குக் குறுக்காக பிரபாகரன் நிற்பாரேயானால் சரித்திரத்தின் சாக்கடைக்குள் சங்கமிக்க வேண்டிய நிலையே அவருக்கு ஏற்படும்" இவ்வாறு மதிவண்ணன் கூறினார்.

## இலங்கைப் பிரச்சினையில் இந்தியா கூடிய அக்கறை காட்டவேண்டும்

### -ஐரோப்பிய ஒன்றியம்

இலங்கையின் தற்போதைய பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக இலங்கை அரசாங்கம் இந்திய அதிகாரிகளுடன் நெருக்கமாகச் செயற்பட்டு, முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஐரோப்பிய பாராளுமன்றத்தின் உயர்மட்டப் பேச்சாளரான திருமதி கிறிஸ்டினா கலாச் கடந்த வாரம் தெற்காசிய பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் தெரிவித்தார். இக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஐரோப்பிய ஒன்றியத்தின் பொது வெளிவிவகார மற்றும் பந்தோபஸ்துக் கொள்கை தொடர்பான ஆசிய செயலணிக் குழுவைச் சேர்ந்த பிரதிநிதியான திருமதி அலெக்ஸ்சாண்ட்ரா பால்டியும் கலந்து கொண்டு இதே கருத்தை வெளியிட்டார். இலங்கையில் பயங்கர வாதத்திற்கு முடிவு கட்டுவதற்கும் இலங்கையுடன் வர்த்தக மற்றும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கும் ஐரோப்பிய ஒன்றியம் தனது பொது, வெளிநாட்டு மற்றும் பந்தோபஸ்துக் கொள்கையைத் தொடர்ந்தும் பேண வேண்டுமென்று திருமதி பால்டி வற்புறுத்தினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூறியதாவது:- இலங்கையின் இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டுவதற்காக இணைத் தலைமை நாடுகளுடனும் இலங்கை அரசாங்கத்துடனும் இணைந்து செயற்பட்டு வருகிறோம். இலங்கை மற்றும் காஷ்மீர் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில், பிணக்குகளோடு சம்பந்தப்பட்ட தரப்புகள் தமக்கிடையே கலந்துரையாடல்களை நடத்துவதோடு நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டும். இலங்கையில் அப்பாவி மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்செயல் நடவடிக்கைகளை நிறுத்தி சம்பந்தப்பட்ட தரப்புகள் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்ப வேண்டும். இலங்கையில் நிவாரண ஊழியர்கள் மிலேச்சத்தனமாகக் கொல்லப்பட்டமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் கவலை கொண்டுள்ளது. இதேவேளை இலங்கைப் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுடன் ஐரோப்பிய ஒன்றியம் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

## ரவிராஜ் கொலை: ராஜிதவை விசாரணைக்கு உட்படுத்த வலியுறுத்தல்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான ரவிராஜின் படுகொலை தொடர்பாக ராஜித சேனாரட்ன எம்.பியை விசாரணைக்குட்படுத்தி, மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபர் விக்டர் பெரேராவை, சமூக சேவைகள், சமூக நலத் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார். கடந்த 19ஆம் திகதிய 'சத்தின' என்ற சிங்கள ஞாயிறு வார இதழுக்கு வழங்கிய பேட்டியில், ரவிராஜின் படுகொலை தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவையும், அவரது கட்சியான ஈ.பி.டி.பி.யையும் சம்பந்தப்படுத்திக் குறிப்பிட்டிருந்தார். எனவே உடனடியாக ராஜித சேனாரட்ன எம்.பியை விசாரணைக்குட்படுத்தி, தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறு எழுத்து மூலம் வழங்கிய முறைப்பாட்டில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார்.

## பயங்கரவாதிகளில் நல்லவர்கள், தீயவர்களென்று வேறுபாடில்லை

### -அமெரிக்கப் பேச்சாளர்

"அமெரிக்காவுக்கு அல்கொய்தா பாரதூரமான அச்சுறுத்தலாக விளங்குவதால், நாம் பிரதானமாக அதனையே இலக்கு வைத்துத் தாக்குகிறோம். இருந்தாலும் இலங்கை அரசாங்கத்துக்கு புலிகள் இயக்கம் விடுக்கும் அச்சுறுத்தலையும் நாம் மிகப் பாரதூரமாகவே கருதுகிறோம். ஏனெனில் பயங்கரவாதிகளில் நல்லவர்களென்றோ தீயவர்களென்றோ வேறுபாடுகள் கிடையாது" என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பயங்கரவாத எதிர்ப்பு ஒருங்கிணைப்பு அலுவலகப் பிராந்திய விவகாரங்களுக்கான பணிப்பகத்தின் பிரதி ஒருங்கிணைப்பாளர் திருமதி வேர்ஜினியா பாமர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்:-

"பயங்கரவாத அச்சுறுத்தல் தொடர்பான மூன்று படிமங்களையும் ஏக காலத்தில் தாக்க வேண்டுமென நாம் நம்புகிறோம். பயங்கரவாதிகளின் தலைமைத்துவம், பயங்கரவாதிகளின் பாதுகாப்பிடம், பயங்கரவாதிகள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தும் சூழ்நிலைகள் ஆகிய மூன்றுமே பயங்கரவாதிகளின் படிமங்களாகும். பயங்கரவாதிகளின் சொர்க்கமென இவற்றை வர்ணிக்கலாம். முதலாவது அவர்களுக்குப் பாரம்பரியமாக இருந்து வரும் வசதிகள், பின்னர் சைபர் பயங்கரவாதம். இதன் மூலம் இணையத்தளத்தைப் பயன்படுத்திப் பயங்கரவாதிகள் பிரசாரங்களை மேற்கொள்வதோடு நிதியும் சேகரிக்கின்றார்கள். சைபர் பயங்கரவாதம் அமெரிக்காவுக்குப் பாரதூரமான பயமுறுத்தலாகவும் சட்டரீதியான சவால்களாகவும் திகழ்கிறது" என்றும் அவர் சொன்னார்.

## மலையகத்தில் சட்டவிரோத கருத்தடை; எட்டுப் பேர் சிக்கலில்

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வம்சாவளி விருத்தியைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சில தீய சக்திகள் சட்ட விரோத கருத்தடை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக பிரதி சுகாதார அமைச்சர் வடிவேல் சுரேஷ் அண்மையில் தெரிவித்த குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. பிரதியமைச்சரால் நியமிக்கப்பட்ட குழுவொன்று இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது.

இச் சட்டவிரோத கருத்தடை நடவடிக்கைகள் பல வருடங்களாக மலையக மருத்துவ நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன. இது தொடர்பாக விசாரணை நடத்தி வரும் குழு, இதுவரை எட்டு வைத்திய அதிகாரிகளை இனங் கண்டிருப்பதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

## இது எப்படி?

புலி இயக்கத் தலைவர் பிரபாகரனின் 52ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்ப விரும்புவோர் மின்னஞ்சலூடாக அனுப்புவதற்கு ஓர் இணையத்தள முகவரியை 'சங்கதி' என்ற புலிகளின் இணையத்தளம் வெளியிட்டிருந்தது. புலம்பெயர் நாடுகளிலிருந்தும் வடக்கு, கிழக்கிலிருந்தும், கொழும்பிலிருந்தும் கூட வாழ்த்துச் செய்திகள் அனுப்பப்பட்டிருந்தன. பிரபாகரனைத் திட்டித்தீர்த்தும் கணிசமான செய்திகள் அனுப்பப்பட்டிருந்தன. லண்டன் நியூஹாம் பகுதியிலிருந்து உரும்பிராயைச் சேர்ந்த பாக்கியலஷ்மி என்ற பெண்மணி அனுப்பி வைத்த ஒரு செய்தியை இங்கே தருகிறோம் :-

"பிரபாகரனே! எனது சகோதரர்கள் மூவரை 1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் உனது ஆட்கள் கடத்திச் சென்று கொன்று விட்டார்கள். அவர்களின் மூன்று விதவை மனைவிகளும், பதினான்கு பிள்ளைகளும் வாழ்வாதாரமின்றி வாடி வதங்குகிறார்கள். எனது சகோதரர்கள் கடத்திச் செல்லப்பட்டு பத்து வருடங்களுக்குப் பின்னர் உனது ஆட்கள் எனது மைத்துனிமார்களின் வீடுகளுக்குச் சென்று, எனது சகோதரர்கள் கொல்லப்பட்ட செய்தியைக் கூறி, தலா முப்பதாயிரம் ரூபா வீதம் நஷ்டஈடு வழங்கவும் முன்வந்திருக்கிறார்கள். இந்த நஷ்டஈட்டை ஏற்றுக்கொள்ள எனது மைத்துனிமார்கள் மறுத்துவிட்டார்கள். எனது சகோதரர்கள் செய்த ஒரேயொரு தவறு இன்னொரு தமிழீழ இயக்கத்துடன் சேர்ந்து ஆயுதங்கள் ஏந்தியது தான். உன்னைப் பொறுத்தவரையில் ஒரு தமிழ் மகனின் உயிருக்கு விலை முப்பதாயிரம் ரூபா மட்டுந்தான். ஆனால் உனது மனைவியும், பிள்ளைகளும் பல்லாயிரக் கணக்கான தமிழர்களின் இரத்தத்தையும் கண்ணீரையும் முதலாக்கி சொகுசாக வெளிநாடுகளில் வாழ்கிறார்கள். உனது குற்றங்களுக்கு துர்க்கை அம்மன் சும்மா விட மாட்டாள்."

இச் செய்திக்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இணையத்தளத்தில் வரும் வாழ்த்துச் செய்திகளுக்கு, தானாகவே நன்றி தெரிவிக்கும் ஒழுங்குகள் அதில் மேற்கொள்ளப்பட்டிருந்ததால் இதைவிட மோசமாகவும் காரசாரமாகவும் அனுப்பப்பட்ட செய்திகளுக்கும் கூட நன்றி தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு மீண்டும் வாபஸ்

இலங்கையில் இடம் பெற்று வரும் மனித உரிமை மீறல் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய தலைமைத்துவ நாடான பின்லாந்து கொண்டு வரவிருந்த தீர்மானம் எதிர்வரும் மார்ச் மாதம் வரை பின்போடப்பட்டுள்ளதாக ஹெல்சிங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. இலங்கையில் இடம் பெற்று வரும் ஆட்கடத்தல்கள், படுகொலைகள், ஆட்கள் காணாமற் போதல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்தி குற்ற வாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இதேவேளை இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்கு இந்தியாவின் முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் பி.என்.பகவதி தலைமையிலான சர்வதேச விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த செப்டெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு பின்லாந்து முயற்சித்த போது பல்வேறு ஆசிய நாடுகளாலும் இஸ்லாமிய நாடுகளின் அமைப்பினாலும் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பை அடுத்து அம்முயற்சி கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் படையணிகள்: சீறுகிறது ஐ.நா.!

புலிகள் இயக்கம் உட்பட பதினான்கு ஆயுதக் குழுக்களும் இரண்டு அரசாங்கங்களும் சிறுவர்களை தமது படையணிகளில் சேர்த்துக் கொள்வதாக அமெரிக்காவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு குற்றம்சாட்டியிருக்கிறது. இலங்கையின் புலிகள் அமைப்பு, உகண்டாவில் லோர்த்ஸ் எதிர்ப்பு இராணுவம், நேபாளத்தில் மாவோயிஸ்டுகள் உட்பட பல்வேறு ஆயுதக் குழுக்கள் தமது படையணிகளில் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வதாக மனித உரிமைகள் அமைப்பின் செயற்பாட்டாளரான ஜோ பெக்கர் தெரிவித்துள்ளார். கடந்த 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சிறுவர்களைப் படையணிகளில் சேர்த்துக் கொள்ளும் விவகாரம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

## பஞ்சாயத்து முறையும் இலங்கையும்

இந்தியாவில் கடந்த இரு தசாப்தங்களாகப் பின்பற்றப்பட்டுவரும் பஞ்சாயத்து ராஜ்யமுறை உள்ளூர் சமூகத்தவர்களுக்கு அதிகாரங்களைச் சிறந்த முறையில் பகிர்ந்தளித்துள்ளது. இதனால்தான் இலங்கையின் யதார்த்த நிலைக்கேற்ப இலங்கையில் அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதற்காக இந்தியாவின் பஞ்சாயத்து முறை பற்றி ஆராய்ந்து வருகிறோமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார். இந்தியாவின் டெஹ்ரான் நகரில் நடைபெற்ற ஆசிய மேயர்களுக்கான மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு சொன்னார்.

## இலங்கைக்கு நிதி உதவி

இலங்கைக்கான வருடாந்த ஐரோப்பிய நிதி உதவித் தொகை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. அடுத்த மூன்று வருடங்களுக்கான நிதி உதவித் தொகை 52 மில்லியன் யூரோக்களால் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது. ஐரோப்பிய உதவிக் கூட்டுத்தாபன அலுவலகத்தின் ஆசியப் பிரிவுப் பணிப்பாளர் எரிச் முல்லர் இத் தகவலை பிரசல்ஸில் தெரிவித்தார். ஐரோப்பாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களினூடாகவே இந்த நிதி உதவி வழங்கப்படும் என்றும், இத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் நடவடிக்கைகளை தமது அமைப்பு மேற்பார்வை செய்யும் என்றும் அவர் மேலும் சொன்னார்.

தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: -011 4-514282
தொலை நகல் (Fax):-011 4-513266
ஈ-மெயில்: (E-mail):-
murasu@sltnet.lk

## முரசம்

### மீண்டும் போர் பின்னடைவுக்கே வழிவகுக்கும்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

**புலிகளின்** தலைவர் பிரபாகரனின் பிறந்த நாள் உரையானது வழமை போல் ஏமாற்றப்பட்ட அனுபவத்தையும், தோல்வி கண்ட போக்கையும் குறிப்பிட்டதோடு, இனியும் சமாதானப் பேச்சுக்கள் ஊடாகத் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வைக் காண முடியாது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ் மக்கள், போக்குவரத்துப் பிரச்சினைக்கும், உணவுப் பிரச்சினைக்கும் முகம் கொடுத்துள்ளனர் என்றும், சொந்த வாழ்விடங்களை இழந்து அகதிகளாகவும் ஆக்கப்பட்டுள்ளனர் என்றும் கவலை தெரிவித்திருக்கும் பிரபாகரன், போர் ஒன்றை நடத்துவதனூடாக இந்தப் பிரச்சினைகளை அதிகரிக்கப் போகிறாரா? இல்லை குறைக்கப் போகிறாரா? என்பதை ஒவ்வொருவரும் சிந்திக்க வேண்டும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நிராகரித்து புலிகள் போரைத் தொடங்கியதனூடாகத் தமது 17,000 உறுப்பினர்களையும், பொதுமக்களையும், 6,000 வரையான மாற்றுக் கருத்தாளர்களையும் அழித்ததோடு, சொத்துக்களையும் அழித்ததுதான் இதுவரை கண்ட பலாபலனாக இருக்கிறது. இந்த நிலையில் மீண்டும் போர்தான் வழி என்று தொடங்கப்போகும் பிரபாகரனின் இந்த முடிவின் மூலம் எஞ்சியிருக்கும் தமிழ் மக்களையும், அவர்களின் சொத்துக்களையும் அழிப்பதோடு - இளைஞர் - யுவதிகளையும் பலிகொடுக்கத் துணிந்து விட்டார் என்றே கருத இடமுண்டு.

ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்களுக்குக் கூடுதல் அதிகாரப் பகிர்வுடனான தீர்வை வலியுறுத்திவரும் இந்தியா உட்பட்ட சர்வதேச சமூகம் ஒருபோதும் புலிகளின் தனிநாட்டுப் பிரகடனத்தை அங்கீகரிக்கப் போவதில்லை என்பதை நன்கு தெரிந்திருந்தும் பிரபாகரன், சர்வதேச சமூகம் தனது நிலைப்பாட்டை அங்கீகரிக்க வேண்டுமெனக் கேட்டிருப்பது இராஜதந்திரமற்ற போக்காகவே தெரிகிறது. தவிரவும் இலங்கையில் தனியான நாடு உருவாகுவதை இந்தியா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை; அதுவரையும் இந்தியா மௌனமாக இருக்கப் போவதுமில்லை என்பதையும் நினைவில் கொண்டிருப்பது நல்லது. அடுத்தபடியாக, எந்தவொரு சிங்கள அரசும் தமிழர்களுக்குத் தீர்வைத் தராது; இந்தச் சூழலில் சிங்கள அரசுகளிடமிருந்து தீர்வைப் பெறலாம் என இன்னுமின்னும் காத்திருப்பது பிரயோசனமற்றது என்று பிரபாகரன் கூறியிருப்பதன் பின்னணியில், புலிகளால் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் எதிர்காலம் எவ்வாறானதாக இருக்கப்போகிறது? அவர்கள் இலங்கை அரசின் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருப்பதும், அரசியல் வழிமுறையில் பிரச்சினைகளை முன்வைப்பதும் எந்த வகையில் பிரபாகரனின் கூற்றுக்கு ஏற்புடையதாக இருக்கும்?

உண்மையில் பிரபாகரனின் நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்வதாக இருந்தால், பாராளுமன்றப் பதவிகளும், அதனூடான அரசியலும் உடனடியாகத் தூக்கி எறியப்பட வேண்டும். அவ்வாறு நடக்குமா? அவ்வாறு நடக்காவிட்டால், பிரபாகரன் தமிழ் மக்களிடம் இரட்டை வேடம் போடுகிறாரா? அல்லது பிரபாகரனின் நிலைப்பாட்டை கூட்டமைப்பு எம்.பீக்கள் எதிர்த்து மாற்று வழியில் தமது அரசியல் பயணத்தில் நம்பிக்கை கொண்டு செயற்படப் போகிறார்களா? என்பதையும் காலம் வெளிக்காட்டும்.

கடந்த ஒப்பந்தக் காலத்தில் புலிகள் உளப்பூர்வமான சமாதான முயற்சிகளில் ஈடுபட்டார்களா என்ற கேள்வி பல தரப்பிலிருந்தும் எழுகிறது. புலிகளின் தலைவரின் கருத்துப்படி, புலிகள் சமாதான ஒப்பந்தத்தை மிகவும் மதித்து வன்முறைகளைக் கைவிட்டு சமாதானத்துக்காகப் பாடுபட்டதாகக் கூறுகிறார். அப்படியாயின் ஒப்பந்தக் காலத்தில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் கொல்லப்பட்டதையும், படையினர் கொல்லப்பட்டதையும், மாற்றுக் கருத்தாளர்கள் கொல்லப்பட்டதையும், பொதுமக்கள் தொடர்ந்தும் கொல்லப்படுவதையும், பிரபாகரன் ஏன் விலாவாரியாக ஆராய்ந்து பார்க்கவில்லை.

ஒப்பந்தக் காலமே ஒரு யுத்த காலமாக இருந்ததென்பதை தமிழ் மக்களும், சர்வதேச சமூகமும் நன்கு அறிந்ததுதான். புலிகளின் தாக்குதல்கள், படையினரின் பதில் தாக்குதல்கள், தற்கொலைத் தாக்குதல்கள், படுகொலைகள் என்று யுத்த காலத்துக்கு சற்றும் குறைவில்லாத காலமாகவே புலிகள் கூறும் ஒப்பந்தக் காலம் கழிந்தது. ஆகவே, இனியொரு போர் என்பது மேலும் மனித உயிர் அழிவுகளையும், சொத்து அழிவுகளையும், நிச்சயமற்ற வாழ்வையும் தோற்றுவிக்குமே தவிர, வேறொன்றுமில்லை. 'புலிகள் போராட்டத்தின் மூலம் எதையும் சாதிக்கப் போவதில்லை. எங்களை நிம்மதியாக வாழவிடுங்கள்' என்பதுவே தமிழ் மக்களினதும் நாட்டு மக்களினதும் ஒருமித்த கோரிக்கையாகவுள்ளது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# இறுகும் இலங்கைப் பிரச்சினையில் இணைத்தலைமை நாடுகள், இந்திய பங்களிப்பு!

**எக்ஸ்ரே ரிப்போர்ட்**

"**பண்டைய** மகாவம்ச காலத்திலிருந்தே சிங்கள தேசம், தமிழர் தேசத்தை அடக்கியொடுக்கி வந்திருக்கிறது. நாம் போர் வெறியர்களல்லர். நாம் சமாதானத்தில் ஆழ்ந்த அக்கறை கொண்டவர்கள். அதற்காகவே பல தடவைகள் முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், சிங்கள - பௌத்த பேரினவாதிகள் எம்மீது தொடர்ச்சியாகவே யுத்தத்தைப் பிரகடனப் படுத்தி வந்திருக்கிறார்கள். இருந்தும் நாம் எமது சமாதான முயற்சிகளில் தளரவில்லை. கடந்த 2001ஆம் ஆண்டும் நாமே ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து, மீண்டும் சமாதானத்துக்கான ஒரு சந்தர்ப்பத்தைச் சிங்கள தேசத்துக்கு வழங்கினோம். 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி ரணில் விக்ரமசிங்காவுடன் யுத்த நிறுத்த ஒப்பந் தத்திலும் கைச்சாத்திட்டோம். ஆனால் ஆட் சிக்கு வந்த விக்கிரமசிங்கா, சந்திரிகா பண்டாரநாயக்கா, ராஜபக்ஷ ஆகிய அனை வருமே யுத்த முனைப்புடன்தான் செயற்பட்டார் கள். யுத்த நிறுத்த காலத்திலும், எமது மக்கள் மீதும் எமது மண் மீதும் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. வகைதொகையின்றி எமது மக்கள் கொல்லப்பட்டார்கள். மகிந்த ராஜபக்ஷ பதவிக்கு வந்தார். அவரை ஒரு யதார்த்தவாதியென்ற கணிப்பில் தமிழர் தேசத் தின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஓர் சந்தர்ப் பத்தையும் அதற்காகக் காலக்கெடுவையும் வழங்கினோம். ஆனால் அவரும் ஏனைய சிங்கள பௌத்த பேரினவாதிகளைப் போல, எம் மக்கள் மீது அடக்குமுறைகளைக் கட்ட விழ்த்து விட்டார். இராணுவ முனைப்பும் பொருளாதாரத் தடையும் எம் மக்களைப் பெரி தும் வாட்டிவதைத்தன. உணவுத் தடை, மருந் துத்தடை, பொருளாதாரத் தடை, மீன்பிடித் தடையென்று பல்வேறு சொல்லொணாத் துயரங்களை எமது மக்கள் சந்தித்தார்கள். சிங்கள தேசம், எமது மக்களின் பிரச்சினை களுக்கு நியாயமான தீர்வுகளைத் தேடித் தருமென்பதில் எமது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள். எனவே தனித் தமிழ் தேசத்துக்கான போராட்டத்தை முன்னெடுக்க நாம் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம். இதற்காக புலம்பெயர்ந்து வாழும் எமது சகோதரர்களின் உதவியையும் அன்பையும் வேண்டி நிற்கின் றோம். சர்வதேச சமூகத்தினதும் நீதிக்காகப் போராடும் நாடுகளினதும் ஆதரவையும் ஆசியையும் எதிர்பார்க்கின்றோம். எமக்காகக் குரல் கொடுக்கும் தமிழகக் கட்சிகளுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

புலி இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், இந்த வருடம் நிகழ்த்திய தனது பிறந்த நாள் உரையின் சாராம்சம் இதுதான். இதனை இன்னும் இரத்தினச் சுருக்கமாகச் சொல்வ தானால், தனித் தமிழ் நாட்டை நிறுவும்வரை யுத்த முனைப் பிலேயே புலிகள் இயக்கம் தொடர்ந்தும் ஈடுபடப் போகிறதென்பதே இதன் அர்த்தம் அதாவது, ஒஸ்லோவில் சமஷ்டிப் பொறிமுறை யொன்றினைக் காண்பதற்கு இலங்கை அரசுடன் சேர்ந்து செயற் படுவோமென்றெல்லாம் புலிகள் இயக்கம் கூறியது வெறும் பம் மாத்து என்பதே இறுதி ஆராய்வில் கிடைக்கும் சாராம்சமாகும்.

பிரபாகரன் தனது உரையை நிகழ்த்திய அதே தினம், இந்தியாவில் சஞ்சிகையொன்றின் செய்தி ஆசிரியர்கள் மத்தியில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, "எல்.ரி.ரி.ஈ. இயக்கம் விடுதலை அமைப்பல்ல. அது பிரிவினை கோரிப் போராடும் பயங்கரவாத அமைப்பு. தமக்கு விரோதமான கருத்துக் களைக் கொண்டவர்களைக் கொன்றொழித்த, ஜனநாயக விரோத, பயங்கரவாத அமைப்பு" என்று தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் நீண்ட உரைக்கு, ஜனாதிபதியின் இந்தக் கருத்து, பதில் சொல்லுவது போல அமைந்துள்ளது. பிரபாகரன் வன்னியிலிருந்து உரை நிகழ்த்துவதற்கு முன்னதாகவே, ஜனாதி பதி, இந்தியாவில் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். என்றாலும் பிரபாகரன் என்ன பேசுவார்? எதனைப் பற்றிப் பேசுவார்? என்பதைக் கடந்த பதினைந்து வருடங்களாகப் பிரபாகரன் நிகழ்த்தி வந்த உரைகளைத் திரும்பிப் பார்த்தவர்கள், இதனை இலகுவில் புரிந்து கொள்ள முடியும்.

இதனால்தானோ என்னவோ, அரசாங்கத்தின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல, பிரபாகரனின் உரைபற்றிய தனது கருத்தை மிக நாசூக் காக வெளிப்படுத்தியிருக்கிறார். பிரபாகரனின் உரையில் ஒன்றும் புதுமையில்லை. முன்பு சொன்னவற்றைத் தான் திரும்பவும் சொல்லி யிருக்கிறார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஒரு யதார்த்தபூர் வமான அரசியல்வாதியெனக் கடந்த வருட உரையில் வர்ணித்த பிரபாகரன், தமிழ் மக்களின் பிரச்சினைத் தீர்வுக்கு ஒரு வருடகால அவகாசத்தையும் கொடுப்பதாகக் கூறியிருந்தார். இவ்வாறு கூறி இரண்டு வாரங்கள் கழிந்ததும் வன்செயல்களையும் தாக்குதல் களையும் கட்டவிழ்த்து விட்டார். அவர் வெறும் ஏமாற்றுப் பேர்வழி. பயங்கரவாத நடவடிக்கைகளே அவரது முக்கிய செயற்பாடு. தம்மைச் சமாதான விரும்பியென அழைத்துக் கொள்ளும் இந்தப் பிரபாகரன்தான் பௌத்தர்களின் புனித தலமான தலதா மாளிகை யைத் தாக்க உத்தரவிட்டவர். காத்தான்குடியிலும் ஏறாவூரிலும் நூற்றுக்கணக்கான அப்பாவி முஸ்லிம்களைக் கொன்றொழித்தார் கள்" என்று தெரிவித்த கருத்தும் பிரபாகரனுக்கு அளித்த பதில் போல் தென்படவில்லையா?

பிரபாகரன் உரை நிகழ்த்திய அதே தினத்தன்று, கலைஞர் கருணாநிதியின் மகள் கவிஞர் கனிமொழியின் தலைமையில் நடிகர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட பலர், சென்னை வள்ளுவர் கோட்டத்தில் ஈழத் தமிழர் பிரச்சினையை வலியுறுத்தி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதத்தை நடத்தி யிருந்தனர். நிகழ்வின் முடிவில் உரையாற்றிய கனிமொழி, பொருளாதாரத் தடையை நீக்கு, தமிழர்களின் மனித உரிமை களைப் பாதுகார் ஏ-9 பாதையைத் திற போன்ற பல தீர்மானங் களை வலியுறுத்தினர். அதாவது இலங்கைத் தமிழர் பிரச்சினை யில் அரசியல்வாதிகள் மட்டுமல்ல. இனம், சமூகம், சார்ந்த சக்திகளும் குரலெழுப்ப வேண்டுமென்று கூறியிருந்தார். கருணா நிதியின் மனைவி இராஜாத்தி அம்மாளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் விரும் பியோ விரும்பாமலோ, கலைஞர் கருணாநிதியின் குடும்பம் எடுத்த இருமுனை நடவடிக்கை இது.

இலங்கையில் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் ஒருபுறம். மனித உரிமை மீறல்கள் மறுபுறம். பட்டவர்த்தனமாகச் சொல்வதானால், யுத்தத்தில் சம்பந்தப்பட்ட இரு தரப்புகளுமே மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றன என்பது உண்மைதான். புலிகளுக்கு ஆதரவளிக்கவும் முடியாது. இலங் கையில் அப்பாவித் தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினைகள், துன்ப துயரங்களுக்காக குரலெழுப்பாமல் இருக்கவும் முடியா தென்ற இரண்டும் கெட்டான் நிலையே இது தமிழக முதல் வருக்கும். இதே நிலைதான், மத்தியில் தி.மு.க., பா.ம.க. போன்ற கட்சிகளுடன் இணைந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் இந்திய அரசுக்கும் இதனால்தான் இடியப்பச் சிக்கல் நிலை. இதனால்தான் அரசியல் தீர்வு குறித்து இலங்கைக்கு அழுத்தமும் ஆலோசனை யும் தெரிவித்து வரும் இந்திய மத்திய அரசு, இங்கு இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களுக்கெதிராகவும் பாரிய சத்தமின்றிக் குரல் கொடுக்கிறது. இரண்டாவது ஜெனீவாப் பேச்சுவார்த்தை, ஏ-9 பாதையில் தடம் புரட்டப்பட்ட பின்னர் நிகழ்ந்த பல்வேறு தொடர் முயற்சிகளின் பிந்திய கட்டங்களே மேலே குறிப்பிடப்பட் டுள்ளன. இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கென ஜெனீவா மேசைக்கு வந்த புலிகள், விக்கிரமாதித்தன் கதையில் வரும் வேதாளத்தைப் போல, மீண்டும் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக் கொண்டார்கள். அவர்களை முருங்கை மரத்திலிருந்து கீழே இறக்கி, மீண்டும் சமா தான மேசைக்குக் கொண் வரும் முயற்சிகளில் இணைத் தலைமை நாடுகளும் சர்வ தேச சமூகமும் மீண்டும் பகீரத முயற்சிகளில் இறங்கியுள்ளன. வாஷிங்டனில் கூடிய இணைத் தலைமை நாடுகள், இலங்கை யில் வன்செயல் அதிகரிப்புக்கு அரசாங்கம் - புலிகள் ஆகிய இரு தரப்புகளுமே காரண மென்று குற்றஞ்சாட்டியதோடு, ஏ-9 பாதைத் திறப்பு உட்பட வடக்கு - கிழக்கு மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையில் கூடிய அக்கறை செலுத்த வேண்டுமென்றும் இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தின. அதேவேளை இலங்கைப் பிரச்சினைக்கு இலங்கையர்க ளாலேயே தீர்வு காணப்பட வேண்டுமென்றும், இந்து சமுத் திரப் பிராந்தியத்தில் சமாதா னம், ஸ்திரத்தன்மை பேணப்படு வதற்காக, இலங்கைப் பிரச்சினையில் இந்தியா ஈடுபாடு அதிகம் காட்ட வேண்டுமென்றும் இணைத் தலைமை நாடுகள் வலியுறுத் தியிருக்கின்றன.

யுத்தத்தில் சம்பந்தப்பட்டவை அரச தரப்பும் புலிகள் தரப் பும்தான். யுத்த நிறுத்தம் பற்றிய பேச்சுவார்த்தையில் அந்த இரு தரப்புகளும் மட்டும் கலந்து கொள்ளலாம். ஆனால் யுத்தத் தில் எவ்வகையிலேனும் சம்பந்தப்படாத அப்பாவி மக்களைப் படைகள் காய்களாக்கி, யுத்த சக்திகள், அவர்களின் தலையில் துன்ப, துயரங்களைச் சுமைகளாக ஏற்றி விடுகின்றன. புலிகள், அப்பாவித் தமிழ் மக்களைக் கேடயங்களாகப் பயன்படுத்தி, படையினர் மீது தாக்குதல்களை நடத்துவதானது, மிகக் கொடூர மான பயங்கரவாத நடவடிக்கையாகும். புலிகளின் வன்செயல் களும் தாக்குதல்களும்தான் யாழ்.குடா மக்களையும் வாகரை மக்களையும் அத்தியாவசியப் பொருட்களுக்காகவும் அவசியத் தேவைகளுக்காகவும் ஆலாய்ப் பறக்க வைத்தன என்பது உண் மையே. ஆனால், புலிகளோடு கிஞ்சித்தேனும் சம்பந்தப்படாத அப்பாவி மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் அபிலாஷை களுக்கும் தீர்வு காண வேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு உண்டு. "எங்கட தமிழ் சனத்துக்காகப் போராடுகிறோம்," தமிழீழத்துக்காகப் போராடுகிறோம் என்று கூறிக்கொண்டு தாக்கு தல்களை ஆரம்பித்துப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் புலிகள், பாதிக்கப்படும் மக்களுக்காக அரசாங்கத்தை எதிர்பார்த்து நிற்பது மாபெரும் கபடத்தனம். மாவிலாறில் தொடங்கி, சம்பூர், மூதூர் ஊடாக வந்து, ஆகஸ்ட் பதினொராம் திகதி தமிழீழத்துக்கான தாக்குதல்களைப் புலிகள் ஆரம்பித்திருக்காவிட்டால், அப்பாவித் தமிழ் மக்கள் அவலங்களைச் சந்தித்திருக்க மாட்டார்களென்ற

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்)



இந்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியை கடந்த 28 ஆம் திகதி சந்தித்துப் பேசிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும்.

## ஊரிலிருந்து....



*வருஷத்தில ஒருக்கா வாய்திறக்கிற புலித்தலைவர் இந்த முறை கா.வே.பாலகுமார் எழுதிக்குடுத்த உரையை வாசிச்ச கையோட அந்த 21 பேரும் தங்கட பதவியைத் துறக்கப்போமீனம் எண்டு ஊரில வெகு வேகமாய் ஒரு கதை பரவீச்சுது. 'ஆனால் அது ஒருக்காலும் நடக்காது' எண்டு எந்த பரபரப்பும் காட்டிக் கொள்ளாமல் மாஸ்டர் சொன்னார். பிரபாகரனே ராஜினாமாச் செய்யுங்கோ எண்டு சொன்னாலும் அந்த 21 இல முக்கால்வாசிப்பேர் செய்யமாட்டீனம். 5 வருஷம் பதவி முடிஞ்ச கையோட பார்லிமன்ட் பென்ஷனோடை வெளிநாட்டில செட்டிலாகிறதுதான் அவையின்ட இறுதித் தீர்மானம். அது வரையில அரச பாதுகாப்பிலதான் இருப்பீனம். இது பிரபாகரனுக்கும் தெரியும் எண்டா மாஸ்டர் ஓகே. அப்பிடியோ விஷயம்?*

# தற்போதைய யாழ்ப்பாணம்!

## சிறப்புப் பார்வை

அலசுவது

- மதியூகி -

**திறந்த** வெளிச் சிறையாகவும், பட்டினிக்கு உள்ளாகியிருக்கும் கொடுமையான பகுதியாகவும் யாழ்ப்பாணத்தை ஊடகங்களும், பிரமுகர்களும் வர்ணிக்கின்றனர். அதுபற்றி அவ்வப்போது தகவல்களைத் தெரிந்து கொண்டாலும் நேரடியாக நிலைமையைப் பார்க்கச் சந்தர்ப்பம் கிட்டியது.

யாழ்ப்பாணத்தை அதன் தொன்மையோடு பின்னோக்கிப் பார்ப்பது அவசியமற்றதாகவே இருக்கிறது. ஏன் என்றால் தொன்மைக்கும், சமகாலத்துக்கும் பாரிய வித்தியாசம். 1997ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்ட பின்பு - 1997ஆம் ஆண்டு தொடக்கம் 2001ஆம் ஆண்டு வரையினா காலப்பகுதியில் - யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் ஒரு உற்சாகமும், நம்பிக்கையும் இருந்தது. பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு என்பவற்றில் ஆர்வம் காட்டினர். பொருட்களும், போக்குவரத்தும் கடல் மார்க்கமாகவே இருந்தபோதும், அதை எதிர்கொண்டு மக்கள் வாழ்ந்து வந்தார்கள். 2002ஆம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட போது, யாழ்ப்பாணத்தில் வசித்த மக்கள் உண்மையில் மகிழ்ச்சி கொண்டனர். பாதை திறப்பு மட்டுமல்லாது, இருக்கக்கூடிய பாதுகாப்பு அழுத்தங்களும் குறையும் என எதிர்பார்த்தார்கள்.

இதில் பாதை திறப்பு என்பது மக்களுக்கு மேலும் நம்பிக்கையைக் கொடுத்தது. பொருட்களுக்கு வரி, வாகனத்துக்கு வரி, நபர்களுக்கு வரி என்று புலிகள் விதித்த அத்தனை வரி விதிப்புகளுக்கும் பணத்தை வாரி இறைத்து விட்டு, தமது காரியங்களைச் செய்வதில் ஈடுபட்டனர். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி புலம் பெயர்ந்து போன எம்மவர்களும் தாயகம் வந்து யாழ்ப்பாணம் சென்று உறவுகளையும், சொத்துக்களையும் பார்த்து விட்டுச் சென்றனர். ஆனால், பாதுகாப்பு நெருக்கடிகள் நினைத்த அளவில் குறைக்கப்படவில்லை என்ற ஏமாற்றம் மக்கள் மத்தியில் இருந்தது.

அரசியல் பணி செய்வதற்கென்று யாழ்ப்பாணம் வந்த புலிகள், மாணவர்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம் செய்யவும், படையினருக்கு எதிராகத் தாக்குதல்களைச் செய்யவும், மக்களிடம் தோட்டத்தில் உள்ள மரத்துக்காகவும், விமானம் மூலம் வருபவர்களுக்காகவும் வரி அறவிட்டனர். இந்தக் கெடுபிடிகளானது ஒப்பந்தத்துக்கு முன்னர் இருந்த நிலையை விட மோசமாக்கியது.

இவ்வருடம் ஆகஸ்ட் 11ஆம் திகதி யாழ்ப்பாணத்தை நோக்கிப் புலிகள் தாக்குதல்களை ஆரம்பித்ததைத் தொடர்ந்து பாதை மூடப்பட்டதும், மக்களுக்குப் பொருட்கள் தட்டுப்பாடும், போக்குவரத்துப் பிரச்சினையும் பெரியளவில் வாட்டியது. யார் என்ன சொன்னாலும் யாழ்ப்பாணத்தில் தற்போதைய நிலை என்பது பரிதாபத்துக்குரியதாகவே உள்ளது.

அரசாங்கம் குறிப்பிட்ட பொருட்களை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியபோதும், சங்கக் கடைகள் ஊடாகவும்,




பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வரிசையில் காத்திருக்கும் பொது மக்கள்.

இராணுவத்தினர் நடத்தும் நலன்புரி நிலையங்களூடாகவும் பொருட்கள் விற்கப்படுகின்றபோதும், யாழ்ப்பாணத்தில் வாழும் மக்களின் முழுத் தேவையையும் அது பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை.

பங்கீடுகளில் நடக்கும் முறைகேடுகள், பதுக்கல்கள் என்பவற்றாலும் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. சிலருக்கு நிறைவான பொருட்கள் கிடைக்கும் போது, அநேகமானவர்களுக்கு மிகவும் சொற்பமான அளவிலேயே பொருட்கள் கிடைக்கின்றன. இதுவரையும் புழுக்கொடியல், ஒடியல் என்பனவற்றைக் கொண்டே மக்கள் தங்கள் பசியைப் போக்கினர். இப்போது அதுவும் முடிந்துள்ளது. இப்போது யாழ்ப்பாணத்தில் சாப்பாட்டுப் பொருளாகப் பார்க்கப்படுவதும், மலிவாகக் கிடைப்பதும் வாழைப்பழம் தான். அதைத் தவிர, சிற்றுண்டிச்சாலைகளில் வடை, ரோல்ஸ், சூசியம் என்பன காலையில் மட்டும் காணக்கூடியதாக இருக்கின்றன. இவற்றையும் கடைக்காரர்கள் செய்வதாகத் தெரியவில்லை. வீடுகளில் செய்து கடைகளில் விற்பனைக்குக் கொடுக்கப்படுகின்றன.

காலை தவிர்ந்த நேரங்களில், பசியைத் தீர்த்துக்கொள்ள பணிஸ், ரஸ்க் என்று மாச் சாப்பாடு கிடைப்பது பெரும் சிரமமானதாக இருக்கிறது.

மரவள்ளிக்கிழங்கினால் செய்யப்படும் உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன. அரசினால் அனுப்பப்படும் பொருட்கள் எல்லா மக்களுக்கும் சரிசமமாகக் கிடைக்கப்பண்ணுவதற்கு அரசாங்க அதிகாரிகள், குறிப்பாகக் கூட்டுறவுச் சங்கங்கள் இன்னும் சிறப்பாகச் செயலாற்ற வேண்டியது பெரும் தேவையாக உள்ளது என்று மக்கள் கூறுகின்றனர். தற்போதைக்கு அரச சேவையில் திருப்தி என்று தபால் சேவையை மட்டுமே ஓரளவுக்குக் கூறலாம். யாழ்ப்பாணத்துக்கு வெளியில் இருந்து உறவுகளாலும், நண்பர்கள், தெரிந்தவர்களாலும் யாழ்ப்பாணத்தில் இருக்கும் மக்களுக்குத் தபால் மூலமாக அனுப்பப்படும் பொதிகளை உரியவர்களிடம் கிடைக்கச் செய்வதில் தபால் ஊழியர்கள் கூடுதல் சேவையைச் செய்கின்றனர்.

பொதிகள் அனுப்புவதில் இருந்த துஷ்பிரயோகங்கள், கவலையீனங்கள் என்பன ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் கவலை தருவதாக இருந்தது உண்மை. ஆனால் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் தபால் சேவையாளர்கள், மக்களின் உணர்வுகளைப் புரிந்து செயல்படுவது கொஞ்சம் ஆறுதலளிக்கிறது என்கின்றனர்.

உணவுக் கட்டுப்பாட்டைப் பெரிதும் பேண வேண்டிய நீரிழிவு நோயாளர்களுக்குப் பொருட்கள் தட்டுப்பாடு தற்போதைய சூழலில் பெரும் பிரச்சினையாக உள்ளது. அநேகமாக இந்த நோயாளிகள் மூன்று வேளையும் சோறு சாப்பிடுகின்ற நிலைதான் உள்ளது. அதுபோல் பால்மாவுக்காக ஏங்கும் குழந்தைகளின் நிலைமையும் பரிதாபமானதாக இருக்கிறது. தேனீர்தான் கொடுக்கப்படுகிறது. தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடான இலங்கையில், யாழ்ப்பாண மக்களுக்கு தேயிலை கிடைப்பது குதிரைக் கொம்பான விடயமாகவுள்ளது. கடந்த மூன்று மாதத்தில் 100 கிராம் தொடக்கம் 500 கிராம் வரையான தேயிலைதான் கிடைக்கக்கூடியதாக இருந்துள்ளதாகச் சிலர் தெரிவித்தனர். இதேபோல் கர்ப்பிணிப் பெண்களுக்கான போஷாக்கு உணவுகள் கிடைப்பதும் பெரும் சிரமமாக உள்ளது. கர்ப்பிணிப் பெண்கள், மந்த போஷனையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் தரப்புச் சேவகர் ஒருவர் கூறினார்.

இதை விடவும் பொருட்களைக் கூட்டுறவுக் கடைகளிலும் ஏனைய கடைகளிலும் கொள்வனவு செய்வதற்காக காலையிலிருந்து பகல் வரை வெயிலில் கூட நீண்ட வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை இன்னும் தொடர்கிறது. குடாநாட்டைப் பொறுத்தவரை பிள்ளைகளை வெளிநாட்டுக்கும், யாழ்ப்பாணத்துக்கு வெளியிலும் அனுப்பிவிட்டு இருப்பவர்கள் மற்றும் பிள்ளைகளை யுத்தத்துக்குப் பறிகொடுத்தவர்கள் என்று இருப்பவர்களாக வாழும் வயோதிபர்களின் எண்ணிக்கை முப்பது ஆயிரத்துக்கும் அதிகம். இவர்கள் தவிர, ஓய்வூதியம் பெறுபவர்களும் கணிசமானளவு இருக்கின்றனர். இத்தகையவர்களுக்கு மணித்தியாலக் கணக்காக நீண்ட வரிசைகளில் நின்று பொருட்களைக் கொள்வனவு செய்வது இயலாத காரியமாகவே இருக்கிறது. அதிலும் மிகவும் இயலாதவர்கள் தங்களுக்காக வரிசையில் நின்று பொருட்கள் கொள்வனவு செய்து தருவதற்காக ஒருவருக்கு நூறு ரூபாய் கொடுப்பதாகத் தெரிவித்தனர். இவ்வாறு பணத்துக்கு ஆள்பிடித்துப் பொருட்களைப் பெற வேண்டிய நிலையில் இருக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் சுமார் 20000 பேர் யாழ்ப்பாணத்தில் தற்போதைக்கு இருக்கின்றனர் என்று அறிய முடிகிறது.

இவர்களைப் போல் குடும்பத் தலைவர்களை இழந்த விதவைகள்,

(தொடர்ச்சி 22ஆம் பக்கம்...)

**மணித்தியாலக் கணக்காக நீண்ட வரிசைகளில் நின்று பொருட்களைக் கொள்வனவு செய்வது இயலாத காரியமாகவே இருக்கிறது. அதிலும் மிகவும் இயலாதவர்கள் தங்களுக்காக வரிசையில் நின்று பொருட்கள் கொள்வனவு செய்து தருவதற்காக ஒருவருக்கு நூறு ரூபாய் கொடுப்பதாகத் தெரிவித்தனர்.**

## அதிரடி அய்யாத்துரை



**ஒப்பந்தத்துக்குப்** பிறகு கைத் தொலைபேசி வசதிகள் குடாநாட்டுக்குப் பாவனைக்கு வருவதற்கு, குறித்த கம்பனிகள் ரெண்டெழுத்தாருக்கு ஒரு தொகைப் பணத்தைக் கொடுத்திச்சினம் எண்டதை முன்னமே சொல்லியிருக்கிறன். இப்ப ஒரு புதுக்கதை கசியத் தொடங்கியிருக்குங்கோ. குடாநாட்டில சேயிக்கு லோன் கொடுக்கிற பெயரில இயங்கிற ஒரு வங்கி திறக்கப்படவும் ரெண்டெழுத்தாருக்கு பெட்டிகள் கொடுக்கப்பட்டதாம். அந்த வங்கியின்ர சொந்தக்காரரான தேச மான மான கொத்தலாவ என்பவர், ரெண்டெழுத்தாரின்ர தலைவருக்கு குளிர் பிடிக்கிற அளவுக்கு ஐஸ் வச்சுப் பேசினவர். அவரைக் கைது செய்யுங்கோ, விசாரிங்கோ எண்டினம் காவி உடுப்புக்காரர் சொல்லிச்சினம். தேசமான்னியமானவர் அப்புடிக் கதைச்சதுக்கு காரணமாமுங்கோ. குடாநாட்டில ரெண்டெழுத்தார் அவரின்ர வங்கி ஊடாகத்தான் பணப்பரிமாற்றம் செய்யினமாம் எண்டொரு சந்தேகம் இருக்குது. அது உண்மையோ எண்டு விசாரிச்சால் பிரச்சினை, அப்புடியெண்டு சொல்லாமல், ரெண்டெழுத்தாரைப் பற்றிக் கதைச்சதாலதான் தன்ர வங்கி பிஸினஸை செக் பண்ணினம் எண்டு ஒரு பிரசாரத்தை எடுக்கலாம் எண்டதும் அவரின்ர நோக்கமாம். குடாநாட்டில இருந்து பணம் ரெண்டெழுத்தாருக்கு சேயிக்கு லோன் குடுக்கிற வங்கி ஊடாகத்தான் போகுதாம் எண்டினம் விஷயம் தெரிஞ்சவை. யார் கணக்கு வச்சிருக்கினம், யாரின்ர கணக்குக்குள்ளால பணம் அதிகமாகப் போய்ச் சேருதெண்டு பிடிச்சால் பல உண்மைகள் வெளிக்கிடுமெண்டு சொல்லினமுங்கோ...

**மத்தியஸ்தம்** செய்ய வாரன் எண்டு வந்த எரிக்கானவர், ரெண்டெழுத்தாரின் தலைவருக்கு ஹோம் தியேட்டர் ஒண்டுக்கு அளவான தொலைக்காட்சி ஒன்றை அன்பளிப்புச் செய்தவர் எண்டொரு செய்தி வெளியாகி இருக்கு. அதையும் கருணா சொல்லியிருக்கிறார். தொலைக்காட்சியின்ர சைஸ் ஆறடியெண்டும் ஆங்கில ஊடகமொண்டுக்குச் சொல்லியிருக்கிறார். அவரின்ர பிறந்த நாளுக்கு கேக் வெட்டுவினம். எரிக்,கேக்காம தொலைக்காட்சி கொடுத்திருக்கிறார். உந்தத் தொலைக்காட்சியைக் குடுத்தாப்போல ஏக தலைவர் காலில விழுந்து கிடப்பார் எண்டு எரிக் கனவு கண்டிருப்பார். அது மட்டுமில்லையுங்கோ. பதினாறு மில்லியன் நோர்வேஜியன் குரோனரும் குடுத்திச்சினமாம். எல்லாத்தையும் வேண்டிக்கொண்டு எரிக்கருக்கு பெரிய ஆப்பை சீவி அடிச்சுப்போட்டு ரெண்டெழுத்தார் இருக்கினம். கருணா சொல்லாட்டில், மத்தியஸ்தம் மட்டும்தான் செய்தனாங்கள் மத்ததெல்லாம் ஒண்டுமில்லை எண்ட கணக்காக எரிக் எகிறிக் குதிச்சிருப்பார். உந்த மாதிரி இன்னும் என்னென்ன பூதம் கிளம்ப இருக்குதோ, யார் கண்டது.

ஒலிபரப்புச் சாதனம், தொலைக்காட்சி, பணம் எண்டு அள்ளிக் குடுத்தால் ரெண்டெழுத்தார் மசிஞ்சுடுவினம் எண்டு நினைச்ச நோர்வேயையும், அதற்குப் பின்னால நிண்ட சர்வதேசத்தையும் எப்பிடிங்கோ நடுநிலைமையாளர்களாகக் கருதுவது எண்டு பெரும்பான்மை மக்கள் மத்தியில இருக்கிற சந்தேகத்தை எப்புடி இல்லாமல் செய்யிறது...

**வடக்கு** - கிழக்கில ஆம்பிளையளை வீட்டில வச்சிருக்க சனம் ரொம்பப் பயந்து போய் இருக்குதுகளுங்கோ. குடாநாட்டில தான் எண்டில்லாமல், திருவாண மலையிலையும் கேள்வி கேட்பாரில்லாமல் கொலைகள் நடக்குதுங்கோ. எல்லாக் கொலையும் ஏதோ திட்டத்தோடை - ஏதோவொரு கட்டத்துக்கு முன்னம் நடத்தப்பட்டாகணும் எண்டு திட்டம் போட்டு நடக்குமாப் போலை நடக்குது. பெண்டாட்டிமார், தங்கட புருஷன்மாரை ஏதாவது நாட்டுக்கு அனுப்பினால் நல்லதெண்டு காதில கையில கிடக்கிற நகைகளை விற்றுப் போட்டு, கையில காசோடை திரியினம். இருக்கிறவை உப்பிடிச் செய்யினம். இல்லாதவை என்ன செய்யிறது எண்டு தெரியாமல் ஒவ்வொரு இரவிலையும் நாய் குலைச்சாலும், பூனை பாஞ்சாலும் பயந்து பயந்து தூங்கினம். அதுமட்டுமில்லாமல், வீட்டுக்காரர் கடைத் தெருவுக்குப் போனால் அவர் வீடு வந்து சேரும் வரைக்கும் இல்லாத கடவுளெல்லாத்தையும் கும்பிட்டுக் கொண்டு இருக்கினம். வீடுகளில ஆம்பிளையள் இருந்தாலும் யாரும் ஆக்கள் வந்தால் பொம்பிளையள் தான் கதைக்கினம். ஆம்பிளையளை வெளியால நடமாடக்கூட விடுகினமில்லை. உந்த நிலைமை தொடர்ந்து கொண்டிருந்தால் ஆம்பிளைகள் துணையில்லாத குடும்பங்களாகத்தான் ஊர் இருக்கப் போகுதெண்டு சனம் சொல்லினமுங்கோ. கொலைகாரர் யார் எண்டு ஒண்டும் தெரியுதில்லையுங்கோ. சாகிறவன் யார் எண்டதை வச்சுத்தான் கொலையாளி யாரா இருப்பான் எண்டதை சனம் லேசா கெஸ் பண்ணினமுங்கோ...

**தென்** இலங்கையில பல பகுதிகளிலையும், தலைநகரிலையும், சில முக்கியமான இடங்களையும், கட்டிடங்களையும், புகைப் படம் பிடிச்சிச்சினம் எண்டு கைது செய்யப் படுகிறவையைப் பார்த்தீங்கள் எண்டால், அநேகமான பேர் வெளிநாடுகளில இருந்து வந்தவை, இல்லாட்டில் வெளிநாட்டுக்காரரா இருக்கினம்.

அவை படம் பிடிச்சால் சந்தேகப்பட வாய்ப்பு ரொம்பக் குறைவுங்கோ. உந்த வாய்ப்பை ரெண்டெழுத்தார் சரியா பயன்படுத்துகினமாம். புலம்பெயர்ந்து வாழிற எங்கட சனத்திற்றச் சொல்லிக் கையில ஒரு சின்னக் கெமராவோடை நாட்டுக்கு வந்து பொரினர் எண்ட பாணியில படம் பிடிச்சுத் தாங்கோ எண்டினமாம். அவையும் அது ரிஸ்க் இல்லாத சிம்பிள் வேலைதானே எண்டு வருகினமாம். உதே மாதிரி சில வெள்ளைக்காரரையும் ரெண்டெழுத்தார் வேறு வேறு வழிகளிலை செட் பண்ணினமாம். உதுக்காக டொலர்களில அவைக்குச் செலவு செய்யினமாம். உந்தச் செய்தியை புலன் விசாரணை செய்யிற அதிகாரி ஒருவர் ரொம்பவும் சுவாரஸ்யமாகச் சொல்லுறாருங்கோ. சனங்களின்ட பணம் எப்புடியெல்லாம் போராட்டத்தில பயன்படுத்தப்படுகுது பார்த்தியளோ? உது மாதிரி ரெண்டெழுத்தார் இன்னும் பல வழிகளில பணத்தை வீசி வேலை செய்யினமாம். அதுகளையும் விரைவில அம்பலத்துக்குக் கொண்டு வருவம் எண்டும் சவால் விடுறாருங்கோ...

# மேகம்




## போவோம் ரசிப்போம்

**சில** பொழுதுகளில் வானத்தைப் பார்த்திருக்கிறேன். இள நீல வர்ணம் காட்டும் பரந்த வானில் மேகங்களின் ஊர்வலம் மிக ரம்மியமானதாக இருக்கும். மிகவும் உயரத்தில் பஞ்சுத் திட்டுகளாகவும், அதற்குக் கீழாகச் சிறிய குன்றுகள் போலவும் அலையும் மேகங்கள் பிடிமானம் இல்லாமல் மிதக்கும் காட்சி விபரிக்க விபரிக்க விரிவடையும் பிரமிப்புத் தரும்.

மதியப் பொழுதில் வானத்தைப் பார்த்து மேகத்தின் அழகை ஆராய்கின்றபோது அந்த மேகங்கள் விலங்குகளைப் போலவும், மனிதர்களைப் போலவும் வணக்கஸ்தலங்கள் போலவும் காட்சி தரும்.

உண்மையில் அவை உருவ வடிவில் இருக்கின்றனவா அல்லது என் மாயக் கற்பனையில் அவ்வாறு தெரிகின்றனவா என்பதெல்லாம் இன்னும் என் சிந்தனையில் அவிழ்க்கப்படாத முடிச்சுக்கள்.

அவ்வாறு மேக உருவங்களைக் கண்டதும், அருகில் இருப்பவர்களைக் கூப்பிட்டுக் காட்டுவேன். பார்த்துக் கொண்டிருக்கும் போதே கண்முன்னாலேயே அந்த மேக உருவம் அழிந்து கொண்டிருக்கும். மேகங்கள் நம்மைக் கடந்து இன்னொரு ஊரைத் தாண்டி, நாட்டைத் தாண்டி கண்டம் தாண்டி, நகர்ந்து கொண்டிருக்கின்றன. மேகம் பார்த்த கடல்கள் பற்றியும், கண்டங்கள் பற்றியும் நம்மால் அறிந்து கொள்ள முடியாது. மேகம் எப்படி இருக்கும், எதனாலானது என்ற கேள்விக்கு இதுவரை விடை தெரியவில்லை. புகைபோல் இருக்கிறது. கூட்டம் கூட்டமாகத் திரிகிறது. தெளிவாகத் தெரியும் ஆகாயத்தில் தனியே ஒரு மேகத்தட்டு, ஊர்வலம் செல்வதை எவரும் பார்க்க முடியாது. மேகங்கள் கூட்டமாகத்தான் ஊர்கின்றன.



தருவது : தேசன்

சூரியன் உதிக்கும்போதும், மறையும் போதும், கதிர்கள் மேகங்களை ஊடறுத்து தன் ஆயிரம் கரங்களை பூமி மீது ஊன்றுவதுபோல் இருக்கும். மேகங்கள் இல்லாத வெறுமையான ஆகாயத்தில் தனியே சூரியன் இருப்பதை எவரும் இரசிப்பதில்லை.

ஆகாயம் இவ்வாறு ஒவ்வொரு விநாடியும் காட்டும் அற்புதங்களை ரசித்துக் கொண்டேயிருக்கலாம், ஆகாயம் புதுமைகளின் பெட்டகம்.

நான் முதன் முதலில் விமானப் பயணம் செய்தது இந்தியாவுக்குத்தான். விமானத்தில் ஏறியவுடன் என் ஞாபகத்துக்கு வந்தது, என் நண்பர்கள் கூறியவைதான். விமானங்கள் மேகங்களிலும், புகார்களிலும் மோதும் போது தள்ளாடும் என்றும், அவற்றை ஊடறுத்துப் பயணிக்கின்றபோது புகைக் கூட்டத்துக்குள் பயணிப்பது போல் இருக்கும் என்றும் கூறினார்கள். அந்த அனுபவத்தை நானும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே அருகில் இருந்தவர்கள் என்ன நினைத்தாலும் பரவாயில்லை என்று விமானத்தின் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டு பயணித்தேன். விமானம் தள்ளாடியது. அசைந்தது. ஆனால் ஏன் இவ்வாறு செய்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் இந்தியாவில் விமானம் தரையிறங்குவதற்கு முன்னர் அந்த அழகிய உலகத்தின் ஒரு காட்சியைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. இப்போது நான் பஞ்சு மேகங்களுக்கு மேலாக இருந்தேன். மேகம் என் காலடியில் ஊர்ந்து கொண்டிருக்கிறது. சில மேகங்கள் ஊர்ந்துகொண்டிருக்கும் அதேவேளை, சில கூட்டு மேகங்கள் ஆங்காங்கே தரித்து நின்று கொண்டிருந்தன. தொலைவில் பிரமாண்டமானதொரு மேகத்துண்டு பெரும் பனிப்பாறை போல் தெரிந்தது. அந்த மேகத்தைப் பார்க்கப் பயமாகவும் இருந்தது. அழகு அதிகமாகின்றபோது அது ஆபத்தும், பயங்கரமும்தான் என்பதைத்தான் அந்தப் பிரமாண்டமான மேகம் உணர்த்தியது.

மழை மேகம் பற்றியும் மனம் திறந்து உங்களிடம் சொல்லாவிட்டால் நன்றியாக இருக்காது. வானம் இருட்டிக் கொண்டு வரும் போதே மழை வரப் போகிறது என்று கண்டுகொள்வோம். மழை மேகம் கடலிலேயே பொழிந்து விடுகிறது. மண் மீது மழை மேகத்துக்கு என்ன கோபமோ? நிர்வாண பூஜை, யாகபூஜை கழுதைக்குத் திருமணம், தவளைக்குத் திருமணம் என்றெல்லாம் நடத்தி, மனிதன் மழைக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் போதும் மழை மேகம் கடலிலேயே பொழிகிறது. மனிதன் மீது மழை மேகத்துக்கு உரிமையுடன் கூடிய கோபம் எப்போதும் உண்டு.

மழை மேகத்தின் அமைப்பு முறையே ஆச்சரியமானது. துகள்களாகக் கூடி பின்னர் துளிகளாகி, சுமை தாங்க முடியாமல் மழையாகப் பெய்யும் மழை மேகங்கள், பூமியில் வரட்சி கண்டு அழுகிறது என்றுதான் நினைக்கிறேன். மழை நாளில் இடி இடிப்பது, மின்னல் என்பன நிகழ்வது இந்த மழை மேகங்களால்தான் என்பதை என்னால் இன்னும் நம்ப முடியவில்லை. நீர்த்துளிகளாலான மேகம், இன்னொரு மேகத்துடன் மோதும்போது அத்தகையதொரு சத்தம் கேட்கிறதா? தண்ணீரும் தண்ணீரும் மோதுகின்றபோது கண்ணைப் பறிக்கும் ஒளி ஏற்படுகிறதா? என்பது ஆச்சரியமானது. ஆனால் விஞ்ஞானம் 'ஆம்' என்கிறது. மெய்ஞானம் நம்ப மறுக்கிறது. கற்கள் வெடிப்பது போலவும் பிரமாண்டமான இரும்புப் பாளங்கள் உராய்வுப்பட்டு ஒளி உருவாக்குவது போலவும் தண்ணீரால் நிகழ்த்த முடிகிறதா? அந்த உராய்வின்போது மின்சாரம் உருவாகிறது. என்னே இயற்கையின் அற்புதம்! என்னால் நம்ப முடியாததை, உண்மை இல்லை என்றும், தெரியாததை, இல்லையென்றும் கூற முடியாது.


**இறையருள் அற்புதசக்தி ஆகர்ஷ்ண வசிய மருத்துவம்**

YHL

மட்டக்களப்பு குருசக்தி நிலைய குருஜீ புராதன அற்புத மூலிகை மாந்திரீக சித்தர் மருத்துவ பண்டிட் நவீன மனோதத்துவ ஹோமியோபதி டாக்டர் மந்திர யோகியின் மாந்திரீக சாஸ்திரகுறி உளவியல் நாடிப்பரீட்சைகளினால் காரணமறிந்து மாற்று மருத்துவ மற்றும் அற்புத சக்தியினால் தீயசக்திகளை, தடைகளை விலக்கி, மனநோய்கள், நாட்பட்ட உடல் நோய்கள். காதல் திருமணம், குடும்ப சில வாழ்க்கைப் பிரச்சினைகளை தீர்த்து அதிக பலயீனம் நரம்புத்தளர்ச்சி, பாலியல் உறுப்பு தாம்பத்திய உறவு குறைபாடுகளை நிவர்த்தி செய்து, பிரிந்து சென்றவர்களை வெறுப்பவர்களை வேண்டியவர்களை உறவாக்கி வேண்டாதவைகளை மறந்து, நினைத்தகாரியங்களை நிறைவேற்றி கல்வி, பரீட்சை, தொழில், வியாபாரம் வேறு காரியங்களிலும் வெற்றிபெற்று மனோவசீகர அதிர்ஷ்டகரமான வாழ்க்கை அமைத்து மகிழ்ச்சியாக வாழலாம். வரமுடியாதவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் சில காரியங்களுக்கு பரிகாரப் பொருட்களை பெற்றும் பெறாமலும் அற்புதசக்தி ஆகர்ஷ்ண வசியங்களினால் கோரிக்கைகளை உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

Dr. MANTHIRAYOGI - Rh MD.
Y H L (GURUSAKTHY CENTRE)
KALLADY - BATTICALOA. (SRI LANKA)

Tel: 060-2655211, Mobile : 0773081100

கொழும்பில் சந்திக்க பதிவு செய்து கொள்ளவும்.



**சிங்கப்பூரில் தங்குமிட வசதி**

சிங்கப்பூரில் வீடுமுறையைக் களிக்கவும், திருமணத்துக்கு வருபவர்களுக்கும் எல்லா வசதியுடன் கூடிய முழு வீடு குறைந்த வாடகைக்குக் கிடைக்கும். திருமணத்துக்கு வருபவர்களுக்கு திருமணத்துக்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் குறைந்த கட்டணத்தில் இலங்கை முறைப்படி செய்து தருவோம். மற்றும் தேவைப்படும் உதவிகளையும் செய்து தருவோம்.


மேலும் விபரத்துக்கு:-
எந்த நேரமும் தொடர்பு கொள்ள வசதியாக கைத் தொலைபேசி எண்:
00,65,97514941 என்ற எண்ணில் அப்புவிடம் தொடர்பு கொள்ளவும்.

LINGAM WEDDING SERVICES
153, Jalan Jarak, , Singapore 809281









**மலையாள மாந்திரீகம்**

உங்கள் காரியங்கள் நினைத்தது நினைத்தப்படி நிறைவேற வேண்டுமானால் என்னை சந்தியுங்கள். எத்தனை பேர்களிடம் சென்று மாந்திரீக பரிகாரம் செய்து தோல்வி கண்டவர்கள் என்னை தேடி வர காரணம் என் கை ராசியே. வாழ்க்கை பிரச்சினையாக இருந்தாலும் சரி, தீராத நோயாக இருந்தாலும் சரி என்னை கண்டு மாந்திரீக பரிகாரம் செய்தால் முன் வினை பாவகரும தோஷங்கள் நீங்கி விடும்.
வெளிநாட்டவர்களுக்கு 24 மணித்தியால தொலைபேசி உரையாடல் வசதி உண்டு

**எனது தனித்தன்மை என்ன**

உண்மைச் சேவையை உறுதி படுத்தும் முகமாக கடந்த 39 வருடங்களாக எனது புகைப்படத்தை மக்களுக்கு அறிமுகம் செய்கின்றேன். இது மட்டுமா? வாங்கும் பணத்திற்கும். (GURANTY CARD) வழங்குவதும் இது எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு எந்த மாதம் என்றெல்லாம் ஆணிவேறு அக்குவேராக அன்பர்களின் முகத்தை பார்த்த மாத்திரம் கூறிவிடுவேன்.

**இனி உங்கள் பிரச்சினை என்ன?**

வாருங்கள் உங்கள் குறைகளை கூறுங்கள். இவையுடன் வெளிநாட்டவர்களுக்கென அதி விஷேட சாமகால பூசை நடைபெறுவது என்றால் அது அன்னை ஸ்ரீ துர்க்கையின் கருணையே
என்னால் நன்மை பெற்றவர்கள் என்ன கூறுகிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக 39 வருடகாலமாக தன்னிகரற்ற சேவை யாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக

**சுவிஸ் அன்பரின் கணவன்,மனைவி பிணக்கு தீரல் மடல்**
மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசிர்வாதத்தாலும் சின்னாபின்னமான எனது குடும்பத்தை 7000 முஆ க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

**சுவிஸ் அன்பரின் மடல் ஸ்ரீ துர்க்கையம்மனின்ச க்தியால் பேசும் மழலை**
மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானகோடி நன்றிகள்.

**ஜேர்மன் அன்பரின் மடல் மகளின் திக்குவாய் குணமாகியது**
அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்.

**லண்டன் அன்பரின் மடல் எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்**
பெறுமதிப்புக்குறிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் அருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்.

**கொழும்பு அன்பரின் மடல் 39 வயதில் அதிசயத் திருமணம்**
பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எனது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம் உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடான கோடி நன்மைகள்

**குருணாகல் அன்பரின் மடல் நெடுநாளாக தடைப்பட்ட திருமணம்16 நாளில் வெற்றி**
தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா எனது சகோதரிக்கு திருமணம் தடைபட்ட வண்ணம் இருந்ததால் உங்களிடம் பரிகாரம் நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமணம் நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்.

**பிரான்ஸ் அன்பரின் மடல் குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயனம் வெற்றி**
அன்புக்கும் மதிப்பிற்குறிய ஐயா. வெளிநாட்டுக்கு செல்ல முடியாமல் மிகவும் கஸ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்

**இத்தாலி அன்பரின் மடல் சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி**
வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் நானும் கணவரும் பிரிய நேர்ந்த சமயம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான் என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்.

**பதுளை அன்பரின் மடல் போதை அடிமைதனத்திலிருந்து விடுபட்டவர்**
அன்புக்குறிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதை பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்தில் புது ஒளியேற்றினீர்கள் நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்.

**கனடா அன்பரின் மடல் ஜாதகத்தில் குறியது பலிதம்**
மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறிந்திருந்த எனக்கு இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் என கூறியது பலித்தது கண்டு ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தேன் என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள சேவை தொடரட்டும்.

**யாழ்ப்பாண அன்பரின் மடல் அதிசய அக்னி குண்டல பூஜை**
மதிப்பு மரியாதை கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்த்தாரையும் மறவாது மாதம் தோறும் விசேஷமாக நடைபெறும். அக்கினிகுண்டல பூஜையில் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகின்றோம் ஐயா.

**கொழும்பு அன்பரின் மடல் அச்சொட்டான கைரேகை பலன்**
அன்புள்ளம் கொண்ட ஐயா, தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வாழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்.

**கண்டி அன்பரின் மடல்**
பல சிரமங்கள் மத்தியில் இருந்தேன். தினமுரசில் உங்களுடைய அற்புத சேவையைப் பார்த்து உடன் தொடர்பு கொண்டேன். உடன் எனது ஜாதகத்தைக் கணித்து என் வாழ்வில் நடப்பது நடக்க இருப்பது பற்றி மிகத் தெளிவாக கூறியிருக்கிறீர்கள். என் உள்ளம் நிறைந்த நன்றிகள். தங்களின் பரிகாரமான செயலால் என் மனம் அமைதியடைந்து சந்தோஷத்துடன் இருக்கிறேன். வாழ்க ஐயாவின் சேவை

**இனி உங்கள் மகிழ்ச்சிக்கு**
அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகம் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கபோவது இவையனைத்தும் ஜாதகம் மூலமாகவோ? கைரேகை மூலமாகவோ? தெட்டத் தெளிவாக உங்கள் பலாபலன்களை அறிந்து சிறப்பான மகிழ்ச்சியான, குபேரவாழ்வு பெற என்னை நேரில் சந்தியுங்கள். உண்மையென்பது உண்மையே.

உலக மளையாள மாந்திரீக சக்ரவர்த்தி பேராசிரியர்
டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N.) JP PROF. DR. P.K. SAMY (J.D.G.A.N.) JP

ஸ்ரீ துர்க்காதேவி மாந்திரீக உச்சாட்ட பீடம்
SRI DURGADEVI MANTHIRIKA UTCHADA PEEDAM. No- 162 KOTAHENA STREET COLOMBO 13
Tel-011-2470615, 011-2342463, 011-2342464,011-2431137

FAX-0094-11 2344831 Email- drpksamy@sltnet.lk Web:- www. drpksamy .com

எமது கிளை நிறுவனம் நுவரெலியாவில் மட்டுமே.
No-33,Daily Fair Complex, Kandy Road Nuwara-Eliya.
Tel: 052-2222508

### இன்னொருவர் பார்வையில்

# வீரர்களும் வில்லன்களும்!

**புலி** இயக்கத் தலைவர் பிரபாகரனின் வருடாந்த பிறந்ததின உரை, ஒருபுறம் உள்நாட்டு விடயங்களில் குறிவைத்திருக்கும் புலி இயக்கத்தின் யுத்த உறுப்பினர்களையும் மறுபுறத்தில் புலம்பெயர்ந்து வாழ்பவர்களின் உணர்வுகளையும் முன்னோக்கி உந்தித் தள்ளும் என்று கருதியவர்கள், தமது கருத்துப் பிழையானதென்பதை உணர்ந்திருப்பார்கள். இலங்கையின் சமாதான முன்னெடுப்பில் பெருமளவிலோ அல்லது சிறு அளவிலோ அக்கறையும் ஈடுபாடும் கொண்டுள்ள இலங்கை அரசாங்கமும் சிங்கள சமூகமும் மட்டுமல்ல, சர்வதேச சமூகமும் கூட எதிர்கால முயற்சிகள் தொடர்பாக சமிக்ஞைகள், அறிகுறிகள் ஆகியவற்றை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றன. பிரபாகரனின் கடந்த கால உரைகளுக்கு ஏதாவது புதுக் கருத்துக்கள் இருக்குமாவென்று நாட்கணக்காக ஆராய்ந்த ஆய்வாளர்கள், எதுவுமேயில்லையென்பதைக் கண்டு பிடித்திருப்பார்கள். கடந்த வருடம் ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுச் சில தினங்களுக்குப் பின்னர், தனது வருடாந்த உரையை நிகழ்த்திய பிரபாகரன், சமாதான முனைப்பில் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இருந்த நேர்மைத் தன்மையை நிரூபிப்பதற்கு ஒரு வருட கால அவகாசம் வழங்குவதென உறுதியளித்திருந்தார். ஆனால் சில வாரங்களுக்குப் பின்னர் வன்செயல்கள் ஆரம்பித்தன. முன்னெப்பொழுதுமில்லாத வகையில் இலங்கை இராணுவம் பதிலடி கொடுத்தது.

ஒரு வருடம் முடிவுற்ற இன்றைய நிலையில், கள நிலையிலும், சமாதான முன்னெடுப்பில் இருந்த தேக்க நிலையிலும் இன்னமும் குழப்பங்களே நிலவுவதை காணக் கூடியதாக இருக்கிறது. புலி உறுப்பினர்களின் தாக்குதலை ஒரு சமூக யுத்தமாக மாற்றும் புலிகளின் திறமையும், சமாதான முன்னெடுப்புகளுக்கு இருக்கக்கூடிய தடைகளை நீக்கி பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு முடியாத இலங்கை அரசாங்கத்தினது, திறமையீனமும், சமாதான முன்னெடுப்புகளைத் தேக்கமடையச் செய்திருக்கிறது. இத்தடவை இஸ்ரேலிய கிபீர் விமானங்களும், பாகிஸ்தானால் வழங்கப்பட்ட பல்குழல் ரொக்கட் ஏவுகணைகளும் தமிழ்ப் பகுதிகளில் ஏற்பட்ட மனித அவலங்களுக்கான குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுத்தன. இவை இல்லாத நிலையிலும் கூட, கடந்த காலங்களில் இலங்கை இராணுவம் பிரசார யுத்தத்தில் புலிகளுக்கு வெற்றியைத் தங்கத் தாம்பாளத்தில் வைத்துக் கொடுத்திருக்கிறது. கடந்த காலத்தைப் போன்று, புலிகள் இம் முறையும் தம்மை நியாயப்படுத்துவதற்கு இலங்கை அரசும் இராணுவமும் இடம் விட்டிருக்கின்றன.

இவ் வருடம் பிரபாகரன் தனது பிறந்த தின உரையை நிகழ்த்திய போது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்தியாவில் இருப்பது ஏதோவொரு சமகாலச் சம்பவம் போலிருக்கிறது. அவர் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பாக இந்திய தலைவர்களுடன் நடத்திவரும் பேச்சுக்கள் குறித்த எதிர்வுகூறல்கள், கிளிநொச்சியிலிருந்து வரும் சமிக்ஞைகள் அறிகுறிகள் மூலம் தெரியப்படுத்தப்படும். கடந்த வருடம் பிரபாகரன் தனது பிறந்த தின உரையை நிகழ்த்தி ஒரு மாதத்தின் பின்னர் ஜனாதிபதி ராஜபக்ஷ இந்தியா சென்றிருந்தார். அப்போது ஜனாதிபதி ராஜபக்ஷ நிகழ்த்திய அங்குரார்ப்பண உரையிலும், பின்னர் வருடாந்த வரவு செலவுத்திட்ட உரையிலும், தெரிவித்த சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான கருத்துக்களுக்குப் புலி இயக்கத் தலைவர் தனது அபிப்பிராயங்களைத் தெரிவித்திருந்தார் என்று கருதப்பட்டது.

பிரபாகரனின் கடந்த கால உரையோடு இவ்வருட உரையை ஒப்பிடுகையில், புலிகள் ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷவின் வெற்றியினால் இழந்தவற்றில் சிலவற்றை

(யுத்தத்தினாலல்ல) மீளப்பெறுவதற்கு முனைவார்களெனத் தெரிய வருகிறது. எவருமே பட்ஜெட்டைப் பற்றியோ அல்லது ஆளும் சுதந்திரக் கட்சிக்கும் எதிர்க் கட்சியான ஐ.தே.க.வுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட வரலாற்று முக்கியத்துவமிக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக தற்போது பேசுவதாகயில்லை. புலிகளும் அரசாங்கமும் செய்து கொள்ளக்கூடிய சமாதானம் மற்றும் அதிகாரப் பகிர்வுப் பொதியை சட்டபூர்வமானதாக ஆக்குவதற்கு ஆதரவு வழங்கக் கூடிய திறமை ஐ.தே.க.வுக்கு மட்டுமேவுண்டு. பெருமளவிலான தமிழ் சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் ஏனைய இலங்கையர்களையும் கடந்த காலங்களில் விரக்தியுற வைத்தது இந்த சு.க. - ஐ.தே.க. ஆகிய இரண்டும் ஒருங்கிணைந்து செயற்படத் தயங்கியமையேயாகும்.

ராஜபக்ஷவின் அரசாங்கம், புலிகளுக்கெதிரான யுத்தத்தையும் தமிழ் மக்களின் பெரும்பாலானவர்களுக்கு அதிகாரப் பகிர்வையும் வழங்க உறுதியளித்தமையை, கடந்த வருட சம்பவங்கள் நிரூபிக்கின்றன. இலங்கையர் அனைவரையும் துயரங்களைச் சுமக்க வைத்த யுத்தம் ஏற்கனவே ஆரம்பித்து விட்டது. ஆனால் அதிகாரப் பகிர்வுக்கான பொதியை முன்வைப்பதில் இன்னமும் தாமதம் நிலவுகிறது. டிசம்பர் மாதத்தின் முதல் வாரத்தில், சர்வ கட்சி மாநாட்டினதும் ஐ.தே.க.வினதும் கவனத்திற்கென தீர்வுப் பொதி யோசனைகள் முன்வைக்கப்படுமென்று அரசாங்கம்


கிளிநொச்சியில் ஓர் அலங்கார வளைவு.

உறுதியளித்துள்ளது.

வாஷிங்டனில் கூடிய உதவி வழங்கும் இணைத் தலைமை மாநாட்டில் இரு விடயங்கள் முக்கியமாக வெளிப்படுத்தப்பட்டன. ஒன்று என்பது. சமாதான முன்னெடுப்புக்கான தீர்வு இலங்கையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இரண்டு, பிராந்தியத்தில் சமாதானமும் ஸ்திரத்தன்மையும் ஏற்படுத்துவதற்காக இந்தியா பெருமளவிலான பங்களிப்பைச் செய்ய வேண்டுமென்பது இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் இந்தியா வேண்டுமென்றே பங்கு பற்றவில்லை. இணையத்தலைமை நாடுகளின் கூட்டம் முடிவடைந்த பின்னர் வாஷிங்டனிலுள்ள புதுடில்லியின் பிரதிநிதிகளுக்கு இக்கூட்டம் பற்றி வாஷிங்டன் பிரதிநிதி விளங்கப்படுத்தியிருக்கிறார்.

'இலங்கையர்களுக்காகவே இலங்கை' என்ற எண்ணக் கருத்து சில காலங்களாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அத்துடன் சமாதான முன்னெடுப்புகளுக்கு வேறெந்த நாட்டின் மாதிரிகளை விட, இந்தியப் பாணியிலான அதிகாரப் பகிர்வு யோசனைகள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதாவது இந்திய மத்தியஸ்தம் உதவப் போவதில்லையென்றோ அல்லது இந்திய ஈடுபாட்டில்லாமல் இலங்கையோ, சமாதான முன்னெடுப்போ நடைபெறப் போவதில்லையென்று கருதுவதல்ல. குறிப்பாக ஜெனீவா-2 பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த பின்னர் வெளிவரும் கருத்தல்ல இது.

இந்தியத் தலைமையத்துவத்துடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்காக ராஜபக்ஷவைப் போன்று, ரணில் விக்கிரமசிங்காவும் இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார். 'தெற்கில் இணக்கப்பாட்டினை' ஏற்படுத்த உதவியளிப்பதற்கு, புதுடில்லி ஆக்கபூர்வமானதும் உள்விவகாரங்களில் தலையீடு செய்யாததுமான பாத்திரத்தை வகிக்கிறது. இது சமாதான முன்னெடுப்புகள் வெற்றி பெறுவதற்குப் பின்புலமாக அமையும். அதிகாரப்பகிர்வு, நீதித்துறை மீளாய்வு, சமாதானப் பேச்சுவார்த்தை ஆகியன தொடர்பான தனது அனுபவத்தையும் அவை தொடர்பான விசேட ஏற்பாடுகள் சம்பந்தமாகவும் இந்தியா வழங்க வேண்டிய யோசனைகள் பலவுள்ளன. இலங்கை அரசாங்கத்தைத் தவிர புலிகளின் மனோபாவத்தை நாடிபிடித்து அறியக்கூடிய அனுபவம் இந்தியாவுக்கு உண்டு. அரசும் புலிகளும் தெரிவித்த உறுதிமொழிகளை இருதரப்பும் விலகாமல் கடைப்பிடிக்க வைக்க வேண்டிய கடப்பாடு சர்வதேச சமூகத்துக்கு உண்டு.

இதற்காக இலங்கை அரசினதும் குறிப்பாகப் புலிக்ளினதும் மனோபாவத்தை கண்டறிய வேண்டிய தேவைப்பாடு இருக்கிறது. சமாதான முன்னெடுப்புகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு இரு தரப்புகளும் அளித்த உறுதிமொழிகள் மீறப்படாமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

இந்திய தரப்புடனிருந்து பெரும் எதிர்பார்ப்புகளோ அல்லது பாரிய அமர்க்களமோயின்றி ராஜபக்ஷ இந்தியாவுக்குச் சென்றுள்ளார். இந்திய விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் பொதுவான கடற்பரப்பில் இருநாட்டின் கடற்படையினரும் கூட்டாக ரோந்து புரிய வேண்டும் என்று அவர் தெரிவித்திருக்கும் யோசனை, பாரிய அர்த்தங்களை ஏற்படுத்தக் கூடியது. ஆனால்

***புதுடில்லியை தலைமையகமாகக் கொண்டியங்கும் அவதானிப்பு ஆய்வு நிலையத்தின் சென்னைப் பிரிவுப் பணிப்பாளரான என்.சத்திய மூர்த்தி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது. கொழும்பிலிருந்து வெளிவரும் 'டெய்லி மிரர்' ஆங்கிலப் பத்திரிகையில் கடந்த 27ஆம் திகதி இக் கட்டுரை பிரசுரமாகியிருந்தது.***

பிழையான தருணத்தில் இந்த யோசனையை முன்வைத்துள்ளார். தமிழக அரசாங்கத்துடனும் அங்குள்ள அரசியல் கட்சிகளுடனும் புதுடில்லி நடத்திய கலந்துரையாடலின் பின்னர் தற்போதைய தேக்கநிலையேற்பட்டிருக்கிறது. இந்நிலையில் சமாதான முன்னெடுப்புத் தொடர்பான இந்தியக் கருத்தோட்டம் ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டு அரசாங்கத்துடனோ அல்லது அங்குள்ள அரசியல் சமூகத்துடனோ கருத்து வேறுபாடுகள் இல்லை. இருந்தாலும் இந்திய அரசாங்கத்தைப் பொறுத்தவரை இவ்விடயத்தில் முன்னேறிச் செல்கிறதென்றே சொல்ல வேண்டும்.

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகளைப் பொறுத்தவரையில் அவை சென்னைக்கும் புதுடில்லிக்குமிடையில் முரண்பாடுகள் இருக்குமென்றால் இதுதொடர்பாக சுதந்திரக் கட்சிக்கும் ஐ.தே.க.வுக்குமிடையிலுள்ள முரண்பாடுகளை விடக் குறைவானவையாகும்.

சர்வதேச சமூகத்திடமிருந்து புலிகளுக்குக் கிடைத்துவரும் ஆதரவு குறைந்து வரும் நிலையில், தமக்குக் கிடைத்து வந்த இலாபங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதைப் பிரபாகரனும் புலிகளும் கவனத்திற் கொள்ள வேண்டும். கடந்த வருடம் உலக நாடுகள், புலிகளின் ஆயுதக் கொள்வனவு, நிதி சேகரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக நேரடியாகச் செயற்பட ஆரம்பித்தன. இது அவர்களுக்கு தெளிவான சமிக்ஞையை வழங்கியிருக்கிறது. இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் கூட்ட முடிவில், புலிகள் இயக்கத்தின் பயங்கரவாத குணாம்சம் தொடர்பான அமெரிக்காவின் நோக்கத்தை அமெரிக்க அதிகாரியான நிக்கலஸ் பேர்ன்ஸ் மிகத் தெளிவாகவே வெளிப்படுத்தியிருந்தார். தமிழ் சமூகத்தின் பெரும்பான்மையினரையும் புலிகளையும் ஒப்பிட்டுப் பேசிய அவர், வாகரை மற்றும் ஏ-9 பாதை மூடப்பட்ட பின்னர் சர்வதேச சமூகத்திடமிருந்து மனிதாபிமான முறையில் செயற்பாடுகள் எதுவும் கிட்டவில்லையென்றும், வார்த்தைகள் மட்டுமே வழங்கப்பட்டதாகவும் செயலில் எதுவுமில்லையென்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இலங்கையைப் பொறுத்தவரையில் நாட்டுக்கும் தமிழ்ச் சமூகத்துக்குமிடையில் வீரனுக்கும் வில்லனுக்குமிடையிலான எல்லைக்கோடு, மிகத் தெளிவாக என்றுமே இருந்ததில்லை. யுத்தத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக தன்னுடனேயே யுத்தத்தை நடத்தும் ஒரு தேசத்தைப் பொறுத்தவரையில் இதுவே நிலைமையாகும். இராணுவ முனையில் சம்பூர், மூதூர் சம்பவங்களை இலங்கை இராணுவத்திற்கும், சுதந்திரக் கட்சிக்கும் ஐ.தே.க.வுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் இலங்கைக்கும் நல்லெண்ணத்தை ஏற்படுத்தியிருந்தன. வாகரை மற்றும் ஏ-9 பாதை விவகாரம் இந்த நல்லெண்ணனத்தைத் தகர்த்து விட்டுள்ளது. தெற்கின் இணக்கப்பாடு பிரச்சினைகளை வெளிக்காட்ட ஆரம்பித்துள்ளதால், அது இலங்கையிலுள்ள சமாதான ஆர்வலர்களுக்கு கவலை தரும் விடயமாக மாறலாம். இதனால் எதிர்க்கட்சியான ஐ.தே.க. உட்கட்சிப் பிரச்சினைக்குள் மாட்டிக் கொண்டிருக்கிறது.

யுத்தம் தொடர்ச்சியாக அதிகரித்து வருகிறது. சமாதானம், வெறும் வாய்ச் சொல்லிலேயே இருக்கிறது. இலங்கை சம்பந்தமாகவோ அல்லது அதனோடு சம்பந்தப்பட்ட மனிதாபிமான விடயங்கள் சம்பந்தமாகவோ உலகம் அக்கறை செலுத்த முடியாத நேரம் வரலாம். உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளின் கூட்டத்தில் மீண்டும் குறிப்பிடப்பட்டதைப் போன்று, சர்வதேச சமூகம் உறுதியளித்த நிதித் தொகையில் பெருமளவை ஏற்கனவே செலவழித்துள்ளது. அத்துடன் அரசாங்கத்திடமிருந்து மட்டுமல்ல, புலிகளிடமிருந்தும் பெரும்பாலான தமிழ் மக்களிடமிருந்தும் இதன் பலாபலன்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. அபிவிருத்தியடைந்த உலகத்தைப் பொறுத்தவரை அதன் அகராதியில் யுத்தமோ சமாதானமோ, சுயாதீனமாக மேற்கொள்ளப்படக் கூடியவையல்ல. இவை எவ்வளவு விரைவாக உணர்ந்து கொள்ளப்படுகின்றனவோ அவை இலங்கைக்கும், தமிழர்கள் உட்பட்ட சகல இலங்கையர்களுக்கும் சிறப்பாக அமையும்.

நன்றி : டெய்லி மிரர்


# கவிஞர் வாலி எழுதுகிறார்!

## —வாழ்க்கைச் சரிதம்—

இருப்பினும்
வழக்காடுதலை
வழக்கமாகவே
வைத்திருக்கிறார்.

பாலையும் நீரையும்
பிரித்துக் காட்டுவதற்காக...
டிசம்பர் மாதத்தில்
டில்லியிலிருந்து-
சென்னைக்கு வரும்
அன்னப்பறவை.

வயதானாலும்...



இதன்
இறக்கைகள் இன்னமும்
வலுவாக இருப்பது -
காமாட்சி கடாட்சம்:
காஞ்சிப் பெரியவரின்
கருணா விலாசம்.
இதுவரையில்-
படைப்பாளிதான்
பிரபலமாகிக் கொண்டிருந்தான்:
இவர்
வந்த பிறகே...
விமர்சகனின் விலாசத்தையும்
உலகம்-
விசாரித்தறியும் என்பது....
வெளியில் தெரிய வந்தது.
பேனாவில்
மையை நிரப்பாமல்
மெய்யை நிரப்பும்
இந்த முதியவர்...
இன்னும் நெடுங்காலம்
இளமை நலத்தோடு இருக்க -
இறையருள்
துணை நிற்க வேண்டும்.

இதுவரையில் அச்சு வாகனத்தில் ஏறாத எத்துணையோ கவிதைகளை இந்தத் தொடரில் இடையிடையே செருகியிருக்கிறேன். விரைவில் இந்த அனுபவத் தொடர் தனி நூலாக வரும்போது, இந்தக் கவிதைகளும் தனித் தொகுப்பாக வரும்.

என் புதிய கவிதைத் தொகுப்பின் பெயர்தான் -
'நிஜ கோவிந்தம்'

“அக்கரைப் பச்சை”, “இளைய தலைமுறை” முதலிய படங்களைத் தயாரித்த என் அருமை நண்பர் திரு.ஜி.கே.தர்மராஜ் அவர்களும், புகழ்வாய்ந்த ஒளிப்பதிவாளர் திரு.மாருதிராவ் அவர்களும் ஒரு நாள் என் வீட்டிற்கு வந்தார்கள். வருடம் 1978 என்று நினைக்கிறேன்.

“நான் ஒரு படம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறேன். நண்பர் மாருதிராவும் எனக்கு உறுதுணையாக இருக்கிறார். நீங்கதான் கதை, திரைக்கதை, வசனம், பாடல்கள் எல்லாம் எழுதணும்” என்று வந்த விஷயத்தை சுருக்கமாக விளக்கினார் திரு.தர்மராஜ்.

“இப்போது என் கைவசத்தில் எந்தக் கதையும் இல்லையே....” என்று நான் தயங்கியவாறே சொல்லிவிட்டு, “யார் ஹீரோவாக நடிக்கப் போகிறார்?” என்று தர்மராஜை வினவினேன்.

“யார் ஹீரோவா நடிக்கப் போகிறார்ங்கறதை அப்புறம் சொல்றேன். ஆனா அந்த ஹீரோதான், உங்ககிட்ட கதையை வாங்கி வேலையை ஆரம்பிக்கச் சொல்லி எங்களை இங்கே அனுப்பினார்...” என்று மாருதிராவ் ஒரு சஸ்பென்ஸ் வைத்துப் பேசினார்.

“அவருக்கு எப்படிக் கதை எழுதணும்னு, உங்களுக்குத்தான் தெரியும்னு அவரே சொன்னாருங்க. அவர் வீட்லேருந்துதான், அவர் சொல்லி அனுப்பித்தான் நாங்க நேர உங்க வீட்டுக்கு வந்திருக்கோம்...” என்று புன்னகைத்தார் திரு.தர்மராஜ்.

நான் தான் கதை, வசனம் எழுத வேண்டுமென்று என் எழுத்தில் அவ்வளவு ஆர்வம் கொண்டு, இவர்களை என் வீட்டிற்கு அனுப்பிய ஹீரோ யாராக இருக்கக்கூடும் என்று நான் வியப்பும் மகிழ்வும் விழிகளில் குமிழியிட்டடிக்க ஒரு விநாடி சிந்தனையில் ஆழ்ந்தேன்.

பிறகு தர்மராஜிடம், “உங்களை என்கிட்ட அனுப்பி வைச்ச ஹீரோ யாரு சார்? அதெ முதல்ல சொல்லுங்க....” என்று விடாப்பிடியாகக் கேட்டேன்.

அவர் யாரென்று, திரு.தர்மராஜ் சொன்னதும் நான் திகைத்துப் போனேன். இது கனவா? நனவா? என்று நான் கிள்ளிப் பார்க்காத குறைதான்.

“நிஜமாவா சொல்றீங்க?” என்று நான் மாருதிராவிடமும், தர்மராஜிடமும் மாறி மாறிக் கேட்டேன்.

(தொடரும்.......)




# கவர்ச்சியின் கால்கள்!



பிரபல நடிகை ஈவா லொங்கோலியா, படப்பிடிப்பொன்றின் போது அண்மையில் விபத்துக்கு உள்ளாகினார்.

படிக்கட்டுக்களில் இறங்கிவரும் போது இவர் வழுக்கி விழுந்ததாலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

“டெஸ்பரேட் ஹவுஸ் வைப்ஸ்” எனும் தொடரின் மூலம் புகழ் பெற்ற ஈவா இப்போது புதிய திரைப்படம் ஒன்றில் நடித்து வருகிறார். கவர்ச்சி காட்டி நடிப்பதில் தாராள மனம் கொண்ட ஈவாவின் கால்களில் தான் பலத்த அடி விழுந்துள்ளதாம்!

# பச்சை!



நம் நாட்டில் ஒரு காலத்தில் உடம்பில் பச்சை குத்திக் கொள்ளும் கலாசாரம் பரவலாகக் காணப்பட்டது. இப்போது அவ்வளவாக இல்லாவிட்டாலும், மேலைத்தேய நாடுகளில் அதன் மோகம் தற்போது அதிகரித்துள்ளது.

மேலைத்தேய இளைஞர்களும், யுவதிகளும் தங்களது மேனி அழகைக் கவர்ச்சியாக்கிக் காட்டுவதற்கும் ஒருவரின் பால் இன்னொருவருக்கு ஈர்ப்பு ஏற்படும் வகையிலும் இந்தப் பச்சை குத்திக் கொள்ளும் கலாசாரத்தைப் பின்பற்றி வருகின்றனராம்.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது ஹிட்லரின் சித்திரவதை முகாம்களில் யூதர்களை இனங்கண்டு கொள்ளும் முகமாக அவர்களுக்குப் பச்சை குத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும்.



# புரட்சித்தலைவர் 02
# பிடல் காஸ்ட்ரோ

**தருவது**
**எம். கேஷிகன்.**

**உலக** மக்களின் பார்வையை ஈர்த்திருக்கும் தலைவரைத் தன் மண்ணின் மைந்தனாகக் கொண்டிருக்கும் கியூபா நாடானது, தஞ்சம் தேடிவந்த மக்களுக்கு வாழ்வு கொடுத்த மண் என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்வது நல்லது.

கியூபா, ஆர்ஜன்டீனா, பேரு, பொலிவியா, கௌதமாலா ஆகிய நாடுகளில் ஸ்பானியர்களே பெரும்பான்மையானவர்களாக வாழ்ந்தவர்கள். ஆகையால் ஸ்பெயின் நாட்டின் அடிமைகள் வாழும் நாடுகளாகவே இந்த நாடுகள் இருந்தன.

ஸ்பெயின் நாட்டில் எதேச்சதிகாரமான ஆட்சி முறைதான் நடந்து வந்தது. அங்கு மக்களைத் தண்டிக்கும் அதிகாரத் தரப்பாக, திருச்சபையின் உலகத் தலைமைக் குருவான போப் ஆண்டவரின் ஆணைப்படி ஐரோப்பாவிலிருந்த திருச்சபைகள் இருந்தன. இந்த எதேச்சாதிகாரப் போக்கினால் ஒடுக்கப்பட்ட மக்கள் தப்பி ஓடித் தஞ்சம் அடைந்த நாடுகளில் ஒன்றுதான் இந்தக் கியூபா நாடு.

கியூபா நாடு கரும்புத் தோட்டங்களைக் கொண்டிருந்ததால், அங்கு ஆட்சி அதிகார மையம், மக்களின் பொருளாதாரத் தேவையைத் தீர்ப்பதற்கோ, மக்களை ஆளும் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கோ இயலவில்லை. அமெரிக்காவிலுள்ள பரஸ்டன் துறைமுக நகரைச் சேர்ந்த முதலாளிக்குச் சொந்தமான யுனைடெட் புருட் நிறுவனம் தான் கியூபாவின் ஓரியன்ட் மாநிலத்தில் பெரும் கரும்புத் தொழிற்சாலையை நடத்தி வந்தது. கியூபாவை இந்த நிறுவனமே தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தது.

ஓரியன்ட் நதி இயற்கையாகப் பாய்ந்து செழிப்பு மிக்க, வளம் நிறைந்த வயல்களைக் கொண்ட பகுதியின் விளிம்பில் இருக்கும் மலையின் பெயர்தான் ஓரியன்ட்.

இந்த ஓரியன்ட் மாநிலத்திலுள்ள யுனைடெட் புருட் கரும்புத் தொழிற்சாலையில் கரும்புகளை ஏற்றிச் செல்வதுடன், மீதிக் காலத்தில் அந்தக் கம்பனியினது எடுபிடி வேலைகளைச் செய்தவர் பிடல் காஸ்ட்ரோவின் தாத்தா என்பதை முதலில் தெரிந்து கொள்வோம்.

யுனைடெட் புருட் கம்பனி, கியூபாவில் மட்டுமல்லாது பிரேஸில், சீலி, ஆர்ஜன்டினா, கௌதமாலா ஆகிய நாடுகளில் பெருமளவிலான நிலங்களை வாங்கி, அதில் வாழை, கரும்பு ஆகியவற்றைப் பயிரிட்டு, அதன் சொந்தக் கப்பலில் ஐரோப்பிய, ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதையே பிரதான வர்த்தகமாகக் கொண்டிருந்தது. கியூபாவில் 1898ஆம் ஆண்டு ஒரு ஏக்கர் மூன்று டொலர் என்ற விலையில் இரண்டு இலட்சத்து நாற்பதாயிரம் ஏக்கர் நிலப்பகுதியை ஓரியன்ட் மாநிலத்தில் யுனைடெட் புருட் நிறுவனம் வாங்கி, கரும்புப் பயிர்ச்செய்கையைச் செய்தது. அந்தப் பெரு நிலப்பரப்பை ஒட்டி நதிநீர் பாயும் செழிப்பும் இருந்தது அந்த நிறுவனத்திற்கு வாய்ப்பாக அமைந்தது.

பல நாடுகளிலிருந்தும் வேலை தேடி - தஞ்சம் தேடி - வந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதன் மூலம் அந்த நிலத்திலிருந்த மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்யும் வேலையையும் இந்த நிறுவனம் செய்து வந்தது.

கரும்பு, சீனி மற்றும் காட்டு மரங்களையும் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வசதியாக துறைமுகத்தையும், பெருநிலப்பரப்பையும் இணைக்கும் விதமாக ரயில் பாதை போடப்பட்டது. தஞ்சம் தேடி வந்த மக்களைக் கொண்டு ரயில் பாதை போடும் பணி மேற்கொள்ளப்பட்டது. சாப்பிட்டு உயிர் வாழ மட்டுமே கூலி கொடுக்கும் யுனைடெட் புருட் கம்பனி, இந்த மக்களை அடிமைகளாக நடத்தி, துறைமுகத்தை ஆழப்படுத்தவும், விரிவு படுத்தவும் செய்தது.

கியூபாவின் அரசையும், அரசியலையும் நிர்வகித்தது இந்த அமெரிக்க சீனிக் கம்பனிதான். அமெரிக்காவின் கைப் பொம்மைகளாக அடங்கிக் கிடந்த கியூபா ஆட்சியாளர்களின் நிலையையும், யுனைடெட் புருட் சீனித் தொழிற்சாலையின் ஏகபோக போக்கையும் கண்டு கியூபாவின் சிறுநிலச் சொந்தக்காரர்களாக இருந்த பூர்வீக கியூபா விவசாயிகள், தங்கள் எதிர்ப்புகளைக் காட்டினார்கள். அவர்களின் உணர்வுகளை - அவர்களின் கவலைகளைப் புரிந்துகொள்ளாமல், அவர்களை அடக்குவதற்கு யுனைடெட் புருட் கம்பனி முற்பட்டது. அதற்காகத் தன் சொந்தச் செலவில் ஒரு இராணுவத்தை அந்த நிறுவனம் உருவாக்கியது. அதேபோல் ஏனைய பகுதிகளில் உள்ள மக்களையும் ஒடுக்கி தன் கூலிகளாக வைப்பதற்குத் திட்டமிட்ட இந்த நிறுவனம், காவல் துறையையும் அமைத்தது. கியூபாவில் உருவான முதல் இராணுவமாக சீனிக் கம்பனியின் கூலிப்படை இராணுவமே இயங்கியது. இந்த நடவடிக்கைக்குப் பிறகு ஓரியன்ட் மாநிலத்தின் பெரு நிலப்பகுதி மட்டுமல்ல, முழு மாநிலமே யுனைடெட் புருட் கம்பெனியின் அதிகாரத்திற்குள் வீழ்ந்து கிடந்தது.

கியூபாவின் விவசாயிகளை அடக்கியும், அங்கு தஞ்சம் தேடி வந்த மக்களைக் கூலிகளாகவும், நில வளச் சுரண்டல்களாகவும் தன் வசம் வைத்துக் கொண்டிருந்த யுனைடெட் புருட் சீனித் தொழிற்சாலையில், கரும்பு வயல்களிலிருந்து கரும்பை ஏற்றிக்கொண்டு போய் இறக்கும் வண்டியோட்டியாக வேலை செய்தவர்தான் 'காஸ்ட்ரோ ரஷ்' என்பவர். அவருக்குப் படிப்பு வாசமே தெரியாது. அவரது மனைவியும் படிப்பை அறியாதவர்.

ஓரியன்ட் மாநிலத்தில் பள்ளிக்கூடங்களோ, மருத்துவமனைகளோ கிடையாது. குறைந்த பட்சம் வழிபாட்டுத்தலங்கள் கூட இருக்கவில்லை. சாலைகள் கல்லும் மண்ணுமாக புரையோடிப் போயிருந்தது. மக்களின் அடிப்படை அத்தியாவசியத் தேவைகள் எதையுமே கண்டுகொள்ளாத முடமான அரசாகவே கியூபாவின் அரசு உணர்வில்லாமல் வாதமிழுத்துக் கிடந்தது.

எல்லாமே சீனி ஆலையின் முடிவுதான் என்றாகிக் கிடந்தது.



ஆலையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்காகப் பொருளாதார வசதியும் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருந்தனர். தமது பிள்ளைகளின் படிப்புக்காக தொழிலை விட்டுவிட்டு சில குடும்பங்கள் வேறு மாநிலங்களை நோக்கிப் புலம்பெயர்ந்தன. இருக்கும் சிலர் இந்தக் கவலைகளைப் பரிமாறிக் கொண்டனர். இந்த நிலையைக் கவனிக்காமல் விட்டால் தனது கூலியாட்கள் ஓரியன்ட் மாநிலத்தை விட்டுப் போய்விடுவார்கள் என்று அஞ்சிய சீனி ஆலை நிர்வாகம், ஆலையைச் சூழவுள்ள பகுதியிலேயே ஒரு பாடசாலையையும், ஒரு மருத்துவமனையையும் கட்டியது.

தொழிலாளர்கள் குடியிருக்க வரிசைவரிசையாக அதாவது மலையகத்தில் தொழிலாளர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதுபோல் லயன் அறைகளைக் கட்டிக் கொடுத்தார்கள்.

இந்த மாற்றங்கள் ஓரியன்ட் மாநிலத்தில் நிகழ்ந்த பின்னர், சீனி ஆலையில் வேலை செய்யும் மக்களும், சிறு சிறு கரும்புத் தோட்டங்களை வைத்திருந்த விவசாயிகளும், யுனைடெட் புருட் சீனி ஆலையைச் சூழ்ந்தே வாழ வேண்டியதாக இருந்தது. வாழ்வின் அத்தனை தேவைகளுக்காகவும் சீனி ஆலையின் காலடியில் விழுகின்ற நிலையில் மக்கள் வாழவேண்டியதாகி விட்டது. இதனால், கூலி போதாமைக்காகவோ, நியாயத்துக்காகவோ எவரும் சீனி ஆலையை எதிர்த்துக் குரல் கொடுக்க முடியவில்லை. அடிமைகள் போல் சீனி ஆலையின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வாழவேண்டிய கட்டாயத்திலேயே மக்கள் வாழ்ந்தனர்.


(அசத்தல் தொடரும்)

# கென்னடி மனைவி ஜாக்குலின் மறுமணம்!

**கென்னடி** இறந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, 62 வயது கப்பல் அதிபர் ஒருவரை ஜாக்குலின் மறுமணம் செய்து கொண்டார். இது, உலகத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

## போரின்போது வீரச் செயல்

சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி கென்னடி, 1917இல், அமெரிக்காவில் உள்ள புருக்ளின் என்ற ஊரில் பிறந்தவர். அவருடைய



தந்தை ஜோசப் கென்னடி, புகழ் பெற்ற வியாபாரி ; சினிமாத் துறையிலும், அரசியலிலும் ஈடுபாடு உள்ளவர். இங்கிலாந்தில் அமெரிக்க தூதராகவும் பணியாற்றியவர்.

படிப்பில் சிறந்து விளங்கிய கென்னடி, புகழ் பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்றார்.

இரண்டாவது உலகப் போரின்போது, அமெரிக்கக் கடற்படையில் பணியாற்றினார். அப்போது பல வீரச்செயல்கள் புரிந்து பாராட்டும், பரிசும் பெற்றார். அவருடைய சாகசச் செயல்களை அடிப்படையாக வைத்து ஒரு சினிமாப் படம் தயாரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## திருமணம்

1953இல், கென்னடிக்கு திருமணம் நடந்தது. அப்போது அவர், அமெரிக்க பாராளுமன்ற உறுப்பினர்.

கென்னடியை மணந்த ஜாக்குலின் 1929ஆம் ஆண்டு, அமெரிக்காவில் ஒரு பணக்கார குடும்பதில் பிறந்தவர். பல்கலைக்கழகத்தில் உயர் கல்வி பயின்றவர். சிறந்த அழகி. நாகரீகமாக உடை அணிபவர்.

1961ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடந்தது. அதில், அமோக வெற்றி பெற்றார், கென்னடி.

இளம் வயதிலேயே ஜனாதிபதியான கென்னடியின் புகழ் உலகம் முழுவதும் பரவியது. புத்திசாலியான ஜாக்குலின் அரசியல் விவகாரங்களில் கணவருக்குத் துணையாக இருந்தார்.

கென்னடியும், ஜாக்குலினும் அரசு விழாக்களில் ஒன்றாகக் கலந்து கொள்வார்கள். அந்தப் படங்கள் உலகம் முழுவதிலும் உள்ள பத்திரிகைகளில் பிரசுரம் ஆகும்போது, கென்னடியுடன் சேர்ந்து ஜாக்குலின் புகழும் பரவியது.

## கென்னடி கொலை

1963 நவம்பர் 22ஆம் திகதி கென்னடி சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தச் சம்பவம் உலகத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இளம் வயதிலேயே விதவையாகிவிட்ட ஜாக்குலினுக்காக மக்கள் கண்ணீர் சிந்தினர்.


கென்னடி - ஜாக்குலின் தம்பதிகளுக்கு கரோலின் என்ற மகளும், ஜான் என்ற மகனும் இருந்தனர். கென்னடி இறந்தபோது கரோலினுக்கு 6 வயது; ஜானுக்கு 3 வயது.

(கென்னடி இறப்பதற்கு சில நாட்களுக்கு முன் ஜாக்குலினுக்குப் பிறந்த மூன்றாவது குழந்தை, சிறிது நேரத்தில் இறந்துவிட்டது.)

கென்னடியின் எதிர்பாராத மரணம் ஜாக்குலினை நிலைகுலையைச் செய்தது. அரசியலில், ஈடுபட விரும்பாமல், தன் குழந்தைகளை வளர்ப்பதில் கவனம் செலுத்தினார்.

## மறுமணம்


இந்த நிலையில் 1968ஆம் ஆண்டு அக்டோபர் 20ஆம் திகதி ஒனாசிஸ் (வயது 62) என்ற கோடீஸ்வரரை ஜாக்குலின் திடீரென்று மறுமணம் செய்து கொண்டது,



உலக மக்களை திடுக்கிடச் செய்தது.

கென்னடி எத்தகைய பெரிய தலைவர்! அவருடைய மனைவி இப்படி இன்னொருவரை அதுவும் கிழவரை - மறுமணம் செய்வதா? என்று பலரும் கண்டனம் தெரிவித்தனர்.

ஒனாசிஸ், கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர். பல கப்பல்களுக்கு அதிபதி. பல தீவுகளும் அவருக்குச் சொந்தம். 110 கம்பெனிகளில் அவருக்குப் பங்கு இருந்தது. அவருடைய சொத்து மதிப்பு 2 ஆயிரம் கோடி ரூபா.



பணத்துக்கு ஆசைப்பட்டே ஜாக்குலின் மறுமணம் செய்து கொண்டிருக்க வேண்டும் என்றே அனைவரும் நினைத்தனர்.

## காரணம் என்ன?

ஆனால், தன் மறுமணத்துக்கு என்ன காரணம் என்பதை, சில காலத்துக்குப் பின், ஒரு நிருபரிடம் ஜாக்குலின் விளக்கினார்.

“என் குடும்பத்தையே அழித்துவிடப்போவதாக, கென்னடியின் விரோதிகளிடம் இருந்து எனக்கு மிரட்டல்கள் வந்துகொண்டு இருந்தன. என் மகனையும், மகளையும் காப்பாற்ற எனக்குப் பாதுகாப்புத் தேவை என்பதை உணர்ந்தேன்.

கொலை வெறி எதிரிகளிடம் இருந்து என் குழந்தைகளைக் காப்பாற்றும் நோக்கத்துடன் மறுமணம் செய்து கொண்டேன்.

இரண்டாம் திருமணத்துக்கு நான் ஒரு இளைஞனை தேர்ந்தெடுக்கவில்லை என்பதில் இருந்தே, இல்லற சுகம் கருதி நான் மறுமணம் செய்யவில்லை என்பதை உணரலாம்” என்று கூறினார், ஜாக்குலின்.

1975ஆம் ஆண்டில் ஒனாசிஸ் இறந்தார்.

ஒனாசிஸ் தன் சொத்தில், வெறும் 25 ஆயிரம் டாலர்களை மட்டுமே ஜான் பெயருக்கு எழுதி வைத்திருந்தார்.


ஒனாசிஸ் குடும்பத்தாருடன் ஜாக்குலின் போராடி, தனக்கும், குழந்தைகளுக்கும் 2 கோடி டொலர் (இன்றைய மதிப்பில் சுமார் 90 கோடி ரூபாய்) பெற்றார்.

ஒனாசிஸ் மரணம் அடைந்தபின், ஜாக்குலின் 20 ஆண்டுகள் வாழ்ந்து 1995இல் இறந்தார்.




**அவரும்** போர் வியூகங்களை வகுத்துப் பார்த்தார். ஆனால் வியூகங்களை வகுப்பதற்குள் அமெரிக்க இராணுவம் அவ்விடத்தை வந்தடைந்து விட்டது. போராட முடியாது என்பதைப் புரிந்து கொண்ட வியட்கொங் இராணுவத் தளபதி உடனடியாக எல்லா வியட்கொங் இராணுவச் சிப்பாய்களையும் பின் வாங்குமாறு கட்டளையிட்டார்.

அனைத்து வியட்நாமிய இராணுவத்தினரும் தங்கள் போரிடும் நடவடிக்கையைக் கைவிட்டு பின் வாங்கி ஓடினர் காயப்பட்ட தங்கள் தோழர்களை தூக்கிக் கொண்டு சிலர் ஓடினர். அவர்களின் குறி தங்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதாகவே இருந்தது. பின்வாங்கிச் சென்ற அவர்கள் தாங்கள் இரகசியமாக ஆயுதங்களை பதுக்கி வைத்திருக்கும் பூமிக்கடியிலான சுரங்கம் ஒன்றில் இருந்தார்கள். அனைத்து இராணுவ வீரர்களும் வந்து சேர்ந்து விட்டதை அறிந்து கொண்ட



வியட்கொங் இராணுவத் தளபதி, அவர்களின் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொண்டதன் பின் தங்கள் பங்கிற்கு எப்படி எதிர்த் தாக்குதலைத் தொடங்குவது என்று திட்டமிட்டுக் கொண்டிருந்தார்.

முன்னேறி வெகு விரைவாக வந்து சேர்ந்த அமெரிக்கக் கூட்டுப் படையினர் தங்கள் இலக்குகள் அங்கு இல்லாததால் பெரிதும் ஏமாற்றம் அடைந்தார்கள். அதே வேளை தாங்கள் வருவது முன்னரே வியட்கொங் இராணுவத்தினருக்குத் தெரிந்து விட்டதோ என்று கூட ரிக் யோசித்துக் கொண்டிருந்தான். தெரிந்து கொண்டிருந்தால் நிச்சயம் எதிர்த்தாக்குதல் எங்கிருந்தாவது ஆரம்பமாகும் என்பதை ரிக் அறிந்து வைத்திருந்தான். ஆனாலும் எதிர்த்தாக்குதல் எதனையும் காணவில்லையே என்று யோசித்துக் கொண்டிருந்த ரிக் மேலும் முன்னேறாமல் அந்த முன்னேறிய இடத்திலேயே தங்கள் நிலைகளை பலப்படுத்துமாறு கட்டளையிட்டான். போர் தயாரிப்புகளில் இருந்த இராணுவத்தினர் தங்கள் நிலைகளை பலப்படுத்தினர். அதாவது அவ்விடத்தில் பதுங்கு குழிகளையும் சுரங்கங்களையும் அமைத்து அவர்கள் அவ்விடத்தை இராணுவ முகாமாக மாற்றினர்கள்.

மறுமுனையில் இதனை அறிய முடியாமல் இருந்த வியட்கொங் இராணுவத்தினர் அமெரிக்க இராணுவத்தினரின் போர்ச் சத்தங்கள் ஓய்ந்து விட்டன என்று நினைத்து வெளியேறலாம் என்ற முடிவுக்கு வந்தனர். அவர்களின் முடிவை சற்று பின்தள்ளிப் போடும்படி வியட்கொங் இராணுவத் தலைவர் கட்டளையிட்டார். அதேவேளை தங்கள் இராணுவத்தைச் சேர்ந்த யாரும் குடிமக்கள் யாரையும் இப்பகுதிக்குள் வரவிடவேண்டாம் என்றும் கடுமையான கட்டளையிட்டார். அவரின் கட்டளைக்கான காரணம் முன்னர் புரியாமல் விட்டாலும் பின்பு வியட்கொங் இராணுவத்தினருக்குப் புரிந்தது. தங்களை தேடி யாரும் வரும் போது அவர்களைப் பின்தொடர்ந்து அமெரிக்க இராணுவத்தினர் வந்தால் அனைவரும் இலகுவாக மாட்டிக் கொள்வோம் என்பதை அவர்கள் அனைவரும் புரிந்து வைத்திருந் தார்கள்.

எவ்வாறாயினும் எவ்வளவு காலம்தான் இப்படி இருப்பது என்றும் அவர்கள் யோசித் தார்கள். தங்கள் தலைவரை இதற்கு ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யுமாறு கோரியிருந்தார்கள். வியட்கொங் இராணுவத் தளபதியும் யோசிக்காமல் இல்லை வெளியில் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாமல் இருந்தார். ஆயினும்



தங்களுக்கு தகவல் சொல்லும் உளவாளிகள் கூட தன்னை தொடர்புகொள்ள வில்லையே, என்ன நடத்தது என்று கடுமையாக யோசித்துக் கொண்டிருந்தார். ஆனாலும் அவர்கள் பதுங்கியிருந்த சுரங்கம் வியட்கொங் இராணுவத்தினருக்குப் புதியது. அச்சுரங்கம்



மிகவும் நீண்டிருந்தது. அதன் ஒரு பகுதி நீண்டு கொண்டே சென்றது. அது எங்கு போய் முடிகிறது என்று அறிய முற்பட்ட வியட்கொங் இராணுவத் தளபதி தனது சிப்பாய் சிலரை அச்சுரங்கம் எங்கு முடிகிறது என்பதை அறிந்து வரும்படி அனுப்பி வைத்தார். 3 சிப்பாய்கள் ஆயுதங்கள் சகிதம் சென்றார்கள். அவர்கள் கையில் இராணுவத் தொலைபேசி ஒன்றையும் கொடுத்து அனுப்பினார் வியட்கொங் இராணுவத் தளபதி. சென்றவர்கள் ஒரு நல்ல செய்தியோடு வருவார்கள் என்று அவர் எண்ணியிருந்தார்.


சென்ற இராணுவச் சிப்பாய்கள் சுரங்கத்தின் முடிவை இதோ வந்து விட்டோம் அதோ வந்து விட்டோம் என்று சென்று கொண்டேயிருந்தார்கள். ஆனால் அவர்களால் முடிவைக் காண முடியவில்லை. மிகத் தொலை தூரம் சென்ற பின் அவர்களுக்கு தண்ணீர் ஓடுவது போல் சத்தம் கேட்டது. அது செல்லச் செல்ல மிகவும் அதிகரித்தது. தண்ணீர் வழி ஒன்றிலேயே இச்சுரங்கம் முடிகிறது என்ற முடிவுக்கு வந்த அவர்கள் எந்த நீர் வழி என்று கண்டறியும் முகமாக இன்னும் சென்றார்கள். அங்கு அவர்கள் கண்டார்கள் அருவி ஒன்றினை.

(தொடரும்)



கமல மேவும் திருவே ! நின்மேல்
காத லாகி நின்றேன்
குமரி நின்னை இங்கே - பெற்றோர்
கோடி யின்ப முற்றார்

- சுப்பிரமணிய பாரதியார்



# வேலைக்காரன்



**வேலாபுரி** என்ற ஊரில் மாதவன் என்ற பெரிய பணக்கார மனிதர் இருந்தார். அவர் தனக்கு ஒரு உதவியாளர் வேண்டும் என அறிவித்தார். எனவே, அவரிடம் வேலை கேட்டு வந்தனர் மூவர்

முதலில் வந்தான் பிரபு என்பவன். "நான் படித்தவன், நல்ல வசதியுள்ள குடும்பத்தில் பிறந்தவன். ஆயினும் என் சொந்தக் கால்களில் நிற்க முயற்சித்து தங்களிடம் வேலை தேடி வந்துள்ளேன்," என்று பணிவாகக் கூறினான்.

என்னிடம் வேலை செய்ய விரும்பினால் நீ முதலில் சமையற் கலையைக் கற்று வா என்றார்.

நான் உங்களிடம் காரியதரிசியாக வேலை செய்யலாம் என்று எண்ணி வந்தேன். ஆனால், நீங்கள் என்னை சமையல் கற்றுக் கொள்ளச் சொல்கிறீர்கள். இது எனக்குக் குழப்பமாக இருக்கிறது என்று பதில் அளித்தான்.

நீ என்னிடம் எல்லாவித வேலையும் செய்யத் தயாராயிருப்பின் சமையலும் அதில் ஒரு வேலைதான். வீட்டில் இருக்கும் போது என் மனைவி சமைப்பாள். வெளி இடத்திற்குப் போகும்போது என் உணவுத் தேவைகளை நீ தான் கவனிக்கணும் என்று மாதவன் கூறினார்.

இந்த பதிலை எதிர்பார்க்காத பிரபு, மன்னிக்க வேண்டும் ஐயா! நான் உங்களிடம் எதிர்பார்த்த வேலை இது இல்லை என்று கூறினான். மாதவனும் அவனைத் தேவையில்லை என்று கூறி அனுப்பிவிட்டார்.

அடுத்ததாக குமார் வந்தான்.

ஐயா, நான் படித்தவன், எந்த கடினமான வேலையையும் எளிதாகச் செய்து விடுவேன். எத்தனையோ செல்வந்தர்கள் என்னை வேலைக்கு அழைத்தனர். ஆனால், நான் உங்களிடம் வேலை செய்ய விரும்புகிறேன் என்றான்.

உனக்கு சமையல் செய்யத் தெரியுமா? என்றார்.

எனக்கு மிக நன்றாக சமையல் செய்யத் தெரியும் என்றான்.

சரி! பிரியாணி எப்படி செய்வதுன்னு சொல்லு பார்ப்போம் என்றார்.

அது வந்து...வந்து நான் தனியா செய்ததில்லை. ஆனால், சமாளிச்சுக்குவேன் என்றான்.

இங்கப்பார். சமையல் தெரியாது என்றால் தெரியாதுன்னு சொல். பொய் சொல்லாதே! என்றார்.

சும்மா வேலை கிடைக்கணும்னு பொய் சொன்னேன்! என்றார்

பொய் சொல்பவர்கள் என் காரியதரிசி வேலைக்கு சரிவரமாட்டார்கள் என்று கூறி அவனை அனுப்பிவிட்டார்.

## பாப்பா முரசு சிறுகதை

மூன்றாமவன், ஐயா நான் ஏழை. ஆனால், நான் வேலை செய்யும் இடங்களில் நன்றாக வேலை செய்தால் நிறைய வேலை கொடுத்துவிடுவார்களோ என்று எண்ணி, எங்கேயும் ஒழுங்காக வேலை செய்ததில்லை. ஆதலால் பல முறை வேலையிலிருந்து நீக்கப்பட்டேன். எனது அண்ணனும், அண்ணியும் உதவாக்கரையான என்னை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டனர். பல இடங்களில் வேலை தேடியும் என்னுடைய முன்னாள் நடவடிக்கைகளினால் யாரும் எனக்கு வேலை தரத் தயாராகயில்லை.

இறுதியில் சலிப்படைந்த நான், திருட்டுத் தொழிலில் ஈடுபட்டு சிறை சென்றேன். சிறையில் இருந்த நாட்களில் எனது கடந்த காலத்தை எண்ணி வருந்தினேன். இனியாவது ஒழுங்காக வேலை செய்ய வேண்டும் என முடிவு எடுத்து சிறையில் மிகவும் நன்றாக சமையல் வேலை செய்தேன். எனது நன்னடத்தைக்காக என்னை சீக்கிரம் விடுதலை செய்துவிட்டனர். ஆனால், சிறைக்குச் சென்றவனை வேலையில் எடுத்துக் கொள்ள யாரும் தயாராக இல்லை. நான் இப்போது திருந்தியவன். இனி ஒழுங்காக வேலை செய்வேன். எந்த வேலை கொடுத்தாலும், சிறப்பாகச் செய்வேன். தாங்கள் எனக்கு ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று கெஞ்சினான்.

உனக்கு சமையல் தெரியுமா? என்றார்.

சூப்பரா செய்வேன். உங்களுக்கு என்ன சமையல் செய்யணும் இப்பவே செய்கிறேன் என்றான். சிறிது நேரத்தில் அவன் சமையலில் மயங்கிய மாதவன் அவனையே தேர்வு செய்தார்.

அச்சச்சோ...ஒருதிருடனுக்கா வேலை கொடுத்தீர்கள்? என்றாள் மனைவி.

சிறுவயதில் வேலை ஒழுங்காகச் செய்யாதவன், பல இடங்களில் வேலையிலிருந்து நீக்கப்பட்டவன். சிறைக்குச் சென்றவன். ஆனால், சிறையிலிருந்த சமயம் மனம் திருந்தி, இனி ஒழுங்காக உண்மையாக உழைக்க வேண்டும் என்ற உறுதி பூண்டான். அவன் என்னிடம் எதையும் ஒளிக்கவில்லை. தன்னுடைய தவறுகளை ஒப்புக் கொண்டு இனி அவ்வாறு செய்யமாட்டேன் என்கிற அவனுடைய உறுதியை நான் மெச்சுகிறேன். அவன் சொற்படியே அவன் நாணயமானவனாக இருப்பான் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. இவ்வாறு மனம் திருந்திய மனிதர்களுக்கு கட்டாயம் யாராவது வாய்ப்புத் தர வேண்டும். அப்படி நாம் தராதபோது தான் மீண்டும் திருடுவதற்குச் சென்று விடுவர். நாமே ஒரு திருடனை உருவாக்கக்கூடாது என்றார்.

# ஆத்திசூடி

## சொல் சோர்பு படேல்

நீ பிறருடன் பேசும் போது ஐயமும் மயக்கமுமற்ற தெளிவான வார்த்தைகளில் உன் கருத்துக்களைச் சொல்.

-ஔவையார்

எஸ். நிரஞ்சலா, கண்டி.


# பணிவுடன் பழகுங்கள்

சின்னச் சின்ன அரும்புகளே
சிரித்துப் பேசி மகிழுங்களேன்!
அம்மா, அப்பா ஆசிரியர்க்கு,
அடங்கி பணிவுடன்
பழகுங்களேன்!
பெரியோர் கூறும் அறிவுரையை,
பொறுப்புடன் கேட்டு நடந்திடுவீர்!
பொறாமை, வஞ்சம்,
கோபந்தனை,
பொசுக்கி போட்டு வாழ்ந்திடுவீர்!
பொறுமை, அன்பு,
அஹிம்சைதனை,
புவியில் மிஞ்ச ஏதுண்டு!
புரிந்தே நீவிர் நடந்திடுவீர்!
புதுமை பலவும் செய்திடுவீர்!



# அதிசய உலகம்

## தங்கக் குருவி



**த**ங்கக் குருவி என்ற ஒரு வகைக் குருவியானது, தன் ஆயுட் காலம் முழுவதும் பூமியின் வட கோடியில் இருந்து தென் கோடியை நோக்கியும் பின்னர் தென் கோடியிலிருந்து வட கோடியை நோக்கியும் பறந்து கொண்டே இருக்கும். இதற்கு குளிர் காலம், கோடைக் காலம் என்று எதுவுமே கிடையாது.


வாழ்நாள் முழுவதும் வசந்த காலம்தான்.

## தீ எறும்பு...!



**அ**மெரிக்காவின் தென் பகுதியில் ஒரு வகை அபூர்வ எறும்புகள் காணப்படுகின்றன. இந்த எறும்பு கடித்தவுடன் தீப்பிடித்து எரிவது போன்ற வலி ஏற்படுகிறது. இதனால் இதற்குத் தீ எறும்பு என்று பெயர் வந்தது. இவை எப்போதும் சிறு சிறு பூச்சிகளைப் பிடித்து தின்று கொண்டே இருக்கின்றன. இந்த எறும்புகளின் புற்று இரண்டடி உயரம் இருக்கும். இதை யாராவது கலைத்து விட்டால் அவ்வளவுதான். கலைத்தவர் களைக் கூட்டம் கூட்டமாகப் பாய்ந்து சென்று கடிக்கும். இந்த எறும்பிடம் கடிபட்டவர்கள் உடனடியாகச் சிகிச்சை எடுக்காவிட்டால் உயிர் இழப்பது உறுதி.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்தினை இணைத்து வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 05.12.2006

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 671**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
**கொழும்பு**

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 669

**பரிசுக்குரியவர்:**
**ஆர். சதீஸ்குமார், தரம் - 05, கனுல்வெல முஸ்லிம் கனிஸ்ட வித்தியாலயம், பிபிலை**

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கமிலஸ் கிருத்திகன், இல. 9, அம்மன் கோவில் வீதி, பண்டாரிகுளம், வவுனியா. | கா. பிரசாந்தி, 89, பாபாபதி இல்லம், 89, ரொசிட்டா வீடமைப்புத் திட்டம், கொட்டகலை. |
| ரம்யா தயாபரன், 248/38, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு -13. | எஸ். வக்சாந்தன், தரம் - 3பி, இந்து கல்லூரி, பம்பலப்பிட்டி. |
| டி. ஆர். ஹெவின்ஸ்ரன்ஸ், கிங்ஸ்ரன் சர்வதேசக் கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு -15. | ஜெ. மயூரன், தரம் - 03, தூய தோமாவின், கல்லூர்ரி, பண்டாரவளை. |
| மர்ஸியா நாபிர், பாகிர் மாகார் ஒழுங்கை, மருதானை, பேருவல. | த. அனுப், மூர்வீதி, மன்னார். |
| எஸ். எப். ரஸ்மா, 3ஆம் குறுக்குத் தெரு, புத்தளம். | வி. சுதர்சன், குருமண் காடு, வவுனியா. |


# சில விடுகதைகள்

1. கறுப்பன் குரல் ஒலித்தால் கானகத்தில் கொண்டாட்டம் அவன் யார்?
2. தேடித்தேடி கிடைத்த உணவை கூடியிருந்து உண்பான் அவன் யார்?
3. தடுக்குப் போட்டேன் எடுக்க முடியலே அது என்ன?
4. கடல் உண்டு அலையில்லை நதியுண்டு கரையில்லை அது என்ன?
5. மரத்தைத் தலையில் சுமப்பான் பயத்தை மனதில் சுமப்பான் அவன் யார்?
6. கண்களிலிருந்தும் பாராதவன் கண்ணீருக்கு மட்டும் பஞ்சமில்லை அவன் யார்?
7. தண்ணீரில் பலம் தரையில் ஜடம் அது என்ன?
8. அடித்தால் வலி கடித்தால் ருசி அது என்ன?
9. பவளத்தோட்டத்துக்குள் பதுமைராணி அவள் யார்?
10. கைக்குள் அடங்கியபடி காலம் காட்டுவான் அவன் யார்?

**விடைகள்**
1. இடி
2. காகம்
3. கோலம்
4. உலக வரைப்படம்
5. மான்
6. வெங்காயம்
7. முதலை
8. கரும்பு
9. பற்கள் - நாக்கு
10. கடிகாரம்.




**கிற்றார்** என்றொரு இசைக்கருவி உண்டு. அதன் நரம்புகளிலிருந்து **எழுப்பப்படும் இசையே இசைப்பிரியர்களைச் சொக்க வைக்கும். வூக்லாண்ட்ஸிலுள்ள** விஞ்ஞான தொழில்நுட்ப அகடமியைச் சேர்ந்த பதினொரு மாணவர்களும் அவர்களது பௌதீகவியல் ஆசிரியரான ஸ்கொற் றிப்ரோ என்பவரும் இணைந்து உலகிலேயே மிகப் பெரிய கிற்றார் இசைக்கருவியை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளார்கள். 43 அடி 7 1/2 அங்குலம் உயரமும் 16 அடி 5 1/2 அங்குலம் அகலமும் கொண்ட இந்த இசைக் கருவியில் எட்டு அங்குலத் தடிப்பும், 25 அடி நீளமான நரம்புகள் பொருத்தப்பட்டிருந்தன. இந்த இசைக் கருவியின் நான்கு மரத் துண்டுகளையும் ஏனைய உபகரணங்களையும் எடுத்துச் செல்வதற்கு இரு தடவைகள் சரக்கு வண்டிகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. நரம்புகளைப் பொருத்துவது இவர்களுக்கு இமாலயச் சவாலாக அமைந்தது. இருந்தாலும் அதனைச் சமாளித்து கிற்றாரை இசைக்கச் செய்து, சாதனை நிகழ்த்தினர். 43 அங்குல கிற்றாரிலிருந்து 43 அடி உயரமாக கிற்றார் வரை உருவாக்கிச் சாதனை படைத்து விட்டார்கள். 2000ஆம் ஆண்டு ஜூன் ஆறாம் திகதி இந்த கிற்றார் முதன்முதலாக இசை எழுப்பியது.








**க**ண்ணிவெடிகள், பொறிவெடிகள், அமுக்கவெடிகள், வெடிகுண்டுகளென்று யுத்தப் பகுதிகளில் வெடிக்காமல் இருந்துவிட்டு திடீரென வெடித்து மக்களைப் பலியெடுக்கும் குண்டுகளை 'அமைதிக் கொலையாளிகள்' என்று அழைப்பதுண்டு, நீங்கள் படத்தில் பார்ப்பது ரோபோ என்று அழைக்கப்படும் இயந்திர மனிதன். சந்தேகத்துக்கிடமான பொருட்களை தானாகவே தேடிப் பிடித்து அவை குண்டுகளாக இருந்தால் அவற்றைச் செயலிழக்கச் செய்யும் திறமை கொண்டது இந்த ரோபோ. மெக்ஸிக்கோ நகரில் வெடிகுண்டைத் தேடித் திரியும் ரோபோவையே படத்தில் காண்கிறீர்கள்.




**செ**ன்னையைச் சேர்ந்த மிருதங்க வித்துவான் ரி.ஆர். சுந்தரேசன் என்பவர் 42 மணித்தியாலங்கள் இடைவிடாது தொடர்ச்சியாக மிருதங்கம் வாசித்து உலக சாதனை ஒன்றினை நிகழ்த்தியுள்ளார். இயற்கை அன்னை சீற்றம் கொள்ளாமல் அமைதியாக இருக்கவேண்டுமென ஆசி கோரி, இந்த இடைவிடாத மிருதங்க நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சென்னையிலுள்ள 'சிபாஸ்' கேட்போர்கூடத்தில் 2005ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அதிகாலை ஐந்து மணிக்கு தனது சாதனை நிகழ்ச்சியை ஆரம்பித்த சுந்தரேசன் மறுநாள் இரவு, பதினொரு மணிவரை தொடர்ச்சியாக மிருதங்கம் வாசித்தார். தனது தந்தையாரான ரி.ஆர். ரங்கராஜனிடம் மிருதங்கத்தின் ஆரம்பப் பயிற்சி பெற்ற இவர் தற்போது சென்னையிலுள்ள அகில இந்திய வானொலி நிலையத்தில் முதற்தரக் கலைஞராக விளங்குகிறார். இதற்கு முன்னர் 36 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக மிருதங்கம் வாசித்து, நிகழ்த்தப்பட்டிருந்த சாதனையை சுந்தரேசன் முறியடித்துள்ளார்.




**வெ**ப்பக்காற்றைப் பயன்படுத்திப் பறக்கும் பலூனொன்றிலிருந்து ஏககாலத்தில் குதித்துப் பதினாறு பேர் சாதனை படைத்திருக்கிறார்கள். நிமிடத்துக்கு 500 இலிருந்து 800 அடி வரையான வேகத்தில் மேலெழும்பிய இந்த பலூனிலிருந்து 10500 அடி உயரத்திலிருந்து பாரசூட் மூலம் குதித்திருக்கிறார்கள். பலூனின் அடியில் பொருத்தியிருந்த பெட்டி வடிவிலான ஓர் கருவியிலிருந்தே குதித்தார்கள். பிரிட்டனிலுள்ள சிப்ஸன் விமான தளத்திற்கு மேலாகப் பலூன் சென்று கொண்டிருக்கையில் இச் சாதனை நிகழ்த்தப்பட்டது. பத்து மீற்றர் விட்டமும் 314 சதுர மீற்றர் பரப்பளவும் கொண்ட மென்மையான தரையிறங்கும் பகுதியொன்றும் இதற்கென விசேடமாக அமைக்கப்பட்டிருந்தது. மலசல கூடத்தில் பயன்படுத்தப்படும் வெல்வெட் ரோல்களைக் கொண்டே இந்த மென்மையான இறங்கும் பகுதி உருவாக்கப்பட்டிருந்தது. இதற்கென ஐயாயிரம் வெல்வெட் ரோல்கள் பயன்படுத்தப்பட்டன, 2002 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் திகதி இச்சாதனை நிகழ்த்தப்பட்டது.




**உ**ருக்கிலான சில்லுகளுடன் விசேடமாக உருவாக்கப்பட்ட ரயில் வண்டி, மணிக்கு ஐந்நூறு கிலோமீற்றர் (மணிக்கு 311 மைல்கள்) வேகத்தில் ஓடிச் சாதனை புரிந்துள்ளது. ரிஜிவி என்ற ஆய்வு மையம் மற்றும் அபிவிருத்தி மையம் நடத்திய பரீட்சார்த்த முயற்சியொன்றின் போதே இச்சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. "புதிய தண்டவாளத்தில் புதிய ரயிலுடன் இச் சாதனையை நிகழ்த்துவது சாத்தியமானது. ஆனால், வருமானத்திற்காக நடத்தும் ரயில்களை இந்த வேகத்தில் ஓட வைக்க முடியாது. மணிக்கு 360 கிலோமீற்றர் (224 மைல்கள்) வேகத்திலேயே ஓட வைக்க முடியும்" என்கிறார் அந்த நிறுவனத்தின் பணிப்பாளரான றோகர் ஜெரின். "இருந்தாலும் அதிவேக தொழில்நுட்பம் தயாராகி வருகின்றது. எதிர்காலத்தில் இன்னும் கூடிய வேகத்தில் ரயில்களை ஓட வைக்க முடியும்" என்றும் றோகர் எதிர்வு கூறுகிறார்.



சித்தார்த் - ஜெனிலியா

# திரிஷா - குஷ்பூ இன்டர்நெட்டில் ஆபாசம்!

இணையதளம் தற்போது நாளுக்கு நாள் பலராலும் பயன்படுத்தும் அளவுக்கு அதன் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அலுவலகப் பயன்பாடு, தகவல் சேகரிப்பு, தொழில் நுட்பம், கல்வி, மருத்துவம் உட்பட பல்வேறு துறைகளில் இணையதளம் பயன்படுத்தப்படுகிறது.

இதில் நண்பர்கள், தோழர்களுக்கு இ-மெயில் அனுப்பவும், தங்களுக்கு வரும் இ-மெயில்களைத் தெரிந்து கொள்ளவும் பலர் இணையதளத்தைப் பயன்படுத்துகின்றனர். மேலும் சிலர் 'சாட்டிங்'கில் ஈடுபடுகின்றனர். பலர் அரிய தகவல்கள், படங்களைச் சேகரிக்கிறார்கள்.

மேலும் சிலர், வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தை பெற முயல்கிறார்கள். இதனால் இணையதளப் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது என்பதில் சந்தேகம் இல்லை. எந்த அளவுக்கு நல்ல வகைகளுக்காகப் பயன் படுத்தப்படுகிறதோ, அந்த அளவுக்கு இணையதளத்தில் இளைஞர்கள் கெட்டுப் போகவும் வாய்ப்பு உள்ளது.

அதுதான் 'போர்னோ கிராபி' எனும் ஆபாச இணையதளங்கள். இணையதளத்தில் மட்டும் பல்லாயிரக்கணக்கான ஆபாச தளங்கள் உள்ளன. இதில் பெண்களின் படங்கள் தாராளமாக உள்ளன.

தற்போது நடிகைகளின் படங்களும் அதிகளவில் இணையதளத்தில் காணப் படுகின்றன. பெரும்பாலும் நடிகைகளின் படங்கள் இணையதளக் கவர்ச்சிக்கே பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

வெப் சைட்டுகள் சிலவற்றை ஓப்பன் செய்யும் போது நடிகைகளின் படங்கள் வந்து கண் சிமிட்டுகின்றன. அதில் குஷ்பு, திரிஷா போன்ற நடிகைகளின் முழு நிர்வாண படங்கள் உள்ளன.

நடிகை குஷ்பு, படுக்கை அறையில் துணி எதுவும் இல்லாமல் முழு நிர்வாணமாக படுத்து இருப்பது போன்ற காட்சி உள்ளது.

இதுபோல் நடிகை திரிஷா, உடற் பயிற்சி அறையில் உடற் பயிற்சி செய்வது போன்ற காட்சி உள்ளது. இந்தப் படங்களை எப்படி, யார் இணையதளத்தில் உலவ விடுகிறார்கள் என்பது தெரியவில்லை.



நிலா

# சி னி வி சி ட்

## மாதவன், கிரண் படங்களில் ஆபாசம்!

மாதவன் நடித்த 'ரெண்டு' படம் படப்பிடிப்பு முடிந்து தணிக்கைக் குழுவுக்கு அனுப்பப்பட்டது. இது குஷ்பு தயாரித்துள்ள படம் ஆகும். சுந்தர் சி.இயக்கியுள்ளார்.

இந்தப் படத்தில் மாதவன், இரு வேடத்தில் நடித்துள்ளார். ஒரு கேரக்டரில் பொருட்காட்சியில் வேலை பார்க்கிறார். இன்னொரு கேரக்டரில் தொடர் கொலைகள் செய்கிறார். கொலை செய்யும் கேரக்டரில் நிறைய வன்முறை இருப்பதாக தணிக்கை குழுவினர் கருத்துத் தெரிவித்தனர்.

அக்காட்சிகள் படத்துக்கு அவசியம் என்று தயாரிப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அப்படத்துக்கு 'ஏ' சான்றிதழ் கொடுத்து ரிலீசுக்கு அனுமதித்தனர். வடிவேலு, ரீமாசென் ஆகியோரும் இதில் நடித்துள்ளனர்.



ஷக்தி - கௌரி மஞ்சால்
தொட்டால் பூ மலரும்

## அஜீத்துக்கும் எனக்கும் ஜோடிப் பொருத்தம் - அசின்

'கமல், விஜய், அஜீத் போன்ற பெரிய நடிகர்களுடன் நடிக்கிறேன். இது என் அதிர்ஷ்டம். கடவுள் ஆசீர்வாதமும் இருக்கு. அஜீத்துடன் 'ஆழ்வார்' படத்தில் ஜாலியா நடிக்கிறேன். அஜீத்துக்கு நான் 'ரோபோ'ன்னு பெயர் வெச்சிருக்கேன். பெயருக்கேத்த மாதிரி விறுவிறுப்பாகவும், வேகமாகவும் நடிக்கிறோம்.

'வரலாறு' படத்தைப் போல் 'ஆழ்வார்' படத்திலும் எங்கள் ஜோடிப் பொருத்தம் சூப்பர். விஜய்யுடன் 'போக்கிரி' படம் பண்ணுறேன். ஆடல் பாடல்னு கலக்கலா சூட்டிங் நடக்குது. விஜய் வழக்கம் போல் ஜாலியா நடிக்கிறார்.

'போக்கிரி' தெலுங்கில் ஏற்கனவே ரிலீசாகி இருக்கு. அதை அப்படியே எடுக்காமல் கதையில் சில மாறுதல் செய்து எடுக்கிறார்கள். பிரபுதேவா இயக்குவதால் படப்பிடிப்பு உற்சாகமாகப் போயிட்டு இருக்கு.




கரன் - உதயதாரா
தீநகர்

கமலுடன் 'தசாவதாரம்' படத்தில் நடிக்கிறேன். அவரோடு நடிக்கும் முதல் படம் இது. என்னை சந்திக்கிறவங்க கமல் 10 வேடத்தில் நடிக்கிறார். உங்களுக்கு எத்தனை வேடம் என்று கேட்கிறார்கள். அது ரகசியம். சொல்ல முடியாது. கமலிடம் நிறைய கற்றுக்கொள்ள வேண்டி உள்ளது. கமலிடம் நடிப்பில் மட்டுமின்றி எல்லா விஷயத்திலும் ஈடுபாடு காட்டுறேன். ரொம்ப வினோதமான முறையில் கமல் நடிக்கிறார்.

'நம்பர் ஒன்' நடிகையாகணும் என்றெல்லாம் நான் நினைப்பதில்லை. நல்ல நடிகைன்னு பெயர் கிடைத்தால் போதும். 'அசின்' என்றால் பரிசுத்தம் என்று பொருள். 'என் பெயர் போலவே சினிமாத்துறையில் சுத்தமா இருக்க விரும்புகிறேன்.' இவ்வாறு அசின் கூறினார்.





# ‘சிவாஜி’யில் ரஜினி கரகாட்டம்

இயக்குநர் சங்கர் என்றாலே பிரமாண்டத்துக்குக் குறைவு இருக்காது. ரஜினியின் சிவாஜி படத்துக்காக அவர் இதுவரை இல்லாத அளவுக்கு காட்சிக்குக் காட்சி இரட்டிப்பு மடங்கு பிரமாண்டத்தைக் கொண்டு வந்துள்ளார்.

குறிப்பாக ரஜினி ஆடும் பாடல் காட்சிகள் பிரமாண்டத்தின், பிரமிப்பின் உச்சியைத் தொடும் அளவுக்குப் படமாக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

அதிலும் ஒரு கிராமிய மணம் கமழும் பாடல் உலகத் தமிழர்கள் அனைவரிடமும் பரபரப்பாகப் பேசப்படும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. மராட்டிய மாநிலம் சதாரா பகுதியில் வாய் எனும் மலைப் பிரதேசத்திலும், பஞ்ச தனி அணைக்கட்டிலும் இந்தப் பாடல் காட்சி 8 நாட்கள் படமாக்கப்பட்டது. இதில் தமிழகம், ஆந்திரா, கேரளா, மராட்டிய மாநிலங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கிராமியக் கலைஞர்கள் பங்கேற்றனர்.

இந்தப் பிரமாண்டத்துக்காக சங்கர் எடுத்த முயற்சிகள் ஏராளம். தமிழகத்தில் இருந்து முதலில் அவர் எதிர்பார்த்தது போல நாட்டுப்புறக் கலைஞர்கள் கிடைக்கவில்லை. கடைசியில் புஷ்பவனம் குப்புசாமி மூலம் முகப்பேரில் கலைக் கோட்டம் நடத்தி வரும் எம்.அன்பரசனை அணுகினார். அன்பரசன் 2 நாள் அவகாசத்தில் மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களுக்குச் சென்று 64 நாட்டுப்புறக் கலைஞர்களைத் தேர்வு செய்து ஒருங்கிணைத்தார்.

அதன் பயனாக 64 கலைஞர்களும் சிவாஜி படத்தில் ரஜினியுடன் சேர்ந்து ஆடும் அரிய வாய்ப்பைப் பெற்றனர். ரஜினியுடன் இவர்கள் மயிலாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை என்று விதம் விதமாகக் கிராமிய நடனங்களை ஆடித் தூள் கிளப்பியிருக்கிறார்கள். ரஜினியும் இந்தக் காட்டில் பட்டையைக் கிளப்பியுள்ளாராம்.

இந்தப் பாடல் சூட்டிங் நடந்த 8 நாட்களும் 64 கலைஞர்களும் ரஜினியின் பாசத்தையும் துளி கூடப் பந்தா இல்லாத பண்பையும் கண்டு, அனுபவித்து நெகிழ்ந்து போய் விட்டார்கள். சூப்பர் ஸ்டார் ரஜினி இவ்வளவு இறங்கி வந்து அன்பாகப் பழகுபவரா என்று 64 கலைஞர்களும் மெய்சிலிர்த்துவிட்டனர். 64 பேரிடமும் தனித்தனியாகக் குடும்ப சூழ்நிலையை விசாரித்து, அவர் தன் உணர்வையும் பகிர்ந்து கொண்டதை எத்தனை ஜென்மம் எடுத்தாலும் மறக்க முடியாது என்கிறார்கள்.



தனுஷ் - ஸ்ரேயா
திருவிளையாடல் ஆரம்பம்

# நடிகைகளுக்கு ஐந்து நட்சத்திர ஹோட்டல் ரத்து!! - தயாரிப்பாளர்கள் சங்கம் அதிரடி!

சவுக்கை கையிலெடுத்திருக்கிறார் தயாரிப்பாளர்கள் சங்கத் தலைவர் ராம.நாராயணன். அவரது முதல் அடி விழுந்திருப்பது நடிகைகளின் மீது. தயாரிப்பாளர்கள் செலவில் நடிகைகள் ராஜ வாழ்க்கை வாழ்வது நெடுங்காலமாக இருந்து வருகிறது. அதுவும் வெளி மாநில நடிகை என்றால் கேட்க வேண்டாம். ‘ஐந்து நட்சத்திர ஹோட்டலில்தான் தங்குவேன். மினரல் வாட்டரில்தான் முகம் கழுவுவேன்’ என்று லம்பாக ஒரு பில்லை தீட்டி விடுவார்கள். நிலா, நயன்தாரா, அசின், ரீமாசென் என இந்த நடிகைகளின் பட்டியல் ரொம்ப நீளம்.

இவர்களின் ஐந்து நட்சத்திர வாசத்திற்கு மட்டும் நாளொன்றுக்கு அரை லட்சம் வரை பணத்தை அழுகிறார் தயாரிப்பாளர். இது தவிர கேரவன் வசதி.

மலையாளப் படங்களில் பந்தா செய்யாமல் நடித்துக் கொடுக்கும் கோபிகா, மீரா ஜாஸ்மின் போன்றவர்களே தமிழுக்கு வந்தால் கேரவன் கேட்கிறார்கள். இதனால் தயாரிப்பாளர் இழப்பது நாளொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்.

இந்த அதிகப்படிச் செலவைக் குறைப்பதற்காக, நடிகைகளுக்கு அவர் யாராக இருந்தாலும் த்ரீ ஸ்டார் ஹோட்டலே என முடிவு செய்திருக்கிறது தயாரிப்பாளர்கள் சங்கம். அதுபோல் கேரவன் வைத்துக் கொள்வது அவரவர் விருப்பம். காசு மட்டும் தயாரிப்பாளரின் பாக்கெட்டிலிருந்து எடுக்கக்கூடாது.

அதேபோல் ஸ்டோரி டிஸ்கஷன் என்ற பெயரில் ஹோட்டலில் ரூம் போட்டு ஸ்காட்ச் குடிப்பதற்கும் தடை போட இயக்குநர்களுடன் ஆலோசனை நடத்தத் . திட்டமிட்டிருக்கிறது தயாரிப்பாளர்கள் சங்கம்.

அப்படியே பிரமாண்ட பூஜை, வழவழ அழைப்பிதழ் ஆகியவற்றிற்கும் தடா போட்டால் தயாரிப்பாளர்களுக்குப் பல லட்சங்கள் மிச்சம்.



டி.ஆர் - மும்தாஜ்
வீராசாமி

முகாமில்: ஸ்ரேயா - அஜீத் - அசின்




நமீதா

## கார் மீது பஸ் மோதல் : நடிகர் மம்முட்டி காயத்துடன் தப்பினார்.

மலையாள திரையுலகின் ‘சூப்பர் ஸ்டார்’ மம்முட்டி தற்போது ‘பலுங்கு’ என்ற படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தை டைரக்டர் பிளஸ்சி இயக்கி வருகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு தற்போடு இடுக்கி அருகே உள்ள கலாவரிமவுண்ட் பகுதியில் நடந்து வருகிறது. இப்படப்பிடிப்பில் கலந்து கொள்வதற்காக அவர் காரில் சென்று கொண்டிருந்தார். கார், இடுக்கி அருகே உள்ள வழவரா பகுதியில் சென்று கொண்டிருந்தபோது எதிரே வந்த தனியார் பஸ் பயங்கர சத்தத்துடன் மோதியது.

இந்த விபத்தில் மம்முட்டியின் கைகளில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் கட்டப்பனாவில் உள்ள செயின்ட் ஜான் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சைக்குப் பிறகு அவர் கலாவரி பகுதிக்குப் புறப்பட்டுச் சென்று படப்பிடிப்பில் கலந்து கொண்டார்.




தருன் - ரீமாசென்
இவன் யாரோ

# தேசிய விருதுக்கு ‘ஈ’ படம்

ஜீவா, நயன்தாரா நடித்த ஈ படம் தீபாவளிக்கு ரிலீசானது. இந்தப் படத்துக்கு கூடுதல் பெட்டிகள் கேட்டு விநியோக தரப்பில் வற்புறுத்தப்படுகிறது. இதையடுத்து கூடுதலாக 25 பிரிண்ட்கள் போடத் தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி முடிவு செய்துள்ளார். தேசிய விருதுக்கு ஈ படத்தை அனுப்பப் போவதாகவும் அவர் கூறினார்.

ஈ படத்தில் வித்தியாசமான கேரக்டர் பண்ணியதற்காக பல தரப்பில் இருந்தும் பாராட்டுக்கள் குவிவதாக ஜீவா தெரிவித்தார். திரையுலகில் தனக்கு திருப்புமுனையை ஈ படம் ஏற்படுத்தியதாகவும் கூறினார்.

ஈ படத்தில் வேறுபட்ட கதாபாத்திரத்தில் நடித்து பெரிய 10 நடிகர்கள் பட்டியலில் ஜீவா இடம் பிடித்துள்ளார் என்று டைரக்டர் ஜனநாதன் கூறினார். ஈ படம் தெலுங்கிலும் டப்பிங் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.




## குரல் கொடுப்போம்!

வல்லமையில்லாத
வாய் வீச்சால்
பிரயோசனமில்லை!
வறுமை தொலையாத
வீட்டில்
வளமில்லை!

கல்லில்லாத
சீமெந்துக் கலவையால்
பலமில்லை!
கரையில்லாத
கடல் இல்லவேயில்லை!
பல்லில்லாதபோது
சொல்
தெளிவில்லை!

பார்வையில்லாதவனுக்கு
ஒன்றுமே
தெரிவதில்லை!
வில்லில்லாமல்
கணையை
விடுவதில்லை!
வெற்றி வேலை
நம்பினோர்க்கு
பயமேயில்லை!

நெல்லில்லாமல்
அரிசியில்லை!
நிம்மதியில்லாத போது
வாழ்க்கையில்
நிறைவேயில்லை!
அல்லல் தரும் போர்
தேவையில்லை - என்று
அமைதியை ஏற்படுத்த
கொடுப்போம் குரலை!

*—கவிக்குயிலன்*
*சேனையூர் – 06.*

## சிருஸ்டியங்கள்

சிந்தனைச் சுடரேற்று!
அறிவின் விழி திற...
சிருஸ்டியம் படி!
விரிந்து பரந்திருக்கும்...
மனசின் விசாலம்
அளந்து முடி!

சுற்றங்கள்
உன் கையில்
தந்து விட்ட
உளி கொண்டு...
செதுக்கி முடி!
பாரெங்கும் உன்
சிருஸ்டியங்கள்
சிருங்காரிக்கட்டும்.

அசிரத்தை
அலட்சியம்
அயர்ச்சி
மொத்தமாய் முழுசையும்
தகனமிடு!
அனுராகம் மீட்டு!
அரவிந்த புன்னகையில்...
அனுபவம் அள்ளி முடி!

தேடு!
தேசம் தொடங்கி
தேசாந்தரம் வரை
தேடு!

புதிய பதியங்களுக்கு
மனசை
தயார் படுத்து!
அடிக்கடி உன்னை - நீ
புதுப்பித்துக் கொள்!
புத்தாக்கம் படைத்துப் போ!
அதோ உனக்காய்
இன்னும்...
இன்னும்...
புதிய பிரளயங்கள்.

*—சிவனு மனோஹரன்*
*ஹட்டன்*

## கண்ணாமூச்சி ஏனடி...!

நீ
கண்டு கொள்ளாமல்
போன நாட்களில்
உருப்படியாய் எழுதிய
ஓரிரண்டு கவிதைகள்...!

உன்னைக்
காண முடியாத
இறுக்கமான இரவுகளை
எவ்வாறு கழிப்பதென்று
இதயத்திற்கு
சொல்லிக் கொடு...!

இந்தப்
பிச்சைக்காரக் கவிஞனின்
கவிதைகள்
பிரபல்யம் அடைய
பிரகடனம் செய்தது
அவள்தான்...!

காதலிக்கக் கூடாதென்ற
இறுமாப்போடு
இருந்தேன் - உன்
சுவாசத்தை வீசி - என்னை
சுக்கு நூறாக்கினாய்...!

என் சந்தேகமெல்லாம்
ரணம்,
அவஸ்தை,
வலிகளெல்லாம்
ஆண்களுக்கு மட்டும்தானா?

*—நஸீம் ரூமி,*
*புத்தளம்.*

## வறுமை

வறுமை மலர்கள்
தினசரி மலர்கையில்
குற்றங்கள் குறைவதென்பது
சாத்தியமற்றது

அடிமேல் அடிக்கையில்
புனிதஸ்தலமும்
பாவத்தில் ஈடுபடும்
பிழைகளையும் ஆதரிக்கும்

துரும்பளவு தீமைக்கு
அஞ்சி நடுநடுங்கியது
மாட தூணளவு கண்டும்
காணாதிருக்கும்

வறுமைதான்
நந்தவனத்தை
நரகவனமாக்கிறது

இளசுகளின்
இனிமைதனை
தீ...பொசுக்குகிறது

பாதைகள்
தலை கீழாவதால்
வேதனை படரும்
அலம்பலாகிறார்கள்

அடியுதை அதட்டல்களாலும்
அடிமையாகிறார்கள்

ஓ!...
இவர்கள் தான்

மனிதமுள்ள
மிருகமாகிறார்கள்.

*—ஆயிஸா றிஸ்வின்,*
*மூதூர்.*

## எனக்குள் நீ!

மலர்களில் உன்னை
தேடியபோது
நீ
தேனாக மாறி எனக்கு
தித்தித்தாய்!

காற்றில் உன்னை
தேடியபோது
நீ
தென்றலாக என்னை
வருடிச் சென்றாய்.

கவிதைக்குள் உன்னை
தேடியபோது
நீ
அர்த்தங்களாக அதற்கு
அழகு சேர்த்தாய்!

காதலில் உன்னை
தேடிய போது
நீ
எனக்குள் இருந்து
உயிர்ப்பித்தாய்.

*—எஸ்.ஜசி,*
*ஒட்டுசுட்டான்.*


## நட்பு!

பூமியைப் புதுப்பிக்கும்
புத்துணர்வு நட்பு!
செப்பனிடாத ஜீவிதத் தெருக்களை
இனிதே செப்பனிட்டு
இதயத்தில் நிலைத்து நிற்கும்
நித்திய தீபம் நட்பு!
எதிர்பார்ப்புகளில்லாத
சுயநலன்களில்லாத
உறவில் போலியில்லாத
நினைவில் வேஷமில்லாத
உயிரோவியம் நட்பு!


பெண்மையின் பெருமை கற்பு
உலகின் உன்னத கிரீடம் நட்பு!
பாசம் தேடி அலைகின்ற
இந்தப் பாரினிலே
மலிவாய்க் கிடைத்திடும்
கூட்டுறவுக் கடை நட்பு!

*-ஏ.பி.முஹம்மட் இர்ஸாத்,*
*கல்முனை – 07.*

## பேனா நண்பர் பகுதி – பேனா நண்பர் பகுதி



பெயர் : ஜே. லிலிசன்
வயது : 21
முகவரி : 515, காலி வீதி,
கல்கிசை.
பொழுதுபோக்கு : வழமையானவை.



பெயர் : சி.நீதன்
வயது : 19
முகவரி : 10ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு
பொழுதுபோக்கு : கால்பந்து விளையாடுதல், தொலைகாட்சி, பத்திரிகை.

# விழிப்புணர்வு வேண்டும்!

**டிசம்பர் முதலாம் திகதி எயிட்ஸ் தினம் என்பதாலும், அதனுடைய பிரதான மாநாடு இலங்கையில் நடக்கவிருப்பதாலும், எயிட்ஸ் நோயாளர்களுக்கு விழிப்பூட்டும் நோக்கோடு, எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளான ஒரு யுவதியின் உண்மைக் கதையை வாசகர்களுக்குத் தருகிறோம்.**

**எயிட்ஸ் தொற்றுக்கு ஆளானவர்களை ஒதுக்கி வைத்துவிடாதீர்கள். அவர்களை நிரந்தர மரணத்திற்கு முன்னர், உளவியல் ரீதியாகப் பாதிப்படையச் செய்து, கொஞ்சம் கொஞ்சமாகக் கொலை செய்துவிடக் கூடாது. எயிட்ஸ் தொற்றுக்குள்ளானவர்களைக் கண்டு பயந்துவிடத் தேவையில்லை.**

**பாதுகாப்பான பாலியல் உறவு கொள்வதன் ஊடாக எயிட்ஸைத் தடுக்கலாம். இன்னொருவரின் தவறினால் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளாகும் ஒருவரை, சமூகம் ஒதுக்கி வைத்துவிடுவது கொடுமையானது. இதற்குக் காரணம், எயிட்ஸ் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாததாகும். இந்த நிலை மாற வேண்டும் என்கிறார் கௌசல்யா.**

'**மனசு** நிறைய கனவுகளுடனும், நம்பிக்கைகளுடனும் வலது காலை எடுத்து வைத்து, வசந்த காலத்திற்குள் நுழைந்தேன். ஆனால், வசந்தம் வரும் முன்பே சோகம் என்மீது கவிழ்ந்துவிட்டது. நான் ஏமாற்றப்பட்டு விட்டேன் என்பதை உணர்வதற்குள் எல்லாமே முடிந்துவிட்டது. 'நான் சொல்லப் போவதைக் கேட்டு மனம் தளர்ந்துடாதீங்க... உங்களுக்கு எச்.ஐ.வி. பாதிப்பு இருக்கு' என்று சொன்னார் டாக்டர். எனக்கு இது நடந்திருக்காவிட்டால், எல்லோரையும் போல நானும் கணவன், குழந்தைகள், வீடு, உறவினர்கள், குடும்ப விசேஷங்கள் என்று சந்தோஷமாக இருந்திருப்பேன். ஆனாலும், நான் முடங்கிப் போகவில்லை. மிச்சம் இருக்கும் என் வாழ்நாளை, யாரோ செய்த தவறுகளுக்காகத் தனது வாழ்வைத் தொலைத்துவிட்டு நிர்க்கதியாக நிற்கும் என்னைப் போன்றவர்களுக்குச் செலவிட முடிவு செய்தேன். அவர்களுக்கு நல்லது செய்ய வேண்டும், வழிகாட்டியாக வாழவேண்டும் என்று விரும்பினேன். என்னைப் போல எச்.ஐ.வி. -யால் பாதிக்கப்பட்டிருந்த வரலட்சுமி, ஹேமலதா, ஜோன்ஸ் ஆகியோரும் என்னுடன் சேர்ந்துகொள்ள, சென்னையில் 'பாசிட்டிவ் விமன் நெட்வொர்க்' அமைப்பைக் கூட்டாகத் தொடங்கினோம்.' என்கிறார் அந்த அமைப்பின் தலைவி கௌசல்யா.

'எனது சொந்த ஊர் நாமக்கல். 1995 இல் என் அத்தை மகனுக்கே என்னைக் கல்யாணம் செய்து கொடுத்தாங்க. கல்யாணமான பத்தாவது நாளே எனக்குத் திடீ்னு காய்ச்சல் வந்திருச்சு. டாக்டரைப் பார்த்து மருந்து சாப்பிட்டும் காய்ச்சல் குறையவில்லை. பல டெஸ்ட்கள் செய்தும் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியலை. கடைசியில் எச்.ஐ.வி. பரிசோதனை செய்து பார்த்ததில், எனக்கு எச்.ஐ.வி. பாதிப்பு இருக்குன்னு சொன்னார் டாக்டர். அப்போ எனக்கு வயசு 20தான். அவ்வளவு சின்ன வயசுல என் வாழ்க்கையே இருண்டு போன மாதிரி ஆயிடுச்சு. லாறி டிரைவரான என் அத்தைப் பையன் தெரிஞ்சே இதை எங்கிட்ட மறைச்சுட்டார்னு தெரிய வந்தப்போ மனசு தாங்கலை. கல்யாணமாகி ஏழு மாசத்திலேயே என் கணவரும் எச்.ஐ.வி. யால் இறந்து போனார்.

இந்த நிலையில்தான், எங்க ஊர்ல எச்.ஐ.வி. யால பாதிக்கப்பட்டவங்களுக்கு ஏதாவது செய்யணும்னு நெனைச்சேன். அங்கிருந்த தொண்டு நிறுவனங்களோட சேர்ந்து வேலை செய்தேன். எச்.ஐ.வி யால் பாதிக்கப்பட்டவங்க, குடும்பத்தாலும், சமூகத்தாலும் எப்படியெல்லாம் புறக்கணிக்கப்படறாங்க என்பதை அனுபவபூர்வமா உணர முடிஞ்சுது. சென்னையில், 1998 இல் தொடங்கிய 'பாசிட்டிவ் விமன் நெட்வொர்க்' அமைப்பு இப்போது ஆலமரம் போல விழுது விட்டு, 16 மாநிலங்களில் கிளை விரித்துள்ளது" எனச் சொல்லும் கௌசல்யாவுக்கு இப்போது 32 வயது.

எச்.ஐ.வி. பாதித்த பெண்களுக்கு கவுன்சிலிங், அவர்களது குழந்தைகளின் படிப்புக்கு உதவி, எச்.ஐ.வி. பாதிப்புக்குள்ளான பெண்கள் - சுய உதவிக் குழுக்கள் அமைக்க உதவி, விழிப்புணர்வுப் பிரசாரம்... எனப் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு வருகிறார் கௌசல்யா.

இப்போது நாமக்கல்லில் அவரது குடும்பத்துக்கு மட்டுமே தெரிந்த கௌசல்யா, எயிட்ஸ் விழிப்புணர்வுப் பிரசார இயக்க வட்டாரங்களில் சர்வதேசப் பிரபலம். அமெரிக்கா, பிரிட்டன், கனடா எனப் பல நாடுகளுக்குப் பயணம் செய்திருக்கிறார். பிரிட்டிஷ் பார்ளிமென்ட் எம்.பி.க்கள் கூட்டத்தில், எயிட்ஸ் விழிப்புணர்வு குறித்துப் பேசியிருக்கிறார். டெல்லியில், எம்.பி.க்கள் மத்தியில் உரையாற்றியிருக்கிறார். இவரைப் பற்றி பிரிட்டனைச் சேர்ந்த ஒருவர், ஆவணப் படம் எடுத்து வருகிறார்.

"நாமக்கல் போன்ற ஒரு சிறிய நகரில், அதுவும் பிளஸ் டு வரை மட்டுமே படித்த நீங்கள் எப்படி இவ்வளவு பெரிய பொறுப்பைச் சமாளிக்கிறீர்கள்?" என்று கேட்டால், 'காலமும் சூழ்நிலையும் கொடுத்த தன்னம்பிக்கைதான் காரணம்' என்று புன்னகைக்கிறார்.



கௌசல்யா

"சென்னையில் மாமா வீட்டில் தங்கியிருக்கேன். குடும்பத்தில் அண்ணனும், அக்காவும் அனுசரணையா இருக்காங்க. எனக்கு எச்.ஐ.வி. வந்து 11 வருஷம் ஆயிடுச்சு. இப்போதைக்கு மருத்துவ ரீதியா எனக்கு வேறு எந்தப் பிரச்சினைகளும் இல்லை. ஆனா, எனது வாழ்க்கை எவ்வளவு நாள் இப்படியே ஓடும்னு தெரியாது. என் பயணம் விரைவில் ஒரு நாள் நின்றுவிடும். என்னை நோக்கி மரண தேவதை மெதுவாக வந்துகொண்டு இருக்கிறாள். அவளைத் தடுக்க முடியாது. ஆனால், 'பாசிட்டிவ் விமன் நெட்வொர்க்' பயணம் நிற்காது. நிற்கக் கூடாது! எனக்குப் பிறகும் அது வளர்ந்து, விழுதுகள் விட்டு, பெரிய விருட்சமாகச் செழிக்க வேண்டும். அதற்காகத்தான் எனது எஞ்சிய வாழ்க்கையைச் செலவிடப் போகிறேன்." என்று கூறும்போதே கௌசல்யாவின் குரல் உடைகிறது.


இலங்கையில் நடக்கவிருக்கும் எயிட்ஸ் கருத்தரங்கில் பங்கேற்பதற்காகப் புறப்படத் தயாராகிக்கொண்டு இருந்த கௌசல்யா, கடைசியில் முத்தாய்ப்பாகச் சொன்னார்... "என்னை மாதிரி எச்.ஐ.வி. பாதிப்புக்கு ஆளானவங்களுக்கு நான் சொல்ல விரும்புவது இதுதான்... எக்காரணம் கொண்டும் மனம் சோர்ந்துவிடாதீர்கள். எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டவர்களும் மற்றவர்களைப் போல நிச்சயமாக ஒரு நல்ல வாழ்க்கையை வாழ முடியும். 'பாசிட்டிவ் விமன் நெட்வொர்க்கும்" நாங்களும் எங்கள் அனுபவங்களுமே இதற்குச் சாட்சி!'




# குழந்தைக்கு தனி அறை வேண்டும்!

**குழந்தை** பிறக்கும்போது ஒரு குடும்பத்தில் ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. அந்தக் குழந்தையைக் கவனித்துக் கொள்வதில் அந்தக் குடும்பத்தைச் சேர்ந்த அத்தனை பேருமே கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள்.

அந்தக் குழந்தைக்கு என்னென்ன தேவை என்பதை அவர்களாகவே தெரிந்து கொண்டு அதன் ஆசையைப் பூர்த்தி செய்வார்கள். இந்த அன்புக் குளிப்பாட்டல் எல்லாம் குழந்தைக்கும் ஒரு வயது வரைதான் முழுமையாகக் கிடைக்கிறது. குழந்தை நன்றாக நடந்து, பேச ஆரம்பித்து, அங்குமிங்கும் ஓடியாடி விளையாட ஆரம்பித்துவிட்டால் அவ்வளவுதான், குழந்தையைப் பராமரிப்பதில் பெற்றோர் தங்களுடைய கவனத்தை அதிகமாகச் செலுத்துவதில்லை.



ஆனால் குழந்தை மனவியல் வல்லுனர்கள் என்ன கூறுகிறார்கள் தெரியுமா?...

ஒரு குழந்தை முற்றிலுமாக குழந்தைப் பருவத்திலிருந்து விடுபட்டு சிறுவர் - சிறுமியர் (10 வயது) என்னும் அந்தஸ்தை அடையும் வரை அக்குழந்தையை அக்கறையுடன் கவனித்துக்கொள்ள வேண்டும். அவர்களின் ஆசைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்கிறார்கள்.

சரி, குழந்தைகளுக்கு அப்படி என்ன தேவைப்படும்?

முதலில் குழந்தை விளையாடுவதற்கேற்ப ஒரு அறை அவர்களுக்கு இருக்க வேண்டும். அது பெரிதாகத்தான் அமைய வேண்டும் என்பதில்லை. மிகச் சிறியதாகக் கூட இருக்கலாம். ஆனால் அது அவர்களுக்குப் பிடித்தமானதாக இருக்க வேண்டும்.

அங்கே அவர்கள் மென் பொம்மைகள், விளையாட்டுச் சாமான்கள், அலங்கரித்த கட்டில், வண்ண தலையணைகள், சிறிய மேசை, பிளாஸ்டிக் நாற்காலி, சோபா, அலங்காரக் கலைப்பொருட்கள், சுவர் கண்ணாடி, இரவு விளக்கு, அழகிய குப்பைத் தொட்டி முதலியவை இருப்பது அவசியம். சுவர்களில் பளிச்சென்ற வண்ணம் தீட்டப்பட்டிருக்க வேண்டும். (5 வயது குழந்தைக்கு மேல் என்றால் சற்று வெளிறிய நிறங்களைச் சுவர்களுக்குப் பயன்படுத்துவது நல்லது) குழந்தைகள் தங்களது புத்தகங்களையும், துணிமணிகளையும் அடுக்கிக் கொள்வதற்கு அலுமாரிகளும் இருப்பது நல்லது.

ஆண் குழந்தைகளுக்கு நீல நிறமும், பெண் குழந்தைகளுக்கு இளஞ்சிவப்பு நிறமும் மிகவும் பிடித்தமானது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். இதனால் அவர்களுக்குத் தரும் அத்தனை மென் பொம்மைகள் மற்றும் விளையாட்டுச் சாதனங்களிலும் இந்த நிறம் ஓரளவிற்கு இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.


இப்படி குழந்தைகளுக்குத் தனி அறையை ஒதுக்கும்போது அதற்குள் பெற்றோர் அவ்வப்போது சென்று அவர்கள் அந்த அறையை பராமரிக்கும் விதம், நோட்டு புத்தகங்களையும், துணிமணிகளையும் வரிசையாக அடுக்கி வைத்திருக்கிறார்களா என்பதை நோட்டமிடுங்கள். பொருட்களை இறைத்துப் போட்டிருந்தால் அவற்றை ஒழுங்குபடுத்தி வைப்பதற்குப் பழக்குங்கள். குழந்தைகளை அருகில் வைத்துக் கொண்டே இதைச் செய்யுங்கள். அப்போதுதான் அவர்கள் தங்களது பொறுப்பினை உணர்வார்கள். நீங்கள் அருகில் இல்லாதபோது அவர்களாகவே சீராக அடுக்கி வைக்கப் பழகுவார்கள்.

உங்களது வீட்டில் குழந்தைக்குத் தாராளமான தனி அறை ஒதுக்க முடியும் என்றால் அந்த அறையில் கழிவறையும் சேர்ந்து இருப்பது போல் அமைந்தால் நல்லது. ஏனெனில் பெரும்பாலான குழந்தைகள் தங்களின் விருப்பம்போல் சுதந்திரமாக அதைப் பயன்படுத்த நினைப்பார்கள்.

5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் இருக்கும் அறை என்றால் ஓடியோ, டி.வி.போன்றவற்றையும் அங்கே இணைக்கலாம்.

ஓவியம் தீட்டுதல், பூவேலைப்பாடு, கைவினைப் பொருட்கள் போன்றவற்றைத் தயாரிக்க அவர்களுக்குக் கற்றுக் கொடுங்கள். நன்றாகப் பழகிய பின்னர் அவர்களையே சில பொருட்களை உருவாக்கும்படி கூறுங்கள்.

இப்படி தனியறையில் குழந்தைகள் இருந்தாலும் பெற்றோர்கள் அவர்களுடன் நேரத்தைச் செலவிட மறந்து விடக்கூடாது.



இந்த மாதிரியான சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் நல்ல கற்பனைச் சக்தி கொண்டவர்களாகப் படிப்பில் ஆர்வம் கொண்டவர்களாகவும் வளர்வார்கள் என்று குழந்தைகள் மனவியல் வல்லுனர்கள் கூறுகின்றனர்.

## இப்படித்தான் இருக்க வேண்டும் பெட்ரூம்!

**படுக்கை** அறை என்பது நமக்கு நிம்மதி தரக்கூடிய ஒரு இடம். அன்றைய தினத்தின் அத்தனை டென்ஷனையும் நாம் இறக்கி வைக்கின்ற இடமும் அதுதான். அப்படிப்பட்ட பெட்ரூம் எப்படி இருக்க வேண்டும்?

**இதோ சில டிப்ஸ்...**

♥ உங்களுக்குப் பிடித்தமான கலரில் பெட்ரூமை பெயிண்ட் செய்யுங்கள். படுக்கையின் அளவு மற்றும் டிசைனுக்குப் பொருத்தமான தலையணைகளைத் தேர்ந்தெடுங்கள்.



♥ உங்கள் படுக்கைக்கு ஏற்ற நல்ல வெளிச்சம் படுகின்ற இடத்தில் முகம் பார்க்கும் கண்ணாடியை வையுங்கள். உங்கள் படுக்கையறையில் முடிந்தவரை டி.வி.யை வைக்காதீர்கள். இது உங்கள் தூக்கத்தையும் கணவருடனான அந்நியோன்யத்தையும் குறைத்து விடும்.

♥ உங்களுக்கு மிகவும் பிடித்தமான இசைகளை உங்களின் 'மூடுக்கு' ஏற்றது போல் பெட்ரூமில் தவழ விடுங்கள். இதில் முக்கியமான விஷயம் நீங்கள் கேட்கும் இசை பெட்ரூமைத் தாண்டி கேட்கக்கூடாது. அதனால் பெட்ரூமில் திரைச்சீலைகளைப் போடுங்கள்.

♥ கண்ணை உறுத்தாத மென்மையான நிறங்களில் நைட் லேம்ப்பைத் தேர்ந்தெடுங்கள். தேவையற்ற இரைச்சல் கேட்காதபடி கனமான திரைச்சீலைகள் தொங்க விடுங்கள்.

♥ சுவரில் இயற்கைக் காட்சிகளைக் கொண்ட வால் பேப்பர்களை ஒட்டினால் கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கும்.

♥ படுக்கையறை வாசலுக்கு நேராகப் படுக்கையைப் போடாதீர்கள்.

♥ கண்ணை கூசச் செய்யும் விளக்கின் அடியில் கட்டிலைப் போடாதீர்கள்.

♥ படுக்கையறையில் உள்ளே நுழைபவரை நோக்கி நம் கால்கள் நீட்டும்படி கதவுக்கு நேராகப் படுக்கையைப் போடாதீர்கள்.

## அழகுக்கு மெருகேற்றும் பற்கள்!

★ பெண்களின் அழகை மெருகேற்றிக் காட்டுவதில் பற்களுக்குத்தான் முதல் இடம். பற்களில் சிறிது கறை இருந்தாலோ, விரிசல் மற்றும் சொத்தை இருந்தாலோ முக அழகே சிதைந்து போய் விடும்.



★ ஆகவே பெண்மணிகளே, பற்களை அழகாக வைத்துக் கொள்ள உதவும் உணவு வகையை ருசித்துச் சாப்பிடுங்கள்.

★ கடல் வாழ் உணவு வகைகள் மற்றும் டீயிலும் பற்களை மினுமினுக்க வைத்திருக்கக் கூடிய புளோரைய்ட் அதிக அளவில் உள்ளது. இது பல் சொத்தை, பல் வலி போன்ற பல் சம்பந்தமான பிரச்சினைகளை வர விடாமல் தடுத்து விடுகிறது. அத்துடன் ஈறுகளைப் பாதுகாப்பதோடு பலமடையவும் செய்கிறது.

★ புளோரைட் மிகுதியான உணவைச் சாப்பிட்டு எந்த இடத்திலும் கூச்சமே இல்லாமல் வாய் விட்டுச் சிரிக்கலாம். கறைப் பல் தெரிஞ்சுடக்கூடா தேங்கிற பயமே தேவை இல்லை.

★ பற்கள் மற்றும் ஈறுகளைப் பாதுகாப்பதில் இரும்புச் சத்தின் பங்கு இன்றியமையாதது. இது நகங்களின் அழகை தக்க வைத்துக்கொள்ளவும் உதவுகிறது. ஆட்டுக் கறி, மீன், கோழிக் கறி, முட்டை, உலர்ந்த பழங்கள், பச்சைக் காய்கறிகள் போன்றவற்றில் இரும்புச் சத்து உள்ளது.

## சமைப்போம் சுவைப்போம்

*தொகுத்துத் தருவது –ஷோபா–*

### சவ்வரிசி லட்டு

**தேவையானவை :-**

சவ்வரிசி - 1 கப்

சீனி - 1 கப்

ஏலக்காய்ப் பொடி - 1 தேக்கரண்டி

நெய் - 50 கிராம்

முந்திரிப் பருப்பு மற்றும் திராட்சை.

**செய்முறை :-**

சவ்வரிசியை வாணலியில் போட்டு வறுத்துக் கொள்ளவும். பின்பு அதை மிக்ஸி யில் நைசாகப் பொடிக்கவும். சீனியைத் தனியாகப் பொடித்துக் கொள்ளவும். அல்லது கடைகளில் விற்கும் சீனிப் பொடியை யும் பயன்படுத்தலாம். சவ்வரிசிப் பொடி, சீனி பொடி, ஏலக்காய்ப் பொடி, நெய் யில் வறுத்த முந்திரி, திராட்சை, நெய் அனைத்தையும் கலந்து பிசைந்து உருண்டைகள் பிடிக் கவும். தேவைப்பட்டால் சிறிது பால் தெளித் துக் கொள்ளலாம். இந்த சவ் வரிசி லட்டைச் செய்வது எளிது. அதே போல் சுவையும் நன்றாக இருக்கும்.

## வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

### முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

கேள்வி இல்லை! பதில் இல்லை!
பொருட் கொள்வனவு அவசியமில்லை!
வயது, பால் வேறுபாடின்றி வாசகர் பங்கு பெறலாம்!

முரசு வாசகர்களுக்கான பரிசுப் போட்டி

49

பெயர் : ..........

முகவரி : ..........

..........

..........

தே.அ. அட்டை இல : ..........

கையொப்பம் : ..........

உண்மை - நேர்மை - வெளிப்படைத்தன்மை

கூப்பனை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 05.12.2006

- ஒவ்வொரு வாரமும் அதிர்ஷ்டசாலி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப் படுவார்.
- மேலேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பினால் போது மானது. (பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).
- ஒருவர் ஒன்றுக்கு மேற் பட்ட கூப்பன்களை அனுப்பலாம்.

*அனுப்பி வைக்க வேண்டிய முகவரி*

**வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி**
**முரசு பரிசுப் போட்டி -49**
**தினமுரசு வார மலர்**
**த.பெ.இல - 1772**
**கொழும்பு.**

**பரிசுப் போட்டி இல - 47 பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

தனுஷியா யோகேந்திரன்,
இல. 07, நல்லையா வீதி, மட்டக்களப்பு.


அதிர்ஷ்டசாலி உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.




**பின்னர்**,"உனக்குப் போக வேண்டிய பாதை தெரியுமா?" என்று கேட்டான்.

"ஊகூம். தெரியாது. கொலம்பியா, வெனிஸுவேலா ஆகிய இரண்டு நாடுகள் வடமேற்குத் திசையில் இருக்கிறது என்பதைத் தவிர, வேறெதுவும் தெரியாது." என்றேன்.

"அது சரிதான். ஆனால் எந்தத் தேசத்துக்குப் போகிறோம் என்பதில்



எச்சரிக்கையாக இரு. இல்லாவிட்டால் உங்களை வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்பிவிடுவார்கள். ஆற்றின் மறுபுறத்தில் டச்சு கயானா இருக்கிறது. தப்பியோடும் கைதிகளை அவர்கள் பிடித்துத் திருப்பியனுப்பி விடுவார்கள். பிரிட்டிஷ் கயானாவும் அப்படித்தான். ட்ரினிடாட்டில் அவ்வாறு செய்வதில்லை. ஆனால் பதினைந்து நாளில் அங்கிருந்து புறப்பட்டு விட வேண்டும் என்பார்கள். வெனிஸுவேலாவில் ஒரு வருடம், இரண்டு வருடம் உங்களிடம் வேலை வாங்கிவிட்டுத் திருப்பி அனுப்பி விடுவார்கள்."

எவ்வளவு கவனமாக முடியுமோ, அவ்வளவு கவனமாக அவன் சொல்லும் விஷயங்களைக் கேட்டுக் கொண்டேன். அவன் அடிக்கடி தப்பிச் செல்வதுண்டாம். பெருவியாதிக்காரனாகையால் அவனை உடனே திருப்பி அனுப்பிவிடுவார்களாம்.

நான் கேட்டுக் கொண்ட புத்திமதிகளையெல்லாம் திருப்பிச் சொல்லும்படி என்னிடம் சொன்னான் டூஸான். ஒரு தப்புக் கூட இல்லாமல் சொன்னேன்.

"எத்தனை நாள் கடலில் பிரயாணம் செய்வாய்?" என்று ஜீன் கேட்டான்.

"வடக்கு - வடகிழக்காக மூன்று நாள் செல்வேன். நாலாம் நாள் வடமேற்காகப் படகைச் செலுத்துவேன்." என்றேன்.

"அதுதான் சரி," என்று முதல்வன் சொன்னான்.

"டூஸான்! உன் படகை இவர்களுக்கு என்ன விலைக்குக் கொடுத்தாய்?" என்று ஜீன் கேட்டான்.

"மூவாயிரத்திற்கு விற்றேன். ஏன் ரொம்ப அதிகமா?"

"இல்லை. அதற்கில்லை. சும்மா தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன். உன்னால் பணம் கொடுக்க முடியுமா, பட்டாம்பூச்சி?"

"முடியும்."

"அது போகப் பாக்கி ஏதாவது வைத்திருக்கிறாயா?"

"இல்லை. ஜோன்ஸ் வைத்திருக்கும் மூவாயிரம் தவிர, என்னிடம் ஒன்றுமில்லை."

"டூஸான்! உனக்கு என் ரிவால்வரைத் தருகிறேன். எவ்வளவு பணம் தருவாய்? இந்த நண்பர்களுக்கு உதவ வேண்டுமென்று ஆசைப்படுகின்றேன்."

"ஆயிரம் பிராங்க் தருகிறேன். நானும் இவர்களுக்கு உதவத்தான் விரும்புகிறேன்."

ஜீனைப் பார்த்து, "ரொம்ப ரொம்ப நன்றி," என்றான் மாசுரெட்.

"ரொம்ப தாங்ஸ்," என்று ஜோன்ஸும் சொன்னான்.

பணமில்லை என்று இவர்களிடம் பொய் சொன்னோமே என்று எனக்கு வெட்கமாய்ப் போய்விட்டது. எனவே, "ஊகூம், நான் வாங்கிக் கொள்ளமாட்டேன். அநாவசியமாய்

**எழுதியது: ஹென்றி ஷாரியர்**
**தமிழில்: ரா.கி. ரங்கராஜன்**

எங்களுக்குப் போய் நீங்கள் எதற்காகக் கொடுக்க வேண்டும்?" என்றேன்.

ஜீன் என்னைப் பார்த்தான்.

"டூஸான் உங்களுக்கு விற்றிருக்கிற இந்தப் படகு ரொம்ப ரொம்ப உயர்ந்தது. விலையில் குறைந்த பட்சம் இரண்டாயிரம் பிராங்க் தள்ளிக் கொடுத்திருக்கிறான் டூஸான். அப்படியிருக்க நானும் உங்களுக்காக ஏதாவது செய்யக்கூடாதா?"

உள்ளத்தை உருக்கும் நிகழ்ச்சியொன்று அப்போது நடந்தது.

பெருவியாதிக்காரர்கள் அவ்வளவு பேரும் எங்களுக்கு உதவி செய்வதில் மிக ஆர்வமாக இருந்தார்கள்.

ஒரு பெருவியாதிக்காரன் தன் தொப்பியை எடுத்துத் தரையில் வைத்தான். எல்லோரும் அதிலே நோட்டுக்களையும், காசுகளையும் போடத் தொடங்கினார்கள். மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் பெருவியாதிக்காரர்கள் வந்தார்கள். ஒவ்வொருவரும் ஏதாவதொன்று தொப்பியில் போட்டார்கள். வெட்கம் என்னைப் பிடித்து ஆட்டியது. ஆயினும், என்னிடம் பணம் நிறைய இருக்கிறது என்று சொல்ல முடியாதிருக்கிறதே? கடவுளே! நான் என்ன செய்ய? இதோ ஒரு பெருந்தன்மையான காரியம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நானோ மகா மகா மட்டமாக நடந்து கொள்கிறேன். "வேண்டாம், வேண்டாம், இப்படி அனைத்தையும் தியாகம் செய்யாதீர்கள்." என்றேன்.

அட்டைக்கரியாயிருந்த ஒரு நீக்ரோ - விரல்கள் எல்லாம் போய் மொக்கைக் கையாக, பயங்கரமான ஊனத்துடன் இருந்தவன் - சொன்னான்: "எங்கள் பணம் ஒன்று, சூதாட்டத்தில் செலவழியும், அல்லது ஆல்பினாவிலிருந்து நடுநடுவே வருகிறார்களே பெருவியாதிப் பெண் பிள்ளைகள், அவர்களுக்குக் கொடுப்போம். ஆகையால் கூச்சப்படாமல் வாங்கிக்கொள்."

அவன் பேச்சு எனக்குச் சற்று ஆறுதல் தந்தது. படகுக்குக் கொடுத்தது போக எங்களிடம் பணம் இருக்கிறது என்று ஒப்புக் கொண்டுவிடாதபடி தடுத்தது.

இருநூறு முட்டைகளை அவித்து மரப் பெட்டியில் அவற்றை வைத்துக்கொண்டு வந்து தந்தார்கள். மரப்பெட்டியின் மீது செஞ்சிலுவைக் குறி இருந்தது. அன்று காலை, அன்றைய மருந்துகளுடன் வந்திருந்த பெட்டி அது. இரண்டு உயிருள்ள கடல் ஆமைகளையும் கொண்டுவந்து கொடுத்தார்கள். ஒவ்வொன்றும் அரை அந்தர் கனம். கவனமாய் மல்லாக்கப் போட்டு வைத்திருந்தார்கள். இலைகளாகவே புகையிலை, இரண்டு பாட்டில் நிறையத் தீக்குச்சி, வத்திப்பெட்டி, குறைந்தது ஓர் அந்தர் எடையுள்ள அரிசி மூட்டை, இரண்டு மூட்டை அடுப்புக்கரி, மன்றத்திலிருந்து ஸ்டவ், வெண்மெழுகும் திரியும் போட்ட ஒரு புட்டி, இவ்வளவும் வந்தன.

அந்தச் சமூகத்தினர் மொத்தமும் - பயங்கரமான துரதிர்ஷ்டசாலி மனிதர்களான அவ்வளவு பேரும் - எங்கள் மீது இரக்கம் கொண்டார்கள். நாங்கள் வெற்றி பெறுவதற்கு முடிந்த அளவு உதவ வேண்டுமென்று எல்லோரும் விரும்பினார்கள். பார்க்கிறவர்களுக்கு ஏதோ அவர்கள்தான் தப்பியோட முயன்றுகொண்டிருப்பது போல் தோன்றுமே தவிர, நாங்கள் தப்புவது போல் தெரிந்திருக்காது.

தீவில் நாங்கள் இறங்கிய இடத்துக்கு சற்றுக் கீழே படகைக் கொண்டு வந்தோம். தொப்பியில் சேர்ந்திருந்த பணத்தை எண்ணினார்கள். எண்ணூற்றுப் பத்துப் பிராங்குகள் இருந்தன. டூஸானுக்கு நான் ஆயிரத்திருநூறு பிராங்குகள் தான் தரவேண்டியிருந்தது. ஜோன்ஸ் பணம் வைத்துள்ள குழாயை என்னிடம் கொடுத்தான். அங்கே எல்லோருடைய முன்னிலையிலும் அதைத் திறந்தேன். ஓர் ஆயிரம் பிராங்க் நோட்டும், நாலு ஐந்நூறு பிராங்க் நோட்டுக்களும் அதில் இருந்தன. டூஸானிடம் ஆயிரத்தைந்நூறு கொடுத்தேன். அவன் மீதி முந்நூறு தந்தான். "இந்தா இந்த ரிவால்வரை எடுத்துக்கொள். என் பரிசாக இருக்கட்டும். உன்னிடம் இருக்கும் அனைத்தையும் பணயம் வைத்துப் புறப்பட்டிருக்கிறாய். ஆயுதமில்லை என்ற ஒரே காரணத்தினால் கடைசி நிமிடத்தில் எதுவும் கெட்டுவிடக் கூடாது.

ஆனால், இந்தத் துப்பாக்கியை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படாமல் இருக்கட்டும்."

*(பட்டாம்பூச்சி பறக்கும்)*




**இலங்கை** அரசாங்கத்தின் இவ்வித நொண்டிச் சட்டத்தினால் (1947 தொடக்கம் 1977-7-22 ஆம் திகதி வரை) ஏறத்தாழ 30 வருடங்கள் மலைநாட்டு பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் ஒருவரும் பிரவேசிக்கவில்லை .

அப்போதிருந்த எதிர்க்கட்சி, ஐக்கிய தேசிய கட்சியாகும். ஆதன் தலைவரான J.R.ஜயவர்தனவுடன், சௌமிய மூர்த்தி தொண்டமான் அவர்களும் இணைந்து அத்தனகலை என்ற இடத்தில் முதன்முதலாக சத்தியாக்கிரகம் இருந்தனர்.



அதன்பின் 1977 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் மலைநாட்டுப் பிரதிநிதியாக தொண்டமான் அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு நாடாளுமன்றத்திற்குள் செல்லும் வாய்ப்பைப் பெற்றார். இம்மக்களுக்கான பிரசாவுரிமை பிரச்சினையை தீர்த்தனர். .ஆனாலும் இன்னமும் பல நூறாயிரம் தென்னிந்தியர் பிரசாவுரிமையற்ற வர்களகவே இருக்கின்றனர். காரணம் யாதெனில் இதைப்பற்றிய போதிய விளக்கமோ , அறிவோ பெறாமலிருப்பதே எனக் கூறலாம்.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தினால் நாடுகடத்தப்பட வேண்டியவர்கள் என்ற அரைக் காசு சம்பாத்தியமில்லாத அப்பாவி மக்களை இலங்கை அரசாங்கம் தேடிப்பிடித்து கைதிகளைப்போல , 'புனர்வாழ்வு' என்று இந்தியாவிற்கு கப்பலில் அனுப்பியது. இலங்கையில் அன்றாட உணவர்னது உண்ட மக்கள். தங்கள் உறவினர்களில் பலரையும் விட்டுவிட்டு இந்தியாவின் புனர்வாழ்வை நம்பி புதிய பூமியை நோக்கி பயணமாகினர். இவர்களை ஏற்றிச்செல்லும் இரயிலானது உருக்குளைந்த தொழிலாளர்களை விட மோசமானது. நீர், உணவு.வெளிச்சம் போன்ற வசதிகள் கிடையாது. தங்களிடம் காணப்பட்ட பொருட்கள், பணம் என்பவற்றை இரவில் கள்வர்களின் கைவரிசையினால் இழந்தனர். தலைமன்னாரிலுள்ள சுங்கப்பகுதி போர்ட்டர்களுக்கு பணம் கொடுக்காவிடின், கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்த ஒரு சில பொருட்களையும் கண்முடித்திறப்பதற்குள் தூக்கி எறிந்து நாசமாக்கினர். இவ்வாறு இந்தியாவின் இராமேஸ்வரத்திலும் அதிமோசமாக இவர்களது எஞ்சியபொருட்களும் அபகரிக்கப்பட்டன.இறுதியில் ஒன்றுமில்லாத ஆண்டியாக புனர்வாழ்வை நம்பிச் சென்றவர்களில் பலர் இறந்தனர். தஞ்சாவூரில் 29 பேர் பசியினால் மடிந்தனர். 3 பேர் தற்கொலை செய்தனர். இதில் பலர் வீடு நிலம் எதுவுமின்றி பிச்சைக்காரர்களாக சுற்றித் திரிந்தனர். இந்நிலைமைக்கு தள்ளப்பட்ட இம்மக்கள் இனிமேலாவது நன்கு வாழ வழிக்கிடைக்க அரசாங்கம் உதவவேண்டும். பிரித்தானியரது சுயநலம் ஒருபுறமும் இலங்கையின் சுயநலம் இன்னொரு புறமும் இவர்களை வாட்டவே கூடாது. வாழ வழி செய்தல் வேண்டும்.

மக்களின் உயிருக்கும் உடலுக்கும் ஆபத்து ஏற்படும் போது தலைவன் தோன்றுகின்றான். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற நிலையில் சமுதாய அமைப்புக்கள் மாறும் போது மக்கள் அச்சம் கொள்கிறார்கள்.அவ்வேளை ஒரு தலைவனுடன் சேர்ந்த குழு ஒன்று , இம்மக்களின் அச்சத்தைப் போக்க , யாமிருக்க பயமேன்' என்று முன்வருகின்றது. உங்களைக் காப்பாற்றுவோம் நமது பரம்பரையை நிலைநாட்டுவோம், பாதுகாப்புத் தரும் நெறிமுறைகளை அமைப்போம் என்ற மூன்று காரணிகளுக்காக சரித்திரத்தில் பல தலைவர்கள் தோன்றினார்கள். அதே போல மலைநாட்டு மக்களை காப்பாற்ற தலைவர்கள் தோன்றினார்கள். அதே போல மக்களைக் காப்பாற்ற, தலைவர்களுடன் பல சங்கங்கள் தோன்றின. இவைகள் மலையகத்தில் மாற்றங்களை ஏற்படுத்திய அல்லது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், சமாளித்துச் சென்றதா என்று சரித்திரம் பதில் சொல்லும். மலைநாட்டு மக்களுக்கென ஆரம்மிக்கப்பட்ட சங்கங்கள் பின்வருமாறு உள்ளன.

| ஆண்டு | சங்கங்கள் பற்றிய விபரம் |
|---|---|
| 1920 | தோட்ட சேவையாளர் சங்கம் |
| 1921 | அனைத்திலங்கை பெரிய கங்காணிமார் சங்கம் (இவ்விரண்டு சங்கங்களும் தோட்ட அனுசரனையை பெற்று இயற்கியது.) தொழிலாளர் சம்மேளனம் (நடேசய்யர் இதனை ஆரம்பித்து, தலைமையகம் அட்டனில் இயங்கியது.1940-1-19இல் பதிவு செய்தது.0 |
| 1940-6-22 | அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கம் |
| 1940-6-25 | இலங்கை இந்திய தொழிலாளர் காங்கிரஸ். (1953 இல் அதன் பெயர் மாற்றம்) |
| 1953 | இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ( இலங்கை இந்திய தொழிலாளர் காங்கிரஸ் என்பதே இப்பெயர் பெற்றது) |
| 1955 | ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் (இது இலங்கை தொழிலாளர் சங்கத்திலிருந்து பிளவு பட்டு, அஸிஸ் தலைமையில் உருவானது) |

**ஸ்ரீ முகன்**

இப்படியாகப் பல சங்கங்கள் உருவாகி இன்று 50 இற்கு மேற்பட்ட சங்கங்கள் செயல்படுகின்றன. அத்துடன் 4 அல்லது 5 பேரை வைத்துக்கொண்டும் சங்கங்கள் முழைக்கு ளைக்கும் காளான் போல உருவாகி மறைகின்றது. சங்கங்களுக்கிடையில் ஒற்றுமை என்பதே கிடையாது. போட்டி, பொறாமையினால் ஒரு சங்கத்திற்கு எதிராக இன்னொரு சங்கம் இயங்குகின்றது.இந்நிலை தொடர்ந்து இருக்கும் வரையிலும் , நடைமுறையில் இருக்கும் அரசாங்கத்திற்கு தேயிலை தோட்ட மக்களை இன்னுமாக ஒடுக்க சந்தர்ப்பம் உண்டு. எனவே இன்னிலை மாறி, சங்கங்கள் ஒன்றிணைந்து செயற்பட்டால். மலையகத்திற்குச் செய்கின்ற சேவைகள், மென்மேலும் அதிகரித்து, இவர்களின் வாட்டம் நீற்கிவிடும்.

**மே தினம்:** உலகத் தொழிலாளரே ஒன்று படுங்கள்'என்ற கருத்திலேயே 'மே தினம்' உருவாகியுள்ளது. ஆனால் ஆரம்ப இலக்கு, இன்று திசை மாறி அர்த்தமில்லா ஆர்ப்பாட்டத்துடன், அலங்கார மேடையில் நின்று அற்ப சொற்பமான வார்த்தைகளை, பன்னீர் தெள்ப்பது போல மேதினத்தில் பேசப்படுகின்றது.

*(துளிர்க்கும்)*

**சிரிப்பு 32**



# “வெளியே சிரிப்பும் உள்ளே அழுகையுமாக வாழ்ந்தேன்”

**அவருக்கு** உதவியாகச் சிறுவன் கார்னோ, நாளொரு தெருவும், பொழுதொரு ஜன்னலுமாக உடைப்பான்! அந்த அனுபவத்தைக் கார்னோ பின்னாளில் சாப்ளினிடமும் மற்றவர்களிடமும் விளக்கி இருக்கிறார். அது அப்படியே சாப்ளினின் வளமான கற்பனையில் பதிந்துவிட்டது. பல ஆண்டுகளுக்குப் பிறகு ஹாலிவுட்டில் ‘தி கிட்’ படத்தில் உருவெடுத்து உலகத்தையே சிரிக்க வைத்தது.

இதற்கிடையே குழந்தையின் தாயார் பிரபல மேடை நடிகை ஆகிவிடுகிறாள். புகழ், பணம், அந்தஸ்து எல்லாமே அவளிடம் ஏராளமாக இருக்கிறது. ஆனால் அவள் தன் காணாமல் போன குழந்தையை நினைத்தே வாடிக் கொண்டிருக்கிறாள். அதைத் தேடியும் அலைகிறாள். மனதிற்குச் சாந்தியைத் தேடி, ஏழைகள் வாழும் பகுதிகளுக்குச் சென்று அங்கு அல்லல்படும் குழந்தைகளுக்கு உதவி புரிகிறாள். அந்த வகையில் அவள் கண்ணில் படுகிறார்கள், சாப்ளினும், ஜானும். ஆனால் அவளுக்கு அது தன் மகன் என்பது தெரியாது. ஜானுக்கு உடல் நலம் சரியாக இல்லாதபொழுது அவள் ஒரு டாக்டரை அனுப்புகிறாள்.



ஜுரத்தால் அவதிப்படும் குழந்தை சாப்ளினின் மகன் அல்ல என்பது டாக்டருக்குத் தெரிகிறது. முறையாக - சட்டப்படி, சுவீகாரம் செய்து கொள்ளாமல் ஒரு அனாதைக் குழந்தையை வளர்ப்பது அமெரிக்காவில் சட்ட விரோதமாகும்.

அதையெல்லாம் சட்டை செய்யாத சாப்ளின், டாக்டரை விரட்டி விடுகிறார். விஷயத்தை டாக்டர் அதிகாரிகளிடம் தெரிவிக்கிறார்.

அரசாங்க அநாதைக் குழந்தை விடுதிக்காரர்கள் சிறுவனை பலவந்தமாகத் தூக்கிச் செல்கிறார்கள். அவனை மீட்டு வர சாப்ளின் சாலைகள், வீட்டு மாடிகள் போன்ற இடங்களையெல்லாம் தாவித் தாவிக் குதித்து, குழந்தையை எடுத்துச் செல்லும் லாறியிலேயே குதிக்கிறார். குழந்தையை மீட்கிறார்.

குழந்தையைப் பார்க்க வரும் நடிகைக்குச் சிறுவனின் மேல் பாசம் அதிகரிக்கிறது. அவனுடன் விளையாடும் பொழுது அவன் ஆடையிலிருக்கும் ஒரு கடிதம் அவளுக்குக் கிடைக்கிறது. அது, அவள் தன் குழந்தையைக் காரில் வைத்துவிட்டுச் செல்லும் பொழுது எழுதிய கடிதம்.

யாராவது குழந்தையைக் காப்பாற்றி, நன்றாக வளருங்கள் என்று எழுதியிருந்தாள். அதிலிருந்து ஜான்தான் தன் மகன் என்று அவளுக்குத் தெரிகிறது. தாங்க முடியாத சந்தோஷத்தில் அவனைத் தன் பங்களாவிற்கு அழைத்துச் சென்றுவிடுகிறாள். ஆனால், சிறுவன் சாப்ளினிடம் போக வேண்டுமென்று அடம்பிடித்து அழுகிறான்.

பொலிஸ்காரர் ஒருவர் சாப்ளினை இழுத்துச் செல்கிறார். அவர் சென்ற இடம் அந்த நடிகையின் வீடு! சிறுவனை அங்கு கண்டதும், சாப்ளின் அவனை வாரி அணைக்கிறார். சிறுவனோடும் அவனுடைய தாயோடும் சாப்ளின் அந்தப் பங்களாவில் வாழத் தொடங்குகிறார்.

இந்தப் படம் உலகெங்கும் பிரமாண்டமான வெற்றியைப் பெற்றது. பரிசுகளையும் வென்றது. இந்தப் படத்தின் வசூல் மூலமாக சாப்ளின் பல கோடி டாலர்களுக்கு அதிபரானார்.

ஜாக்கி கூகன் குழந்தை நட்சத்திரமானான். உலகெங்கும் சுற்றுப் பயணம் செய்தான்.

அந்த வகையில் அவனுக்கு 40 லட்சம் டாலர் கிடைத்தது. ஆனால் அந்தப் பணத்தை அவனுடைய தாயும், அவளுடைய இரண்டாவது கணவனும் வீண் செலவு செய்து கரைத்து விட்டார்கள். கூகன் பெரியவன் ஆன பிறகு, அவனுக்கு எதிர்பார்த்தபடி வேடங்கள் வரவில்லை. தாயின் மீது வழக்குப் போட்டான். ஆனால், சம்பாதித்ததில் ஒரு சிறிய தொகைதான் அவனுக்குக் கிடைத்தது. கூகனின் வாழ்க்கை, அவன் பட்ட கஷ்டங்கள், நீதிமன்ற வழக்குகள் இவைகளெல்லாம் பத்திரிகைகளில் பிரபலமாக்கப்பட்டன. அதன் விளைவாக கலி:.போர்னியா மாகாணத்தில் குழந்தைகள் சொத்தைப் பராமரிக்க ஒரு சட்டமே கொண்டு வரப்பட்டது.

சட்டப்படி பல கட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. அந்தச் சட்டத்திற்கே கூகன் ஆக்ட் (Coogan Act) என்ற பெயர் நிலைத்தது.



கூகன் அறுபது வயதைத் தாண்டிய பிறகு அமெரிக்காவில் ஒரு தொலைக்காட்சித் தொடரில் நடித்துப் பிரபலமானான். ஆனால், அந்தப் பழைய பெருமை, புகழ், பணம் போன்றவைகள் எல்லாம் மீண்டும் அவனை நாடி வரவில்லை.

“தி கிட்” படத்தில் சாப்ளின் சின்னச் சின்னக் காட்சிகளில் அருமையான நகைச்சுவையை ஊட்டினார். ஒரு உதாரணம்... சாப்ளினும், ஜானும் ஒரு இரவைக் கழிக்க வேறு இடம் இல்லாமல் வாடகைக்குப் படுக்கைகள் கொடுக்கப்படும் விடுதிக்குச் செல்கிறார்கள். அதற்குப் ‘ப்ளாப் ஹவுஸ்’ என்று பெயர். அங்கு ஒரு படுக்கைக்கு இவ்வளவு வாடகை என்று கொடுப்பார்கள். அதுவும் ஆண்களுக்கு மட்டும் தான். அதில் பலவிதமான “அட்ரஸ்” இல்லாத ஆட்கள் வருவார்கள். திருடர்கள், குடிகாரர்கள், சோம்பேறிகள், குடித்துவிட்டு வீட்டிற்குச் செல்லப் பயப்படுபவர்கள் இப்படிப் பலர். அங்கு செல்கிறார் சாப்ளின். அவருக்குப் படுக்கைக்குக் கொடுக்க வேண்டிய வாடகையும் இல்லை. தேடித் தேடிப் பார்க்கிறார். ஒரு காசு கிடைக்கிறது. படுக்கையைக் காட்டுகிறான் விடுதிச் சொந்தக்காரன். சிறுவனை எப்படி உள்ளே கொண்டு வருவது? படுக்கையில் உட்கார்ந்து யோசிக்கும் பொழுது, அடுத்த படுக்கையில் ஒரு பிக்பாக்கெட். அவன் சாப்ளின் பாக்கெட்டில் கையை விடுகிறான். அவனுக்குக் கிடைக்கிறது ஒரு காசு! அது இருப்பது இவருக்கே தெரியாது. பிக்பாக்கெட்டின் கெட்டிக்காரத்தனத்தைப் போற்றும் வகையில் அவனுடைய கையைப் பிடித்து இன்னொரு பாக்கெட்டில் விடுகிறார், அவனுக்குக் கிடைக்குமா என்று பார்க்க! ஒரு பத்திரிகைக்காரர், சாப்ளின் ஒரு மேதை. என்பதற்கு இந்த ஒரு காட்சியே போதும் என்று எழுதினார்.

கட்டிலில் படுத்துக் கொண்டு நன்றாகப் போர்த்திக் கொள்கிறார். அதைத் தூக்கிப் பிடிக்கும் பொழுது அருகிலிருக்கும் கண்ணாடி ஜன்னல் வழியாக உள்ளே நுழைகிறான் சிறுவன். வேகமாகப் போர்வைக்குள்ளே மறைந்து விடுகிறான். தூக்கம் வராததினால் போர்வைக்குள்ளேயே சாப்ளின் மடியில் உட்காருகிறான். போர்வை உயர்கிறது. அதைக் கவனித்த விடுதிச் சொந்தக்காரன் சந்தேகத்தோடு அருகில் வருகிறான். அதைக் கவனித்த சாப்ளின், போர்வைக்குள்ளே தன் முழங்கால்களை மடித்து ஆட்டுகிறார். அதைப் பார்த்து விட்டு அவன் சென்று விடுகின்றான். இந்தக் காட்சி சாப்ளினின் கற்பனை வளத்திற்கு மற்றொரு சாட்சி.

குழந்தையை அனாதை விடுதிக்காரர்கள் எடுத்துச் செல்லும் பொழுது அவன் கதறி அழுகிறான்.

(தொடரும்)

# மம்பட்டியான் சுட்டுக்கொலை!

**மம்பட்டியான்** விவகாரம் தமிழக சட்டசபை வரை எதிரொலித்தது. எம்.எல்.ஏ.க்கள் கேள்விக்கணைகளை வீசினார்கள். இதனால், தேடுதல் வேட்டை முடுக்கிவிடப்பட்டது.

காடுகளில் சென்று தேடும் விஷேட பயிற்சி பெற்ற மலபார் சிறப்பு பொலிஸ் படை வரவழைக்கப்பட்டது. கோவை, சேலம் ஆகிய நகரங்களில் இருந்து சிறப்பு ஆயுதப்படைப் பொலிஸார் விரைந்தனர்.

மைசூர் பொலிஸ் உதவியும் கேட்கப்பட்டது. இன்ஸ்பெக்டர் கிரி தலைமையில் இந்த அதிரடிப்படை செயல்படத் தொடங்கியது.

மம்பட்டியான் பற்றி துப்புக் கொடுத்தால் ரூபா.5 ஆயிரம் பரிசு கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.



மம்பட்டியான்

## காதல்

பெண்ணாகரம் காட்டுப்பகுதிக்குள் மம்பட்டியான் சுற்றித்திரிந்து கொண்டிருந்தான். அப்போது சிக்கல்ராம்பட்டியைச் சேர்ந்த கருப்பண்ணன் என்பவன் மம்பட்டியானின் நண்பன் ஆனான். அவன் கள்ளச்சாராயம் விற்பவன். சில சமயம் அவனைத் தேடி அவன் வீட்டிற்கே மம்பட்டியான் செல்வான்.

கருப்பண்ணனுக்கு 2 தங்கைகள். மூத்த தங்கை, கணவனை இழந்த விதவை. அடிக்கடி ஏற்பட்ட சந்திப்பில் மம்பட்டியானுக்கும், அவளுக்கும் காதல் ஏற்பட்டது. இருவரும் ரகசியமாகச் சந்தித்து வந்தார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் கருப்பண்ணனின் 2-ஆவது தங்கை நல்லம்மாள் ஒரு நாள் மம்பட்டியானின் கண்ணில் பட்டுவிட்டாள். அவள் நல்ல அழகி. அவளையும் அடைந்துவிட வேண்டும் என்று மம்பட்டியான் ஆசைப்பட்டான்.

## மிரட்டல்

பொலிஸாரின் வேட்டை தீவிரம் அடைந்ததை உணர்ந்த மம்பட்டியான், தன்னுடைய இருப்பிடத்தை மாற்றத் திட்டமிட்டான். நல்லம்மாளையும் தன்னுடன் அழைத்துச்சென்று விடவேண்டும் என்று நினைத்தான்.

தன்னுடைய இந்த விருப்பத்தைக் கருப்பண்ணனிடமும், அவரது தந்தை பொன்னப்ப கவுண்டரிடமும் கூறினான். ஆனால் அவர்கள் சம்மதிக்கவில்லை.

ஏற்கனவே விதவைத் தங்கையுடன் தொடர்பு வைத்திருக்கிறாயே! அவளையே கல்யாணம் செய்து அழைத்துக் கொண்டு போ! 2ஆவது தங்கையை தரமாட்டேன் என்று கருப்பண்ணன் அடித்துச் சொல்லிவிட்டான்.

இதனால் மம்பட்டியானுக்கு ஆத்திரம் ஏற்பட்டது.

நல்லம்மாளைத்தான் திருமணம் செய்வேன். ஆனால் அவளை என்னுடன் அனுப்பு. ரூபா 1,000 தருகிறேன். நீ சம்மதிக்காவிட்டால் அவளைத் தூக்கிக் கொண்டு போய்விடுவேன் என்று கூறிவிட்டு மம்பட்டியான் காட்டுக்குள் சென்று விட்டான்.

## கொலை செய்யத் திட்டம்

தங்கைகளின் பிரச்சினையால் மனக்குழப்பம் அடைந்த கருப்பண்ணன், பொலிஸ் உதவியை நாடினான். பெண்ணாகரம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று சப்-இன்ஸ்பெக்டரிடம் நடந்த விபரத்தைத் தெரிவித்தான். அவர் மூத்த அதிகாரிகளிடம் தகவல் தெரிவித்து உதவி செய்வதாக உறுதி அளித்து அனுப்பி வைத்தார்.


அதன் பிறகு கருப்பண்ணனைச் சந்தித்த ஒரு அதிகாரி, மம்பட்டியானுடன் மோதி உன்னால் ஜெயிக்க முடியாது. விஷத்தைக் கொடுத்து அவனைக் கொல்ல முயற்சி செய் என்று ஆலோசனை கூறினார்.

## நண்பனே சுட்டுக்கொன்றான்

27.03.1964 அன்று கருப்பண்ணன் கையில் துப்பாக்கியுடன் காட்டிற்குள் சென்று கொண்டிருந்தான். அப்போது திடீரென்று மம்பட்டியான் அவன் முன் வந்து நின்றான். இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது.

நீ என்னை பொலிஸில் காட்டிக் கொடுக்கப்போவதாக சொன்னாயாமே! எங்கே காட்டிக்கொடு பார்ப்போம் என்று கூறிக்கொண்டே மம்பட்டியான் கருப்பண்ணனை நோக்கி துப்பாக்கியால் சுட்டான். ஆனால், குறி தவறியது.

உடனே கருப்பண்ணன் தனது கையில் வைத்திருந்த நாட்டு துப்பாக்கியை எடுத்து மம்பட்டியானை நோக்கி 2 முறை சுட்டான். மம்பட்டியான் வயிற்றில் ஒரு குண்டும் இடுப்பில் ஒரு குண்டும் பாய்ந்தன.



மம்பட்டியான் கீழே விழுந்தான். கருப்பண்ணன் ஓடிப்போய் மம்பட்டியான் கையில் இருந்த துப்பாக்கியைப் பிடுங்கிக் கொண்டு மீண்டும் ஒரு முறை சுட்டான். மம்பட்டியான் அதே இடத்தில் செத்தான். இதுவே அதிகாரபூர்வ தகவலாகும்.

இது தவிர அதிகாரபூர்வமற்ற முறையில் மற்றொரு தகவல் உலவியது. நல்லம்மாளைக் கூப்பிடுவதற்காக மம்பட்டியான் சம்பவ தினத்தன்று கருப்பண்ணன் வீட்டிற்குச் சென்றான். மம்பட்டியானுக்கு வீட்டில் விருந்து கொடுத்தான்.

அந்த சமயத்தில் தர்பூசனியில் விஷத்தை ஏற்றி கொடுத்தான். அதை சாப்பிட்ட மம்பட்டியான் சிறிது நேரத்தில் மயக்கம் போட்டு விழுந்தான். உடனே மம்பட்டியானைக் கருப்பண்ணன் துப்பாக்கியால் சுட்டு கொன்றுவிட்டான். இவ்வாறு பரவலாகப் பேசப்பட்டது.

எது எப்படியோ, மம்பட்டியானைக் கருப்பண்ணன் தீர்த்து கட்டிவிட்டான்.

தகவல் கிடைத்ததும் மாவட்ட பொலிஸ் அதிகாரி கிருஷ்ணராஜ், உதவி சுப்பிரிண்டன் வி.பொன்னையா, பெண்ணாகரம் சப் - இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் ஆகியோர் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை நடத்தினார்கள்.

## மான்கறி குழம்பு - சோறு

மம்பட்டியானுக்கு வயது சுமார் 30 இருக்கும். 5 அடி உயரத்தில் கம்பீரமான தோற்றத்துடன் இருந்தான். முறுக்கு மீசை வைத்திருந்தான். இராணுவ வீரரைப் போல உடை அணிந்திருந்தான். இடுப்பில் பெரிய பெல்ட் கட்டியிருந்தான். அதில் துப்பாக்கி தோட்டாக்கள் இருந்தன.

அவன் கையில் 2 அடி நீள பெரிய கத்தி இருந்தது. கையில் கடிகாரம் கட்டியிருந்தான். கழுத்தில் தங்கச் சங்கிலி அணிந்திருந்தான். அதில் புலி நகம் கோர்க்கப்பட்டிருந்தது.

ஒரு கட்டுச்சோறு மூட்டையும் வைத்திருந்தான். அதில் மான் கறி குழம்பும், சோறும் கலந்த சாப்பாடு இருந்தது.

மம்பட்டியானின் உடல் பரிசோதனைக்காக தர்மபுரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மம்பட்டியான் உடலைப் பார்க்க பெரும் கூட்டம் கூடியது.

## உறவினர் வரவில்லை

பிரேத பரிசோதனைக்குப் பிறகு மம்பட்டியான் உடல் பொதுமக்கள் பார்வைக்காக ஆஸ்பத்திரியில் ஒரு மணி நேரம் வைக்கப்பட்டது.

மம்பட்டியான் உடலை வாங்க உறவினர்கள் யாராவது வருவார்கள் என்று பொலிஸார் எதிர்பார்த்தனர். ஆனால் யாரும் வரவில்லை. இதனால் உடலை பொலிஸ் லாரியில் ஏற்றி தர்மபுரி குமாரசாமிபேட்டை சுடுகாட்டுக்குக் கொண்டுபோய் தகனம் செய்தனர். அங்கும் பல்லாயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் கூடியிருந்தார்கள்.

## 5 ஏக்கர் நிலம் - ரூபா 2 ஆயிரம் பரிசு

மம்பட்டியான் பற்றி துப்பு கொடுத்தால் பரிசு வழங்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி மம்பட்டியானை கொன்ற கருப்பண்ணனுக்குப் பரிசு வழங்க பொலிஸ் அதிகாரிகள் சிபாரிசு செய்தனர். இதனைத் தொடர்ந்து கருப்பண்ணனுக்கு ரொக்கப்பணம் 2 ஆயிரமும், 5 ஏக்கர் நிலமும் வழங்கப்பட்டது. அதோடு தற்காப்பிற்காக அவனுக்கு லைசென்ஸ் (அனுமதி) பெற்ற துப்பாக்கியும் கொடுக்கப்பட்டது.

## 4 பேருக்குத் தூக்கு

மம்பட்டியான் கோஷ்டியைச் சேர்ந்த 2 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். 3 பேர், கோர்ட்டில் சரண் அடைந்தனர்.

இந்த 5 பேர்களில், சுப்பிரமணி, சாமியண்ணன், சின்னண்ணன், நல்லப்ப கவுண்டர் என்ற 4 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

ஒருவன் சிறுவனாக இருந்ததால், சீர்திருத்தப்பள்ளிக்கு அனுப்பப்பட்டான்.

# முட் பாதையில் மரித்த மிதவாதம்

**இரு எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும் இலங்கைத் தமிழ் அரசியல் தொடர் இது.**

## கொலையாளிகளின் தேனீர்க் கோப்பைக்குள் மிதவாதத் தமிழ் தலைவர்களின் இரத்தம்!!

**கொ**ழும்பிலேயே அமிரும் யோகேஸும் சுட்டுக் கொல்லப் பட்டனர். 342/2 பௌத்தாலோக மாவத்தையிலுள்ள இரு மாடிக் கட்டடத்தில் அமிர்தலிங்கம் தம்பதியர், யோகேஸ்வரன் தம்பதியர், சிவசிதம்பரம், மாவை சேனாதிராஜா ஆகியோர் குடியிருந்தனர்.




இவர்களின் பாதுகாப்புக்கென கந்தசாமி, சத்திய மூர்த்தி, நிசங்க உட்பட ஆறு பேர் கொண்ட குழு அமர்த்தப்பட்டிருந்தது. இவர்கள் பொலிஸ் துணைப் படையையும் மகாவலி அமைச்சின் பாதுகாப்புப் பிரிவையும் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு ஆயுதங்களும் வழங்கப்பட்டிருந்தன. கீழ் மாடியில் அமிர்தலிங்கம் தம்பதியரும், மாவை சேனாதிராஜாவும் குடியிருந்தனர். மேல் மாடியில் யோகேஸ்வரன் தம்பதியரும், சிவசிதம்பரமும் தங்கியிருந்தனர்.

1989ஆம் ஆண்டு மே மாதம் புலிகளுக்கும் பிரேமதாசா அரசுக்குமிடையிலான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பிருந்தே, அதாவது பெப்ரவரி மாதம் முதல் யோகேஸ்வரனுடன் விசு, அலோசியஸ், அறிவு ஆகிய மூன்று புலி உறுப்பினர்களும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். தமிழீழ இயக்கங்களுக்கிடையில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவது தொடர்பாக இப் பேச்சுவார்த்தைகளில் ஆராயப்பட்டது. சுமார் நான்கு தடவைகள் இவர்கள் சந்தித்துப் பேசியிருந்தனர். அன்றைய தினம் இப் பேச்சுவார்த்தைகளில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் ஆகியோரும் கலந்துகொள்ள வேண்டுமென்று அலோசியஸ், யோகேஸ்வரனிடம் வலியுறுத்தியிருந்தார்.

அன்று காலை பத்து மணியளவில் புலி இயக்க உறுப்பினரான பீட்டர் அலோசியஸ் லியோன், யோகேஸ்வரனுக்குப் போன் செய்தார். மாலை ஆறு மணியளவில் தானும் விசுவும் வருவதாக அறிவித்திருந்தார். இராசையா அரவிந்தராஜ் என்ற பெயர் கொண்ட விசு, அலோசியஸ் மற்றும் அறிவு என்றழைக்கப்படும் சிவகுமார் ஆகிய மூவரும் மாலை 6.40 மணியளவில் மஞ்சள் நிற கப் வாகனமொன்றில் வந்து சேர்ந்தனர். அவர்களைப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டாமென்றும் மேல் மாடிக்கு



கொழும்பில் அமிர்தலிங்கம் கொலை செய்யப்பட்ட வீடு

அனுப்பி வைக்கும்படியும் பாதுகாப்பு அதிகாரிகளிடம் ஏற்கனவே யோகேஸ்வரன் கூறியிருந்தார். வந்தவர்கள் மூவருமே தம்மைப் புலி இயக்கத்தவரென அறிமுகப்படுத்திக் கொண்டார்கள். ஒருவரின் அடையாள அட்டையை மட்டும் பரிசோதித்த பின்னர் அவர்கள் மேல் மாடிக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். அறிவு மட்டும் கீழே மாடிப்படியோரத்தில் நின்று கொண்டிருந்தார். ஏனைய இருவரையும் யோகேஸ்வரன் மேல் மாடிக்கு அழைத்துச் சென்றார். கீழ் மாடியில் குடியிருந்த அமிர்தலிங்கத்துக்குப் பேச்சுவார்த்தை நடத்துவதற்குப் புலிகள் வந்திருக்கும் தகவல் அனுப்பி வைக்கப்பட்டது. அவர் இந்திய உயர்ஸ்தானிகர் மல்ஹோத்ரா ஹோட்டல் 'தாஜ் சமுத்ராவில்' ஒழுங்கு செய்திருந்த இரவு விருந்துபசாரத்தில் கலந்து கொள்ளச் செல்வதற்காகத் தயாராகிக் கொண்டிருந்தார். அப்போது கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கை வந்திருந்த இந்திய இராஜதந்திரி பி.ஜி.தேஷ்முக்குக்கு இந்த விருந்துபசாரம் ஏற்பாடாகியிருந்தது. அமிர்தலிங்கத்தின் இரண்டாவது மகன் டாக்டர் பகீரதனையும்

(அரசியல் தொடர்)

மருமகள் மதியையும் அன்று காலைதான் அமிர் தம்பதியர் கட்டுநாயக்கா விமான நிலையம் சென்று லண்டனுக்கு வழியனுப்பி வைத்திருந்தனர்.

தமிழீழ இயக்கங்களின் ஒற்றுமை பற்றி தமிழர் கூட்டணித் தலைவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்த விசுவும் அலோசியஸும் தேனீர்க் கோப்பைகளை மேசையில் வைக்கும் சாட்டில் எழுந்து திடீரென அமிர், யோகேஸ், சிவா ஆகிய மூன்று தலைவர்களையும் நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர். மூன்று மிதவாதத் தலைவர்களின் உடல்களிலிருந்து சீறிய இரத்தத் துளிகள், விசுவும் அலோசியஸும் கீழே வைத்த தேனீர்க் கோப்பைகளுக்குள் விழுந்தன. முட்பாதையில் கொன்றொழிக்கப்பட்ட மிதவாதத்தின் துயரமான சம்பவமிது. இச் சம்பவத்தில் உயிர் தப்பிய கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் மூன்று வருடங்களின் பின்னர் கொலையுண்ட கூட்டணித் தலைவர்களின் நினைவாக நடத்தப்பட்ட ஞாபகார்த்தக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

எமது விருந்தாளியாக அவர்கள் வந்தார்கள்; எம்மை நண்பர்களென அழைத்தார்கள். திருமதி யோகேஸ்வரன், அவர்களுக்குப் பரிமாறிய பிஸ்கட்டுக்களை உண்டார்கள். அவர் வழங்கிய தேனீரை அருந்தினார்கள். தமிழ் ஐக்கியம் பற்றி அவர்கள் கலந்துரையாடினர். தேனீர்க் கோப்பைகளை மேசையில் வைப்பதற்காக அவர்கள் எழுந்தனர். அவர்கள் தமது பாக்கெட்டுகளில் கைகளை விட்டு, ரிவோல்வரை வெளியே எடுத்து எம்மைச் சுட்டனர். அங்கிருந்த இரு பாதுகாவலர்களும் பொலிஸ்காரர்களும் காட்டிய துணிச்சலின் காரணமாகவே அந்த வீட்டில் வாழ்ந்த ஏனையவர்கள் இன்று உயிருடன் இருக்கிறார்கள். ஏன் அவர்கள் அமிர்தலிங்கத்தையும் யோகேஸ்வரனையும் கொன்றார்கள்? அவர்கள் தமிழ் மக்களுக்காகப் பணியாற்றியதாலா கொல்லப்பட்டார்கள்? தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வொன்றினைக் காண உதவினார்கள் என்பதற்காகவா கொல்லப்பட்டார்கள்? இந்நாட்டிலுள்ள சகச இன மக்களும் கௌரவமாகவும் மரியாதையாகவும் வாழ வேண்டுமென்று அவர்கள் விரும்பியதாலா கொல்லப்பட்டார்கள்? தமிழர்களுக்கெதிரான பாரபட்சங்களை இல்லாதொழிப்பதற்காக அமிர்தலிங்கம் கடுமையாகப் பாடுபட்டார். இந்திய வம்சாவளித் தமிழ் மக்களின் இலட்சியத்திற்காகவும் அவர் செயற்பட்டார். அடக்கியொடுக்கப்பட்ட முஸ்லிம்கள் மற்றும் சிங்கள மக்களின் உரிமைக்காகவும் அவர் செயற்பட்டார். ஏன் அவரைக் கொன்றார்கள்? ஏன் அவரைக் கொன்றோமென அவர்கள் உலகுக்கெதுவும் சொல்லவில்லை."

இவ்வாறு அந்த ஞாபகக் கூட்டத்தில் உரையாற்றிய சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்திய புலி இயக்க உறுப்பினர்கள் மூவரும் பாதுகாவலர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அமிர்தலிங்கத்தைப் புலிகள் ஏன் சுட்டுக் கொன்றார்கள் என்ற விடயம் பற்றி பின்னர் பார்ப்போம். அமிர்தலிங்கத்துடன் புலி இயக்கத் தலைவர்

**இணைந்து எழுதுவது**
**த. சபாரத்தினம்**
**+**
**அம்பி மகன்**

பிரபாகரன் மிக நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தார். அப்போதைய தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனை, அமிர்தலிங்கம் சந்திக்கச் சென்ற போது புலிகளின் முக்கியஸ்தர்களில் ஒருவரான பேபி சுப்பிரமணியத்தையும் அழைத்துச் சென்றிருந்தார். சென்னை அடையாறிலிருந்த புலிகளின் அலுவலகத்துக்கு ஒரு தடவை அமிர்தலிங்கம் சென்று பிரபாகரனுடன் பேசி விட்டுத் திரும்பும்போது, அவரை வழியனுப்ப வந்த புலித் தலைவர், கார்க் கதவைச் சாத்திவிட்டு அமிர்தலிங்கத்தைப் பார்த்துச் அண்ணன் நீங்கள் கவனம். உங்களைக் கொல்ல ஏனைய இயக்கத்தவர்கள் முனையலாம்" என எச்சரிக்கை செய்தார் என்று திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் பின்னாட்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

அமிர்தலிங்கம், கொல்லப்படுவதற்கு முதல் நாள் இந்தியாவிலிருந்து கொழும்புக்கு வருகை தந்திருந்த பி.ஜி.தேஷ்முக் தலைமையிலான இந்திய இராஜதந்திரிகளை இந்தியத் தூதரகத்தில் வைத்துச் சந்தித்துப் பேசியிருக்கிறார். ஜனாதிபதி பிரேமதாசாவுடன் பேசிய இந்திய இராஜதந்திரிகள், அமிர்தலிங்கத்துடன் தனியாகப் பேசியிருக்கிறார்கள். இச் சந்திப்பின் பின்னர், "எங்கட சனங்களின் பிரச்சினை தீரப் போகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியை முதல் நிலைப்படுத்தி, இந்திய அரசாங்கம் தமிழ் மக்களுக்குத் தீர்வை ஏற்படுத்தப் போகிறது" என்று அமிர்தலிங்கம் தனது மகன் டாக்டர் பகீரதனுக்குக் கூறியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1990ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வெளிவந்த 'லங்கா கார்டியன்' சஞ்சிகையில் புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையா வழங்கிய பேட்டி வெளியிடப்பட்டிருந்தது. "இந்தியாவின் ஏஜண்டுகளாகவும் அவர்களுடன் இணைந்து வேலை செய்பவர்களாகவும் இருந்ததாலேயே அவர்களைக் கொலை செய்தோம்" என அப்பேட்டியில் மாத்தையா குறிப்பிட்டிருந்தார். ஒரு வருடத்துக்கு முன்னரேயே அரசியலிலிருந்து ஒதுங்குமாறு அமிர்தலிங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்திருந்த புலித்தலைமை, அவருக்கு மரண தண்டனையும் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகிய தலைவர்களின் இறுதிப் பயணம், கொழும்பு பௌத்தாலோக மாவத்தையில் அவர்கள் தங்கியிருந்த இல்லத்திலிருந்து 1989ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15ஆம் திகதி காலை ஆரம்பமானது. அதற்கு முன்னர் பல்லாயிரக்கணக்கான மக்கள் இத்தலைவர்களுக்கு கொழும்பில் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பூதவுடல் தாங்கிய பேழைகள் மீது தமிழர் விடுதலைக் கூட்டணியின் கட்சிக் கொடி போர்த்தப்பட்டிருந்தது. இரத்மலானை விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட பூதவுடல்கள் தாங்கிய பேழைகள் விமானப் படை விமானம் மூலம் திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்ன, வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் மற்றும் மாகாண அமைச்சர்கள் திருமலை விமானதளத்தில் பூதவுடல்கள் தாங்கிய பேழைகளைக் கையேற்றுக் கொண்டனர். மலர்களால் அலங்கரிக்கப்பட்ட வாகனங்களில் பேழைகள் திருமலை நகர மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

வீதிகளின் இருமருங்கிலும் மக்கள் குவிந்து நின்று தமது இறுதி மரியாதையைச் செலுத்தினர். திருமலை நகர மண்டபத்துக்கும் சாரி சாரியாக வந்த மக்கள் கூட்டம் கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தியது. அப்போது அம்பாறையில் தங்கியிருந்த ஜனாதிபதி பிரேமதாசா ஹெலிகொப்டர் மூலம் திருமலைக்குச் சென்று தனது இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்.

(தொடர்ந்து வரும்...)




**சந்து நாயர்** கோடவுனுக்குள் தயாராக வைத்திருந்த மண்ணெண்ணெய் டின்னை எடுத்தார்.

ஸ்ரீதேவியின் எலும்புக்கூட்டை பக்கத்திலிருந்த கொன்றை மரத்தின் அடியில் போட்டனர். மந்திரம் உச்சரித்தபடியே அதன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி, ஜயந்தன் தீ கொளுத்தினார்.

எலும்புக்கூடு எரியத் தொடங்கியது.

"இனிமேல் அவள் கண்களுக்குத் தெரியும்படியாக உலாவ முடியாது!" - ஜயந்தன் வெற்றிப் பெருமிதத்துடன் பேசினார்.

"கோவிந்தா, இந்த எலும்பு மொத்தமும் எரிஞ்சு சாம்பலாகிறவரைக்கும் நீ இங்கேயே காவலிரு. முழுசா எரியறதுக்குள்ள யாராவது கொண்டு போயிட்டாங்கன்னா சிக்கல்!" - ஜயந்தன் எச்சரித்தார்.

சந்து நாயரும், ஜயந்தனும் அங்கிருந்து கிளம்பினர்.

பிரபாகரன் அங்கேயே காவலிருந்தான்.

அதே சமயம் சற்றுத் தொலைவில் ஏதோ ஒரு வெளிச்சம் தெரிவதை குமார் கவனித்தார். உடனே, தேவதத்தன் நம்பூதிரியும் அதைச் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

"தேங்காய் கோடவுன் கிட்டயிருந்துதான் வெளிச்சம் தெரியுது. மந்திரவாதி ஜயந்தன் இப்ப அங்கதான் இருக்கிறார். ஒரு தடவை போய்ப் பார்த்து வந்துட்டா என்ன?" -குமார் கேட்டார்.

திருமேனியும் அதற்கு ஒப்புக் கொண்டார்.

இருவரும் நடக்கத் தொடங்கினர்.

தென்னந் தோப்பை

**எழுதுவது**
**சிவன்**

நெருங்கியதுமே அவர்களுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

எதையோ அங்கே போட்டு எரிக்கிறார்கள்.

வேக வேகமாக நடந்தனர்.

சற்றுத் தொலைவிலேயே பிரபாகரன் அதன் அருகில் நின்று கொண்டிருப்பது தெரிந்தது.

"என்ன இது?" - குமார் கேட்டார்.

"எலும்புக் கூடு எரியுது." - அப்போது பேசியவன் கோவிந்தன். உண்மையைச் சொன்னான்.

"யாரோட எலும்புக் கூடு?"


"ஒரு பெண்ணோடது!"

"என்ன பிரபாகரா இதெல்லாம்?" குமார், பிரபாகரனைப் பிடிக்க முயன்றார்.

ஆனால், பிரபாகரனை அங்கிருந்து அசைக்க முடியவில்லை. நட்டு வைத்த தூண் மாதிரி அசையாமல் நின்றான். அசாதரணமான பலத்துடன் இருப்பதாகத் தெரிந்தது. அது மட்டுமின்றி முன்பின் தெரியாதவனைப் போல் பேசியது வேறு குமாரை குழம்ப வைத்தது.

அதே நேரம் தேவதத்தன் நம்பூதிரி, தரையிலிருந்து கொத்தாகப் பசும்புல்லைப் பிடுங்கி மந்திரித்தவாறே எரிந்து கொண்டிருக்கும் எலும்புக் கூட்டின் மீது போட்டார்.

அடுத்த விநாடியே தீ அணையவும் செய்தது.



"நீங்க என்ன காரியம் பண்ணிட்டீங்க?" பிரபாகரன் எழுந்து பக்கத்திலிருந்த குமாரைத் தாக்க ஆரம்பித்தான்.

உடனே திருமேனி அவன் பக்கமாகத் திரும்பி, அவனை நோக்கி சுண்டுவிரலை நீட்டினார்.

பிரபாகரன் அப்படியே அசைவற்றுப் போனான்.

"யார் நீ?" திருமேனி கேட்டார்.

"கோவிந்தன்!" - பதிலளித்தான்.

"அப்ப பிரபாகரன் எங்கே?"

"அவன் இப்ப இல்லை. நான் மட்டும் தான் இருக்கிறேன்." - சொல்லியபடி அவன் அங்கிருந்து ஓடி மறைந்தான்.

எலும்புக் கூட்டில் எரிந்த தீ இப்போது முற்றிலுமாக அணைந்து விட்டிருந்தது.

"எனக்கு என்ன தோணுதுன்னா, இதை எங்க காலேஜில இருந்து திருடிட்டு வந்திருக்கணும். அநேகமா இது ஸ்ரீதேவியோட எலும்புக் கூடாகத்தான் இருக்கும்."

"நீங்க சொல்றது உண்மையா இருந்தா, அவளுக்கு இந்த எலும்புக் கூடு இனிமேல் பயன்படாது. நெருப்புத் தீண்டிட்ட எலும்பை அவளால பயன்படுத்த முடியாது."

"அப்புறம் இதை என்ன செய்யறது?"

"தேவையான மந்திரங்களைப் பிரயோகித்து நாம இதைப் பாதுகாக்கணும்."

"அப்படியானா ஸ்ரீதேவியோட விஷயம்?"

"அதைப்பத்தி நாம பிற்பாடு பார்த்துக்கலாம்."

"இந்த எலும்புக் கூட்டை என்ன பண்றது?"

"அதைத் திரும்பவும் அந்தக் கோணிப் பைக்குள்ளேயே போட்டு எடுத்துட்டு வாங்க!"

குமார் எலும்புத் துண்டுகளை கோணிப் பைக்குள் போட்டுக் கொண்டு திருமேனியைப் பின் தொடர்ந்தார்.

இருவரும் இல்லத்தை அடைந்தனர்.

"தற்சமயம் இந்த மூட்டை அந்த எட்டி மரத்து மேல இருக்கட்டும். மறைவா வையுங்க!" - திருமேனி கூறினார்.

உடனேயே மரத்தின் மீது ஏறிக்கொண்ட குமார், கோணிப் பையை எட்டி மரத்தின் அடர்த்தியான இலைப் பரப்புக்குள் மறைத்து வைத்தார்.

"அடுத்தபடியாக நாம் செய்யவேண்டிய வேலை, கோவிந்தனை அழிப்பதுதான். அவன் பகல் நேரத்தில் எங்கும் வெளியேற முடியாது. இரவு நேரத்தில் அவனைப் பிடிப்பதும் சுலபமல்ல. அதனால் அவன் பகல் பொழுதில் தங்கியிருக்கும் இடத்தை நாம் கண்டு பிடிப்பது அவசியம்." - தேவதத்தன் கூறினார்.

பொழுது புலர்ந்தது.

சந்து நாயரும், ஜயந்தனும் ஒன்றாக புன்னை மரத்தின் அடிப்பகுதியை வந்து பார்த்தனர். அங்கு கொஞ்சம் புல் மட்டும் கருகிக் கிடந்தது.

"சாம்பலைக் காணோமே?" சந்து நாயர் கேட்டார்.

"நானும் அதைப் பற்றித் தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். எலும்பு எரிஞ்சதாத் தெரியலை. நடுவில என்னமோ சிக்கல் ஏற்பட்டிருக்கு. எதுக்கும் நாம கோடவுனுக்குள்ள போய்ப் பார்ப்போம்."

அங்கு கோணி மூட்டை இல்லை. அத்துடன் பிரபாகரனையும் காணோம்.

அன்று இரவு குமாரின் இல்லத்தில் ஹோமத்தைத் தொடங்கினார்கள்.

பழைய காரியஸ்தர் நாராயணன் நாயரின் மருமகள் ஜெயலட்சுமியும் வரவழைக்கப்பட்டிருந்தாள்.


தேவதத்தன் நம்பூதிரியால் பிரபாகரனின் ஆத்மாவை வரவழைக்க ஹோமம் ஆரம்பிக்கப்பட்ட சில நிமிடங்களிலேயே, ஜெயலட்சுமியின் கண்களில் மாற்றம் தென்படத் தொடங்கியது.

(வாசனை வீசும்....)

மனதுக்கு நிம்மதி

# சிந்தனையின் வலிமை!

*கர்ணனுக்கு* மட்டுமல்ல, கடவுள் நம் எல்லோருக்குமே ஒரு கவசம் தந்திருக்கிறார். அவமானம், துயரம், சோகம் என்று எதுவும் நம்மைப் பாதிக்காதவாறு காக்கவல்ல கவசம் அது! அப்படி என்ன கவசம் அது என்று ஆர்வமாகிறீர்களா? அதுதான் நம் உடலைச் சுற்றி இருக்கும் 'சூட்சும சரீரம்'. அதை



ஆங்கிலத்தில் 'எனர்ஜி பீல்ட (Ener gy Field) என்பார்கள்.

மிகப் பெரிய மகான்களையோ, மேதைகளையோ, விஞ்ஞானிகளையோ பார்க்கும் போது அவர்களிடத்தில் ஒரு தேஜஸ் ஜொலிப்பதை உணர்ந்திருக்கிறீர்களா? யாரிடமெல்லாம் எனர்ஜி பீல்ட் அதிகமாக இருக்கிறதோ, அவர்களிடமெல்லாம் அந்த தேஜஸ் ஒளிரும். அதைத்தான் நமது முன்னோர்கள், கடவுள் மற்றும் ஞானிகளின் தலைக்குப் பின்புறம் ஒளிவட்டமாகக் காண்பித்தார்கள்.

சில ஆண்டுகளுக்கு முன் நடந்த ஒரு நிகழ்ச்சி இது. என் நீண்ட நாள் மாணவரான ஜெய்பூரியா, பெங்களூரில் பெரிய தொழிலதிபர்.

ஒரு நாள் அதிகாலையில் வாக்கிங் போய்விட்டு வீடு திரும்பும் போது, அவரை சிலர் துப்பாக்கியால் சுட்டுக் கடத்திக்கொண்டு போய்விட்டனர்.

கடத்தப்பட்ட ஜெய்பூரியாவுக்கு வயது 58. இரத்த அழுத்த நோயாளி. நீரிழிவு வியாதியும் உண்டு. அவரது குடும்பத்தில் உள்ள ஆண்கள் அனைவரும் பொலிஸுடன் இணைந்து ஜெய்பூரியாவைத் தேடுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்க... வேதனையுடன் வீட்டில் இருந்த பெண்கள் அனைவரும் ஒன்றாக அமர்ந்து இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்கள். துன்பங்களை எதிர்கொள்ளும் வலிமையைக் கொடுக்கும் மிருத்யுஞ்ச மந்திரத்தை உச்சரித்துக் கொண்டேயிருந்தன அவர்களின் உதடுகள்.


சில வாரங்களுக்குப் பிறகு ஜெய்பூரியாவை பொலிஸ் மீட்டது.

செல்வச் செழிப்பு மிகுந்த குடும்பத்தில் பிறந்து, தன் வாழ்க்கையில் எந்த விதமான சிரமங்களையும் அனுபவித்திராத ஜெய்பூரியா, குண்டடிபட்டு வலியால் துடித்துக் கொண்டிருந்த நிலையில், பெங்களூரின் ஒதுக்குப்புறமான புறநகர்ப் பகுதியில் நிமிர்ந்து கூட நிற்க முடியாத அளவு சிறிய இருண்ட பாதாள அறை ஒன்றில் வாரக்கணக்கில் அடைபட்டுக் கிடந்திருக்கிறார். உயிர் மீண்டு வந்திருக்கிற தங்கள் தந்தைக்கு எப்படி ஆறுதல் சொல்வது என்று தெரியாமல் பிள்ளைகள் கலங்கி நிற்க, ஜெய்பூரியா சற்றும் மனம் தளராமல் உறுதியாக இருந்தார். அவரது உடம்பில் பாய்ந்திருந்த துப்பாக்கி ரவையை அகற்ற அவரை மருத்துவமனைக்கு அழைத்துக் கொண்டு போனபோதுதான் அவரது கழுத்திலும் ஒரு குண்டு பாய்ந்து மறுபக்கமாக வெளியில் போயிருப்பது மருத்துவர்கள் சொல்லித் தெரியவந்தது.

ஆனால், அத்தனை நேரமும் எங்களுக்கு இருந்த பதற்றத்தில் ஒரு சிறுதுளி கூட ஜெய்பூரியாவுக்கு இல்லை.

"இவ்வளவு கஷ்டங்களை அனுபவித்த பிறகும், எப்படி உங்களால் இவ்வளவு தெளிவாக இருக்க முடிகிறது?" என்று அவர் மனைவி ஆச்சரியப்பட்டுக் கேட்க,

"துன்பங்களையும் வலிகளையும் தாங்கும் அளவுக்கு எனக்கு ஏது சக்தி? நான் என்னிடம் இருக்கும் சொற்ப சக்தியை ஆண்டவனின் மகாசக்தியோடு இணைத்துக் கொள்வது மாதிரி கற்பனை செய்து கொண்டேன். உடனே என் உடம்பு அழிந்து வேறு ஒரு புது உடம்பு உருவானது போல் உணர்ந்தேன். அவ்வளவுதான்.. குண்டடிபட்ட வலி எனக்குத் தெரியவேயில்லை" என்றார் ஜெய்பூரியா.



சில வருடங்களுக்கு முன் இத்தாலி நாட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கு வெனிஸ் நகரின் புகழ் பெற்ற ஒரு தேவாலயத்துக்கு என்னை அழைத்துப் போனார்கள். உள்ளே நுழைந்ததும் ஒருவித பரவச உணர்வு என்னை ஆட்கொண்டது. அத்தனை அமைதி... அத்தனை தெய்வீகம். அங்கிருந்த புறாக்கள் யாத்ரீகர்களைப் பார்த்துப் பயப்படாமல் அவர்களின் கையில் சுயாதீனமாக வந்து அமர்ந்தன. அங்கு வரும் மனிதர்களின் உள்ளங்களில் நிரம்பியுள்ள நல்ல எண்ணங்கள் அந்தப் பறவைகளையும் ஈர்த்திருக்கின்றன என்பதுதான் அதற்குக் காரணம்.

'கோயிலுக்குப் போகும் போது உங்கள் எண்ணமும் செயலும் எத்தனை அமைதியாகவும், சுத்தமாகவும் இருக்கிறது.... அதுபோலவே நீங்கள் வேலை செய்யும் அலுவலகத்திலும், வீட்டிலும் இருந்து பாருங்கள். வீடும், அலுவலகமும் கோயில் ஆகும். உங்களைச் சுற்றியும் சக்திக் கவசம் வளையமிடும்.

(தொடர்ந்து வரும்.....)

## மின்சாரக் கதைகள்

- வழங்குவது றாஹில்

### பொய்களால் சிறைப்பிடிக்கப்படுகின்ற உண்மை

***கடல்*** அமைதியாகக் கிடந்தது உன்னைப் போல்.

நான் கடல் நிறத்தைக் கண்களில் நிரப்பிக் கொண்டிருந்தேன்.

கடல் தந்த தென்றலில் என்னை இழந்திருந்தேன்.

சின்ன அலைகள் மெதுவாகச் சரியும் போது உன் புன்சிரிப்பு ஞாபகம் வளர்ந்தது எனக்குள்.

'கடல் அலைகளே வெட்கப்படும் நீ சிரித்தால்!' என்றேன்.

'உங்களுக்கு எப்போதும் கேலிதான்...' என்றாய் நீ.

'கேலி காதல் எழுதுகின்ற கவிதைகள்...தெரியுமா...?' என்றேன்.

'காதல் பற்றி ஒரு கவிதை படித்தேன். சொல்லட்டுமா...?' என்றாய் நீ.

'உன்னைவிட அழகான கவிதையா...? இருக்காதே...?' என் மனம் வைத்தேன் நான்.

'செத்துக் கொண்டே இருக்கின்ற

ஒவ்வொரு காதலர்களும்

பிழைக்கிறார்கள்

திருமணத்தின்போது...' நீ கவிதை சொன்னாய்.

நான் கவிதையானேன்.

'காதல், செத்துச் செத்துப் பிழைக்கின்ற விசயந்தான்.

நீ நெருங்கும்போது பனியாகிறாய்.

தூர விலகும் போது தீ தருகிறாய்.

நீ வரும் வரை கோடி வார்த்தைகள் எடுத்து சுத்தம் செய்து வைத்திருப்பேன், உன்னோடு கலந்து விடுவதற்காக!

நீ வந்த பிறகு என் வார்த்தைகள் வற்றிப்போன குளமாகிடும்.

உனக்காகக் காத்திருக்கின்ற சிறு விநாடியும் இனிக்கிறது.

உன்னைப் பார்த்திருப்பது ஒரு யுகமானாலும் சிறுவிநாடியாகக் கரைந்து விடுகிறது.

என் வானில் உன் வார்த்தைகள் தான் நிலாக்கள்!'

'என்ன...மௌனமாகிட்டீங்க...?' என்றாய் நீ

'மௌனங் கூட மணக்கிறது உன்னோடு இருக்கும் போது...'என்றேன்.

நீ புன்னகை பின்னினாய்.

உன் அழகைப் பக்கம் பக்கமாகப் புரட்டிக் காட்டும் போது உன்னில் மகிழ்ச்சி கற்பமடைகிறது.

'உண்...மையாகவா...?!' என்றாய் நீ.

'காதல் பேருண்மை. அது பொய்களால் காயப்படுவதில்லை....காதலிக்கும்போது கோபம் பொய்யாகிவிடுகிறது...பசி பொய்யாகி விடுகிறது...தூக்கம் பொய்யாகிவிடுகிறது. பல பொய்களால் சிறைப்பிடிக்கப்படுகின்ற உண்மைதான் காதல். அது...கண்களும் மனதும் சங்கமிக்கின்ற இடம்...'என்றேன்.

'பைத்தியம் பிடிக்கப்போகிறது...கவனம்...'என்றாய் நீ.

'காதலை விடப் பைத்தியம் இந்த உலகில் வேறொன்றுமில்லை' என்றேன்.

நீ என் கைபற்றினாய்.

என்னுள் பைத்தியம் பிரசவமானது. •

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும் வினாக்கள் அடங்கிய இப் போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 194க்கான சரியான விடைகளை அனுப்பி 250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.

சசிகலா முரளி கரன், 127/5, ஹமில்டன் வீதி, எலகந்த, வத்தளை.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

1. எம். ராமமூர்த்தி, 46, குமரன் ரட்னம் வீதி, கொழும்பு.
2. க. கார்த்திகேசன், பாபாபதி இல்லம், 89, ரொசிட்டா வீடமைப்புத்திட்டம், கொட்டகலை.
3. பூ. புண்ணியமூர்த்தி, 276, மூர்வீதி, மன்னார்.
4. பைசுல் அமீனா ஜலீல், 61/1A/1, மகாபுத்கமுவ, முல்லேரியாவ.
5. ஆர். கார்த்திகேசு, 42 ஆவது ஒழுங்கை, கொழும்பு - 06.
6. கே. எம். எஸ். அப்டீன், 36, போல்ஸ் வீதி, புத்தளம்.
7. எஸ். ஏ. முகம்மது றனீஸ், அல்மினாபுரம், தில்லையடி, புத்தளம்.
8. ஜெயா ஜேசுதாசன், 155/07, ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13.
9. அ. சந்தியாகோ, அசோகா வித்தியாலயம், கண்டி.
10. த. கவாஸ்கர், பெரியகமம், மன்னார்.

## குறுக்கெழுத்துப் போட்டி 196

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | ■ |
| 7 | 8 | 9 | 10 | ■ | 12 |
| ■ | ■ | 15 | 16 | 17 | ■ |
| ■ | 20 | ■ | 22 | 23 | ■ |
| 25 | 26 | ■ | ■ | 29 | 30 |
| 31 | 32 | 33 | 34 | ■ | 36 |

**இடமிருந்து வலம்**

1.கடைசியாக இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் நடைபெற்ற இடம்.
7.இந்தியா கிரிகெட் வீரரொருவர் (குழம்பியுள்ளது).
12.ஜீவா நடித்து வெளியான திரைப்படமொன்று.
15.கழிவு அல்லது கோது (குழம்பி யுள்ளது).
22.பசு, எருமைகளின் பெண் கன்று (திரும்பி யுள்ளது).
25.இரும்பு உபகரணங்களில் படிவது (திரும்பி யுள்ளது).
29.குலம் அல்லது ஊர் மக்களைக் குறிக்கும்.
31.உயிர்க்கொல்லி நோய் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

1. இராமாயணத்தில் இடம்பெறும் பாத்திரம்.
2. எஸ்.ஜே. சூர்யா இயக்கிய திரைப்படமொன்று (தலைகீழ்).
3. புனித நதியொன்று (குழம்பியுள்ளது).
4. சம்பிரதாய பூர்வமான நிகழ்வுகளை இப்படியும் கூறுவர் (குழம்பியுள்ளது).
17. உடல் உறுப்பொன்று (குழம்பியுள்ளது).
20. நித்திரை என்றும் பொருள்படும் (குழம்பியுள்ளது).
25. பசளை என்றும் கூறலாம் ( தலைகீழ்).
30. அலி என்பதன் ஒத்த கருத்து (தலைகீழ்).

## குறுக்கெழுத்துப் போட்டி 194 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ச 1 | தா 2 | ம 3 | ■ | மீ 5 | னா 6 |
| ரு 7 | ஆ 8 | பி 9 | ■ | தி 11 | வி 12 |
| ச 13 | ம 14 | யு 15 | ■ | ■ | டி 18 |
| ம 19 | ■ | ரு 21 | இ 22 | வி 23 | ■ |
| ■ | சி 26 | ■ | றை 28 | ஜூ 29 | ஆ 30 |
| வி 31 | லை 32 | உ 33 | ■ | தே 35 | வா 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி, அஞ்சலட்டையில் ஒட்டி 05.12.2006 க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள். அனுப்ப வேண்டிய முகவரி :

குறுக்கெழுத்துப் போட்டி இல-196
தினமுரசு வாரமலர்,
த.பெ. இல. - 1772,
கொழும்பு.

தங்கள் சரியான முகவரியையும், காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.

சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 250 ரூபா பரிசுண்டு. அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

# அக்கா

**இனி** அப்பா குடிச்சிட்டு வந்து அக்காவோடு சண்டை பிடிப்பார். பாவம் அக்கா என்னையும் தங்கைச்சி கவிதாவையும் தான் தைச்சு படிப்பிற்குது. இப்படி ஒரு அக்காவை எமக்கு கொடுத்த இந்த ஆண்டவனுக்குத் தான் பலகோடி நன்றி சொல்ல வேணும். சின்ன வயதிலே அம்மாவை இழந்து அக்காவின் அரவணைப்பில் இன்றுவரை வாழ்கின்றோம். அப்பா உயிரோடு இருந்தும் எமக்கு என்ன உதவி. உழைக்கிற காசைத் தானே குடிச்சு அழிக்கிறதும் வீட்டில வந்து அக்காவோடு சண்டை பிடிப்பதும், அக்கா வைச்சிருக்கிற காசை கேட்பதும். கொடுக்காவிட்டால் மாடு மாதிரி அடிப்பார். சீ இண்டைக்கு வரட்டும் இரண்டில் ஒன்று. அப்பா என்று விட்டால் அவர் தலைக்கு மேல் நிக்கிறார். நானும் தங்கைச்சியும் பெரிய பாடசாலையில் கல்வி கற்கிறோம். அப்பான்ர கூத்தால் பாடசாலையில் பணக்கார மாணவர்கள் என்னையும், தங்கைச்சியையும் கிண்டல் செய்யுதுகள். சீ நினைக்கவே வெட்கமாக இருக்குது. அக்காவுக்கு 24 வயசாகியும் எங்களுக்காகத் தான் கஷ்டப்படுகிறது. திருமண வயதில் இப்படி இந்த மனுஷனிட்ட அடியும், உதையும் வாங்குது. ம்... 9 மணியாகியும் இன்னும் வரல்ல. பாவம் அக்கா நாய் குந்தின மாதிரி குந்திக் கொண்டிருக்குது அவருக்கு (அப்பாவுக்கு) வந்தவுடன் சாப்பாடு கொடுக்க. இந்த மனுஷனுக்குப் புத்தியே இல்லையா? இப்படித்தான் என் உயிர் அம்மாவையும் சித்திரவதைப் படுத்தியிருப்பார். எல்லாத்தையும் நினைக்க என்று பலவாறு யோசித்தான். இதைப் பார்த்த தமக்கை கலைமதி ஆமாம் இவன் புத்தகத்தை விரித்து வைத்து என்ன எங்கையோ பார்த்து யோசிக்கிறான் என்று ஒரு பெருமூச்சு விட்டபடி கரனிடம் நேராகப் போய், “தம்பி கரன் என்ன யோசனை என்று கேட்க” அது ஒன்றுமில்லையக்கா நீங்க போய் படுங்கக்கா பகலில ஓயாமல் ஒரே வேலை எமக்கு சமைக்கிறதும் ஓயாமல் தைக்கிறதும் இரவிலயாவது நிம்மதியாய்ப் போய் படுங்க என்றான். தம்பி நீ அக்காவைப் பற்றி எண்ணக்கூடாது, உங்க படிப்பைத் தான் எண்ணனும். படிப்புத் தான் முக்கியம். அக்கா என்றால் எல்லாத்தையும் பார்ப்பதுதானே? கரன். இல்ல அக்கா அப்பா என்று கூறவும், கலைமதி இடைமறித்து நான் சொல்வதைக் கேளுங்கோ. நீ சின்ன பையன் என்றதும், மீண்டும் கரன் அக்கா நான் சின்ன பையன் தான் ஆனால் உங்களுக்கு அப்பா அடிக்கும் போது நாம் எத்தனை நாளைக்குப் பாத்திருப்பது என்று கோபத்தில் கூற, கலைமதி தம்பி அப்பாவை நீ ஒன்றும் செய்ய வேண்டாம். அவர் தானா திருந்தட்டும். நாளைக்கு ஊர் சொல்லக் கூடாது பெற்ற தகப்பனுக்கு கரன் அடித்தானாம், பேசி கலாட்டா செய்தானாம் என்று. நீங்க படுங்க ம் பார்ப்பம் என்று சொல்லி விட்டு நகர்ந்தாள்.



—வி.நித்தியா,
கள்ளப்பாடு.

ஓரிரு வாரங்களுக்குப் பின் தகப்பன் சுந்தரம் நல்ல அடி கலைமதிக்கு. அவளிடம் இருந்த காசையும் வாங்கிக் கொண்டு போனார். அடித்த அடி கலைமதியின் தலையில் பலமாகப் பட்டதால் இரத்தம் சீறிப் பாய்ந்தது. இந்த நேரம் வீட்டில் கரனும், கவிதாவும் இல்லை. ரியூசன் போய்விட்டார்கள். இரத்தம் அதிகமாகப் போனதால் ஒன்றும் தெரியாமல் அந்த இடத்திலே மயங்கி விழுந்தாள். ரியூசன் முடிந்து இருவரும் வீட்டுக்கு வந்தார்கள். தமக்கையின் நிலை கண்டு பயத்தில் அஞ்சி நடுங்கினார்கள், கத்தினார்கள். அக்கா அ...க்...கா...என்னாச்சு ஐயோ இப்படி இரத்தம் போகுதே என்று. உடனே வைத்தியசாலைக்குக் கொண்டு போய் சிகிச்சையளிக்க அறிவு வந்தது. மீண்டும் வீட்டுக்கு மூவருமாக வந்தார்கள். கரனுக்கோ கோபம் கோபமாக வந்தது தகப்பன் சுந்தரம் மேல். இப்படி அடிச்சிருக்கு சீ இவர் ஒரு அப்பாவா? என்று மனதில் எண்ணினான். கவிதாவுக்கும் தகப்பன் மேல் ஆத்திரம் பொங்கி வந்தது. இதனால் வீட்டில் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைமதி கலைத்தாள். “இப்ப என்ன நிகழ்ந்தது என்று மௌனமாக இருக்கிறீர்கள் என்றாள். கரன் என்ன நிகழ்ந்ததோ சீ அவர் (அப்பா) எல்லாம் ஒரு மனிஷனா மிருகம் என்று ஆவேசத்தில் கூற, கலைமதி, தம்பி அப்பா என்றா பிள்ளைக்கு அடிப்பது வழமைதானே என்றதும் கரனுக்குக் கோபம் வந்து பீறிட்டான். அ...க்...கா...அந்த மனுஷன் அப்பாவா? சீ உங்களுக்கு வெட்கமாயில்லை. இப்படி மாடுமாதிரி அடிச்சு குறிவைச்சிருக்கு, இவரைப் போய் அப்பா என்று சொல்லிறீங்க என்றான். கலைமதி, தம்பி உன் கோபம் தீர்ந்திச்சா. நாம் என்ன செய்ய எல்லாம் எம் விதி என்று எண்ண வேண்டியதுதான். அம்மாவும் இல்லை, அப்பா எப்படி எங்களை பார்க்கனும். ஆனால் அவர் இப்படி குடிச்சிட்டு சண்டை போட நாம் என்ன செய்ய கரன். அக்கா நான் குடிக்க வேணாம் என்று சொல்லல்ல. ஏன் ஒவ்வொரு நாளும் காரணம் இல்லாம உங்களுக்கு அடிப்பான். வைத்தியசாலையில் அந்த மனுசனை எப்படியெல்லாம் பேசினார்கள் தெரியுமா? பதிலுக்கு கவிதாவும் அக்கா உங்களைப் பார்க்க கவலையாய் இருக்கு, உங்களோடு படிச்ச பானுவக்கா திருமணம் ஆகி பிள்ளைகளோடு போகிறா. ஆனா நீங்க எங்களுக்காக இப்படியே அடியும் உதையும் என்று கூறவே கவிதாவின் கண்ணில் இருந்து நீர் அருவி போல வடிந்து ஓடியது. கலைமதி தங்கையின் கண்ணீரைத் துடைத்தவாறு கவி, கரன் எனது ஆசை உங்களை நல்ல நிலைக்குக் கொண்டு வரணும் என்பது தான். அம்மா சாகும் போதுகூட என்னிடம் சொன்ன வார்த்தை தம்பி, தங்கையை நல்லபடியாக பார். உன்னை நம்பித்தான் இவர்களை ஒப்படைக்கிறேன் என்று கண் மூடினார் என்று கூற, தாயின் நினைவு வந்து மூவரும் அழுதார்கள். இவர்களுக்குயார் ஆறுதல் கூறுவது மீண்டும் கலைமதி ம் நாம் அழுது என்ன பலன். அம்மா இல்லாட்டி அப்பா, சித்தப்பன் என்று பெரியவர்கள் கூறுவார்கள். உண்மைதான் என்று கூறி ம் அப்பாவுக்கு இன்னொரு மனைவி இருப்பது என் தம்பிக்கோ அல்லது தங்கைக்கோ தெரியாது என்று எண்ணினாள். கரன், அக்கா என்ன யோசிக்கிறீர்கள் என்றான். அப்போது கலைமதி பதில் எதுவும் சொல்லாமல் ஏதோ எங்கையோ பார்த்தபடி இருந்தவள் திடீர் என்று மயங்கி கீழே விழுந்தாள். கவிதாவும் கரனும் பதறியடித்து கொஞ்ச நேரம் அப்படியே நின்றார்கள் தங்களைத் தாங்களே மறந்து. பிறகு ஒருவாறு வைத்தியசாலைக்குக் கொண்டு போய் அவசர சிகிச்சை தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. வெளியில் நின்று கவிதாவும் கரனும் அழுதார்கள். ஒவ்வொரு தாதிமாரும் வெளியில் வர ஓடிப்போய் கேட்பார்கள். அவர்கள் பதில் எதுவும் சொல்லாமல் போக இருவரும் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்தவாறு கண் கலங்கிய விழிகளோடு இருந்தார்கள். அப்போது டொக்டர் வெளியில் வந்தார். இருவரும் அக்காவுக்கு எப்படி டொக்டர்? சுகமா? என்றார்கள். டொக்டர் தன் கண்ணாடியை அகற்றி விட்டு இருவரையும், மாறி மாறி பார்த்து விட்டு கூறினார். உங்க அக்காவை எங்களால காப்பாத்த முடியல்ல. அவங்கள் இறந்திட்டாங்க என்றதும் அம்பு பட்டு மான் துடிப்பதைப் போல் இருவரும் துடித்தார்கள். *அ...க்...கா...அக்கா எங்களை விட்டுட்டு* போனீங்களே எங்கட தெய்வமே, அக்கா என்று அழுதார்கள். இவர்களின் கண்ணீரைத் துடைக்க இனி யார் வருவார்.

*(யாவும் கற்பனை)*

# கல்லறைக் காதலன்

**“ரேணு**, ரேணு” இவ்வளவு நேரமாயிடுச்சி. எழும்பி வா எனத் தாய் அழைத்ததும், கண்விழித்தவளின் முன்னால் ஆனி மாதம் 9ஆம் திகதி என்பதை நாட்காட்டி ஞாபகமூட்டுவதாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

அடக் கடவுளே இவ்வளவு நேரம் தூங்கிவிட்டேனே என்று தன்னைத் தானே திட்டியவளாக குளியலறைக்குள் சென்ற ரேணு, சற்று நேரத்தில் வெளியில் வந்து தனக்கும் வினோத்துக்கும் பிரியமான பச்சை நிறத்தில் ஒரு சல்வார் கமிசை அணிந்தவளாய் கையில் சில மலர்க் கொத்துக்களுடன் வினோத்தைக் காண நடக்கலானாள். அவளது பாதங்கள் முன்வைக்கும் ஒவ்வோர் அடியிலும் அவளது நினைவுகள் பின்னோக்கி நகரலானது.

ரேணு, வினோத் இருவரும் ஒரு சிறிய கிராமத்தில் பிறந்து, வெவ்வேறு சூழலில் வளர்ந்து ஒரே பாடசாலையில் முன்பின் வகுப்புக்களில் படித்தனர். க.பொ.த.(உ/த) வகுப்பில் நண்பர்களாக அறிமுகமாகும் வரை ரேணுக்கு வினோத் பற்றி எதுவும் தெரியாது. ஆனால் உயர்தர வகுப்பில் அவளுக்குப் பிடித்த நண்பன் என்ற முழு அந்தஸ்தையும் வினோத்தே பெற்றிருந்தான். ரேணுவின் மனதை வினோத் கவர்ந்ததற்கும் ஒரு காரணமிருந்தது. அதுதான் அவனது அறிவிப்பு ஆற்றல். அவனது அறிவிப்பு நிகழ்ச்சி எதையும் ஒன்றுவிடாமல் பார்த்து இரசிப்பாள். அத்தோடு சில விமர்சனங்களுடன் அவனது அறிவிப்புக்கு ஊக்கமளித்தும் வந்தாள்.

இவ்வாறு இவர்களில் நாகரீகமானதாக இருந்த நட்பும், வினோத்தின் மரியாதையான செயல்களும் ரேணுவின் அடி மனதில் காதலாக ஊற்றெடுக்க ஆரம்பித்தது. ஆனால் வினோத்தின் மனதை புரிந்து கொள்ள முடியாத ரேணுவால் தன் காதலை உடனடியாகத் தெரிவிக்க தயக்கமாயிருந்தது. அதனால் தன் காதலைத் திரையிட்டு மறைத்தவளாய் வினோத்தின் மனத்திரையை விலக்கிப் பார்க்க எண்ணியவள் தொடர்ந்து அவனுடன் நட்புடன் பழகினாள். காலப் போக்கில் வினோத்தின் மனதில் தான் இருப்பதாகவும், அவரது குடும்ப சூழ்நிலை காரணமாகத் தன் காதலை ஏற்க மறுப்பதாகவும் அறிந்து கொண்டாள். அவனது முடிவுக்குத் தான் காத்திருப்பதாகக் கூறி தன் காதலை உறுதிப்படுத்தினாள். ஆனால் பாடசாலை நாட்கள் முடியும் வரை வினோத்தின் முடிவில் மாற்றம் தென்படவேயில்லை. இருந்தாலும் ரேணுவின் காதலில் மாறுதலும் இல்லை.

பாடசாலைக்கு விடைகொடுத்த இருவரினது நட்பும் தற்போது எவ்வித தொடர்புமின்றி விடுபட்டிருந்தாலும் மனத்திரையில் இருவரின் காதலும் முழுதாக மாற்றமின்றி நிலை பெற்றிருந்தது. சில மாதங்கள் கடந்தோடியது. ஒரு நாள் வினோத் தன் சக நண்பர்களுடன் ரேணுவின் வீட்டுக்கு வந்திருந்தான். ரேணுவின் வீட்டின் முற்றத்தில் நின்றவாறு ‘ரேணு ரேணு’ என அழைத்தான். இதைக் கேட்ட ரேணு வெளியில் வந்து பார்த்ததும் திகைத்தாள். ஆனந்தத்துடன் வினோத்தை உள்ளே அழைத்தாள். ‘வாங்க வினோத் நீண்ட நாட்களுக்குப் பிறகு, சுகமா? என ஆவலாய் விசாரித்தாள். வினோத் தான் வந்த நோக்கத்தை தட்டுத் தடுமாறி கூறினான். ரேணு நான் உங்க காதலை ஏற்றுக் கொள்கிறேன். உங்களை கல்யாணம் செய்துக்கவும் விரும்புகிறேன். நீங்க சம்மதிச்சா உங்க வீட்டில் பேசுறன்” என கூறியவனை ஆச்சரியத்துடன் நோக்கினாள்.

உண்மையில் அவன் ஆனந்தத்தின் விளிம்புகளிலேயே நிற்பது போல் உணர்ந்தாள். அவளும் சம்மதம் கூறினாள். தன் நண்பன் வெளிநாடு செல்வதாகவும் அவரை அனுப்பி வைப்பதற்காகத் தான் கொழும்பு சென்று வந்ததன் பிறகு வீட்டில் கதைப்பதாகவும் சொல்லிவிட்டுச் சென்றான்.

அத்தோடு ரேணுவின் வீட்டாரும் இருவரின் காதலுக்கு எவ்வித எதிர்ப்புமின்றி பச்சைக் கொடி காட்டினர்.

அவளது மனம் யாரும் தொடமுடியாத தூரத்தில் வானில் ஆனந்தத்துடன் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. ஆனால் கடவுளுக்கே இவளது ஆனந்தத்தில் பொறாமை ஏற்பட்டதோ என்னவோ தெரியாது, அவளை நீண்ட நாள் வானில் சிறகடிக்க விடவில்லை. கொழும்பு சென்ற புகையிரதத்தில் இரவு பயணித்த வினோத்தின் நினைவுகளை இரவின் நிசப்த அலைகளில் மெல்லிய காற்றின் ஓசைகளுடன் ஊடுருவ விட்டவனாய் தன்னையும் மறந்து புகையிரவாயிலில் நின்று கொண்டிருந்த சமயம் எதிரே தன் உயிரை பறிக்க காத்திருக்கும் அந்த இரும்புப் பாலமான எமனைக் கண்டு கொள்ள முடியாமல் போனது யதார்த்தமானதே. சடுதியாய் நடந்த அந்த விபத்தில் புகையிரதத்திலிருந்து வெளியில் விழுந்த வினோத்தை நீண்ட நேரத்தின் பின்னரே எல்லோராலும் காண முடிந்தது. ஆனால் வினோத் தற்போது இறைவனின் ஆசைப்படி தன் ஆவியை அவனுக்கு மெது மெதுவாக அர்ப்பணித்துக் கொண்டிருந்தான். மறு நாள் ரேணுவின் காதுக் கெட்டிய இத்துயரச் சம்பவத்தால் நினைவிழந்த ரேணுவால் வினோத்தின் பூதவுடல் ஊர் நோக்கி வரும் போதுதான் சுயநினைவை அடைய முடிந்தது. வினோத்தின் சடங்குகள் முடிந்து அவனது உடலும் மிக விரைவாக இவ்வுலகிற்கு விடை கொடுத்து விட்டது. ஆனால் ரேணுவின் மனம் வானில் சஞ்சரித்த சிறிய பட்சியின் சிறகை உடைத்து சிறையில் அடைத்தது போன்று வேதனையால் குமுறியது. யாருடைய ஆறுதல்களும் அவளது சோகத்துக்கு மருந்தாக வில்லை. காலம் தன் சேவையைச் சிறப்புடன் செய்ததனால் இன்றோடு வினோத் இவ்வுலகை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகளாகின்றன. ஆனால் ரேணுவின் மனம் மட்டும் எத்தனை ஆண்டுகளாலும் வினோத்திற்காக அழுது கொண்டேயிருந்தது. இவ்வாறு தன் நினைவுகளில் மூழ்கியவள் எதிரில் வந்த மோட்டார் சைக்கிளின் ஒலியினால் திடுக்கிட்டாள். அப்போதுதான் சவச்சாலையை அண்மித்து விட்டதை உணர்ந்தவள், வினோத்தின் கல்லறையின் மேல் மலர்க் கொத்துக்களை வைத்து தன் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தியவளாய் கல்லறையின் முன் மண்டியிட்டிருந்தாள்.



—ஷியாமா சபீக்,
திருகோணமலை.

*(யாவும் கற்பனை)*

படித்துச் சுவைத்தவற்றில் சிலவற்றை உங்கள் சிந்தனைக்காக முன்வைக்கிறோம். உங்கள் அநுபவத்தையும் எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## சிந்தித்துப் பார்க்க...

## குறள் சொல்லும் வாழ்க்கைத் தத்துவம்

**ஒவ்வொரு** மனிதனும் தன்னைப் பற்றியே உயர்வாக நினைத்துக்கொண்டிருக்கிறான். ஆனால், அவன் தன்னிடமுள்ள தீமைகளைப் பற்றி ஒரு நிமிடமாவது சிந்தித்ததில்லை. அவன் தன்னுடைய சொல்லும், கருத்தும் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்று நினைக்கிறானே அன்றி, தான் என்ன சொல்கிறான் என்பதுபற்றி அவனுக்கே புரிவதில்லை. "மண் பானை தரமாக இருக்கின்றதா என்று அறிவதற்கு, தட்டிப் பார்த்து அதிலிருந்து வருகின்ற ஓசையை வைத்துத்தான் அறிந்து கொள்ள முடியும்" என்று ஒரு ஆங்கில அறிஞர் சொன்னது ஞாபகத்துக்கு வருகிறது. இக்கருத்தை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வள்ளுவப் பெருந்தகை பொய்யாமொழியில் கூறிவைத்ததார்வ என்றால், அவரின் அறிவு நுட்பத்தை என்னவென்று உரைப்பது?

### "நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
### குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்"

*குறள் : 959*

நிலத்திலே கிடக்கும் பொருளின் தன்மையைக் காற்று வெகு தொலைவுக்கும் காட்டும். ஒருவன் வாயிலிருந்து வெளிப்படும் சொல்லே அவன் தகுதியைக் காட்டிக் கொடுத்துவிடும்.



## அன்று கண்ட முகம்!

***கீர்த்திவர்மன்*** மேல் அங்கயற்கண்ணி வைத்திருக்கும் மதிப்பும், அவன் வீரத்தில் அவளுக்கு ஏற்பட்ட வியப்பும், அவனையே கணவனாக அடைய வேண்டும் என்ற எண்ணத்தை, அவனைச் சந்தித்தபோதே அவள் மனதில் பதியச் செய்துவிட்டது. இந்த விடயத்தைக் கயல்விழியின் மூலம் விக்கிரமன் அறிந்த போது, அவனுக்குப் பெரும் சங்கடமான நிலையாகிவிட்டது. கீர்த்திவர்மன்



தனது மதிப்பிற்குரிய நண்பன். தகுதியிலும் அவன் எவ்வகையிலும் குறைந்தவனல்ல, தங்கைக்கேற்றவன்தான். என்ற போதிலும், அவன் கொள்ளையர்களை ஒழித்துக் கட்டும் ஆபத்தானதொரு புரட்சிக் குணம் படைத்தவனாயிற்றே! தங்கையின் வாழ்க்கை இடைநடுவில் பாலைவனமாகிவிட்டால் என்ன செய்வது? என்ற கேள்வி அவன் மனதைக்

**தருவது கற்பகன்**

குடையத் தொடங்கியது.

அங்கயற்கண்ணி இயல்பாகவே பிடிவாதக்காரி. அவளைச் சமாளிப்பது கடினமான விடயம். அதைவிடக் கீர்த்திவர்மன் இதற்குச் சம்மதிப்பானா? என்பது ஐயப்பாடாகவே இருந்தது. சிங்கபுரியின் தலைநகரில் அவன் கோட்டை அமைந்திருந்தாலும், அவன் கோட்டையை மறந்து பலநாளாகிவிட்டன. பாசறையிலும், பயிற்சித்தளங்களிலுமே அவன் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறான் என்பதை ஒற்றர்கள் மூலம் விக்கிரமன் அறிந்து வைத்திருக்கிறான். முதலில் அவனைக் கண்டுபிடிப்பதே பெரிய வேலையாகப் போகிறது. இவைகளையெல்லாம் சமயம் வரும்போது பார்த்துக் கொள்ளலாம்.

அதற்கிடையில் அங்கயற்கண்ணியின் மனம் ஆறுதலடைய ஏதாவது செய்தாக வேண்டுமே? அதற்கு வழிதேடி அலைந்தது அவன் மனம்.

கீர்த்திவர்மனை சந்திப்பதற்காவது ஒரு வாய்ப்புக் கிடைக்குமேயானால் இந்தச் சிக்கல் வெகு இலகுவாகிவிடும். அதற்கு ஒரேவழி ஒற்றர்களை நாடு முழுவதிலும் அனுப்புவது என்ற முடிவுக்கு வந்தவனாய், கொலு மண்டபத்தை நோக்கி நடந்தான் விக்கிரமன்.

அங்கயற்கண்ணியின் கனவுகளெல்லாம் நிறைவேற வேண்டுமென்று கயல்விழி நினைத்தபோதிலும், அவளுக்கு உதவத் தனக்கு வாய்ப்பில்லையே என்ற எண்ணம் அவளைத் துன்பப்படுத்தியது. அதையே சிந்தித்த வண்ணம் சாய்ந்திருந்த ஆசனத்திலேயே கண்ணயர்ந்துவிட்டாள்.

சற்று நேரத்தின்பின் யாரோ வருவது போல் காலடியோசை கேட்டபோது திடுக்கிட்டெழுந்தாள் கயல்விழி. "என்ன இருக்கையிலேயே தூங்கிவிட்டாய் போலிருக்கிறதே? அப்படியென்ன தூக்கமோ?" என்றவாறு உள்ளே நுழைந்தாள் அங்கயற்கண்ணி.

"உங்களைப் பற்றிச் சிந்திக்கப் போனால் தூக்கந்தானே வருகிறது." என்றாள் கயல்விழி.

"என்னைப் பற்றி எதற்கு நீ சிந்திக்கிறாய்? என்னைப் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களே அதை மறந்துவிட்டபோது, நீ மட்டும் சிந்திப்பதால் என்ன ஆகப்போகிறது?" என்று அலுத்துக் கொண்டாள் அங்கயற்கண்ணி.

இதைக் கேட்டதும், "யார் உங்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்? கீர்த்திவர்மரா?" என்று கயல்விழி கேட்டதும், "விளையாடாதே கயல்விழி!" என்று அதட்டினாள் அங்கயற்கண்ணி. கீர்த்திவர்மன் என்ற பெயரைச் சொன்னதும், அங்கயற்கண்ணியின் முகத்தில் கொந்தளித்த நாணத்தை அவதானித்த கயல்விழி, "இப்பவே அவர் பெயரைக் கூறும்போது, இவ்வளவு கோபப்படுகிறீர்களே, ஏது அவர் கணவராகிவிட்டால், யார் கண்ணிலும் படாமல் அறைக்குள்ளேயே பூட்டி வைத்து விடுவீர்கள் போலிருக்கிறதே!" என்றாள்.

"கயல்விழி! வீணாகக் கற்பனை பண்ணாதே. ஒரு நாள் கூட அரண்மனையில் தங்காமல் நாடு நாடாகச் சுற்றித் திரிபவரை, என்னைப் போல் எத்தனை ஆயிரம் பெண்கள் வலைவிரித்துக் காத்திருக்கிறார்களோ? நான் மட்டுமென்ன...?" என்று சொல்லும்போதே அவள் கண்கள் பனித்துவிடும் போலிருந்தன.

இதைக் கேட்டதும், "இளவரசி! ஏன் வீணாக மனதைக் குழப்பிக்கொள்கிறீர்கள்? அவரைப் பற்றி நீங்கள் நினைப்பதுபோல் வேறு யாரும் நினைக்கிறார்களோ இல்லையோ நீங்கள் அவரை விரும்பினால், அதை நிறைவேற்ற இளவரசர் காத்திருக்கிறார்."

கயல்விழியின் வார்த்தைகள் அங்கயற்கண்ணிக்குப் பாகாய் இனித்தன. 'அண்ணா இதுபற்றி ஏதோ இவளிடம் சொல்லியிருக்கிறார் போலிருக்கிறது. இல்லாவிட்டால், இவள் இத்தனை தைரியமாகச் சொல்லமாட்டாள்' என்று நினைத்தபோது, உண்மையை அறியும் ஆவல் மேலும் உயர்ந்தது. "கயல்விழி!" என்று குழைந்தாள் அங்கயற்கண்ணி. பதிலுக்கு, "என்ன இளவரசி?" என்றாள் கயல்விழி. "நீ எதையோ மறைத்துவைத்துக் கொண்டு சுற்றிவளைக்கிறாய். உண்மையைக் கூறு. அண்ணா, அவரைப் பற்றி ஏதாவது சொன்னாரா? இல்லை, நீ கற்பனைக் கனவு காண்கிறாயா? என்று எனக்குத் தெரிந்தாக வேண்டும்" என்றாள் முகத்தில் பொய்யான கோபத்தை வரவழைத்துக் கொண்டு.

இதைக் கேட்டதும் பதிலுக்குத் தானும் ஒரு செயற்கையான சலிப்பை வரவழைத்துக் கொண்டு, "ஐயையோ! இது என்ன வம்பாகிவிட்டது? நான் ஏதோ விளையாட்டாகச் சொன்னால்..." என்று கயல்விழி இழுத்த போது, "வீணாக நீ ஏதும் பேச மாட்டாய். உள்ளதைச் சொல்லடி?" என்று கெஞ்சினாள் அங்கயற்கண்ணி. அவளின் ஆவலைக் கண்டதும், "அப்படி வாருங்கள் வழிக்கு. உங்களுக்கு அவரைப் பிடித்திருக்கிறதா? என்பதை முதலில் கூறுங்கள். மற்றவைகளை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றதும் தயங்கினாள் அங்கயற்கண்ணி. இதைக் கண்ணுற்றதும், "வேண்டாமென்றால் நான் விட்டுவிடுகிறேன்." என்று கயல்விழி சொன்னாள். "கயல்விழி எத்தனை நாளைக்குத் தான் உண்மையை மறைக்க முடியும்? அன்று அவர் எங்களை எதிரிகளிடமிருந்து காப்பாற்றியபொழுது, அவர் வீரத்தில் நான் மெய்மறந்து போனேன். இவர் எனக்குக் கணவராகக் கிடைப்பாரா? என்று நினைத்தேன். நான் அவரைப் பார்க்கும் போதெல்லாம், அவர் கண்களும் என்னையே திருட்டுத்தனமாகப் பார்த்தன. ஆனால், மறுநாள் என்னை அவர் ஒரு முறை கூடப் பார்க்காமல் கிளம்பிவிட்டாரே என்று நினைக்கும் பொழுது.."

"இனி உங்களைச் சந்திக்கவே மாட்டார் என்று முடிவு கட்டிவிட்டீர்கள். அதனால் தான் இப்படி இரவு பகலாகக் கண்ணுறங்காமல் இருக்கிறீர்கள். அப்படித்தானே?" என்றாள் கயல்விழி குறும்பாக.

***"மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா என்னல்ல தில்லை துணை"***

அதிகாரம் - 117.
குறள் - 1168.

## சிந்தியா பதில்கள்

**✉ சிந்தியா! புகையிலை, மது பாவனை மீதான புதிய கட்டுப்பாட்டுச் சட்டம் எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவரும்?**

***- எல்.வினோத், நானுஓயா.***

பொது இடங்களிலும், மக்கள் குழுமியுள்ள ஏனைய இடங்களிலும், புகைக்கவும், மது அருந்தவும் தடை செய்யக் கடுமையான சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. 21 வயதுக்குக் குறைவானவர்களுக்கு இவற்றை விற்பதும் தண்டனைக்குரியதே. என்னைக் கேட்டால், 21 வயது எல்லையை, 18 வயதிலிருந்து என்று நிர்ணயிப்பது நல்லது. டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து சட்டம் அமுலுக்கு வருகிறது. சட்டத்தைக் கொண்டுவருவது பெரிய விடயமல்ல. நமக்கு ஏன் வம்பு என்று அத்தகைய தவறு நடப்பதைக் கண்டும் காணாமல் மக்கள் ஒதுங்குவதுதான் பெரும் சமூக விரோதமாகும். இனியாவது, ஒவ்வொருவரும் சட்டங்களை அமுல் செய்தால், இச்சட்டங்களால் சமூகத்திற்கு நன்மை உண்டு.

**✉ இதுவரை இயங்கி வந்த திருமலை பஸ் நிலையத்தை, அருகிலுள்ள மக்கீஸர் மைதானத்திற்கு மாற்றியிருப்பது உண்மையில் பாதுகாப்புக் காரணம் தானா?**

***- பா.தேவப்பிரியா, லிங்கநகர்.***

சந்தேகம்தான். பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான அத்தனை இடங்களையும் மைதானங்களுக்கு மாற்ற முடியுமா? ஏற்கனவே புத்தர் சிலை விவகாரம் அவசியமற்ற சர்ச்சைகளை ஏற்படுத்தியது. இந்த மாற்றத்திற்கும் உள்நோக்கம் இருக்குமோ என்று சந்தேகம் ஏற்படுவது நியாயம்தான்.

**✉ சிந்தியா! ஜனாதிபதி மகிந்த இந்தியாவுக்குச் சென்றுள்ளதில் குறிப்பிடும்படியான நிகழ்ச்சி எது?**

***- ஞா.வைரவநாதன், மட்டக்குளிய.***

டெஹ்ரானில் ஆரம்பமாகிய ஆசியாவின் மேயர்கள் மாநாட்டில் தமிழக மேயர்கள் கலந்து கொள்ளவில்லை. இதற்குக் காரணம், இலங்கையில் தமிழ் மக்கள் ஜனாதிபதியின் அரசாங்கத்தால் கொடுமைப்படுத்தப்படுகிறார்களாம். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத்தானாம் என்று கூறப்பட்டாலும் தி.மு.க மேயர்கள் எதிர்ப்புக்காக அல்லாமல் சொந்தக் காரணங்களுக்காகவே கலந்துகொள்ளவில்லை என்பதற்கு தமிழகத்தில் இலங்கைத் தமிழர்கள் தொடர்பாக ஏற்பட்டிருக்கும் தடுமாற்றமான நிலைப்பாடு தான் காரணம்.

**✉ பாராளுமன்றத்தில் தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் இல்லை என்பது நிர்வாகப் பணிகளைத் தாமதப்படுத்தியுள்ளதென சபாநாயகர் கூறியிருக்கிறாரே?**

***- ச.கீதன், கல்கிஸ்ஸை.***

பாராளுமன்றத்தில் இனிவரும் காலத்தில் சிங்களத்திலும், தமிழிலும் பணிகள் நடைபெற வேண்டும் என சபாநாயகர் கூறியிருப்பது மகிழ்ச்சிக்குரியதே. இது தவிர, பாராளுமன்றத்திலும், சில அமைச்சுக்களிலும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மொழி ஆக்கம் செய்யக்கூடியவர்கள் இல்லை என்பதை சபாநாயகர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். இதற்காகப் பொருத்தமானவர்களுக்கு அழைப்பு விடுக்கலாம். தகுதியானவர்கள் விண்ணப்பிக்க சபாநாயகர் ஆவன செய்வது நல்லது.

**✉ அமெரிக்காவுக்கு எதிராகச் சவால் விடுவது சிறிய நாடுகளுக்கு ஒரு கௌரவத்தை ஏற்படுத்துகின்றதா? பின்னடைவைத் தருகின்றதா?**

***- எம்.ஏ.ஜிப்ரி, காத்தான்குடி.***

இடதுசாரிக் கொள்கைகள் புத்துயிர் பெற்று வருவது அமெரிக்காவுக்கு கவலையளிக்கும் விடயமாக மாறியுள்ளது. கியூபா, வெனிசுலாவின் பட்டியலில் இப்போது ஈக்குவடோரும் இணைந்து கொள்ளும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது. லத்தீன் அமெரிக்க நாடுகளில் இந்த மாற்றம் தொடர வாய்ப்பிருக்கிறது. வட கொரியா, ஈரான் போன்ற நாடுகளின் பிரச்சினை என்பது வித்தியாசமானது. 1030 தடவை அணுகுண்டுப் பரிசோதனை செய்த அமெரிக்கா, ஒரே ஒரு தடவை இந்த நாடுகள் அணுகுண்டுப் பரிசோதனை செய்வதை எதிர்க்கிறது. இதில் என்ன நியாயம் இருக்கிறது? உலகையே மிரட்டும் அமெரிக்கா, இன்னொருவர் முறைக்கக் கூடாது என்கிறது.

**✉ சிந்தியா! இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டி நடக்கப்போவதாகச் சொன்னது தவறுதானே?**

***- மு.மயூரன், கந்தளாய்.***

தவறுதான். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் வெவ்வேறு அணிகளுடன் போட்டிகள் இருக்கின்றன என்று கூறியிருக்க வேண்டும். தென் ஆபிரிக்க அணியிடம், இந்திய அணியினர் முதல் இரண்டு போட்டிகளில் வாங்கிய அடியை, தென் ஆபிரிக்காவிலுள்ள இந்திய ரசிகர்கள் கொடும்பாவி எரித்துக் காட்டி விட்டார்கள். இந்திய அணி உலகக் கோப்பைக் கனவைக் கலைத்துவிடுமோ என்ற கோபம் தான் ரசிகர்களுக்கு. உங்களுக்கு எப்படி?



*மண்*
*ஷனா - விஜித்*

**✉ நம்மவர்களின் "மண்" படம் பார்த்து விட்டீர்களா?**

***- வி.லோஜி, பம்பரக்கல.***

தமிழ்த் திரைப்படம் இலங்கையில் சாத்தியமே இல்லை என்று கருதப்பட்ட காலத்தில் "மண்" திரைப்படம் நல்ல முயற்சி. ஆனாலும், திரைப்படம் வியாபாரமாகிவிட்ட நிலையில் அதற்கான நோக்கம் நிறைவேற்றப்பட்டதாகத் தெரியவில்லை. திரைக்கதையில் இன்னும் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம். வர்த்தக வெற்றியைப் பெறும் வகையில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டால், தயாரிப்பாளர்கள் முன்வருவார்கள். என்றாலும் துணிச்சலான இந்த முயற்சி பாராட்டுக்குரியது!

**✉ சிந்தியா! கேட்டால்தான் "ஜோக்" சொல்லுவீரோ?**

***- வீ.மீரா, கோணாகல்லை.***

மீரா இப்படியெல்லாம் கோபமாகக் கேள்வி கேட்கக் கூடாது. சிரிக்கத் தயாராகுங்க...

சிரிப்பு - 01.

"எட்டுத் திசைகளிலும் போர் முரசு கொட்டுவதைக் கேட்டு மன்னர் ஏன் திரு திருவென்று முழிக்கிறார்?"

"எந்தத் திசையில் தப்பி ஓடுவது என்று தெரியாமல்தான்."

சிரிப்பு - 02.

"மன்னர் பெருவிரலை உயர்த்திக் காட்டுகிறாரே! போரில் வென்று விட்டாரா?

அட நீ வேற! புறமுதுகிட்டு ஓட்டமாக ஓடி வந்திருக்கிறாரே, அதுதான் குடிக்கத் தண்ணீர் கேட்கிறார்."

என்ன மீரா? ஒன்றுக்கு ஒன்று தள்ளுபடி. போதுமா?

**✉ மாவீரர் உரையில் போர் அறிவிப்பு வரலாம் என்பதுபோல் தமிழ்ச்செல்வன் சமிக்ஞை காட்டியிருக்கிறாரே. கவனித்தீரா?**

***- எஸ்.சிவராஜா, பண்டாரிக்குளம்.***

சுதந்திரத் தமிழீழத்தை அடைய போராட்டம்தான் ஒரேவழி என்பதை பிரபாகரன் மிகத் தெளிவாகக் கூறிவிட்டார். எனது குழப்பம் எல்லாம், போர் நிறுத்த ஒப்பந்தம், சர்வதேசத் தலையீடு இரண்டுக்கும் இடையிலா போர் அல்லது அவற்றைப் புறக்கணித்து விட்டா என்பதைப் பிரபாகரனும் தெளிவாகச் சொல்லவில்லை. இந்தக் குழப்பம் கண்காணிப்புக் குழுவுக்கும், நோர்வேக்கும் கூட உண்டு.

**✉ சீனாவில், மறைந்த குங்பூ கலைஞர் புருஸ்லியின் நினைவாக அவருக்குச் சிலையும், பூங்காவும் நிறுவப் போகிறார்களாமே அதுவும் புருஸ்லியின் ரசிகர் மன்றத்தினர் என்ற செய்தியை அறிந்தீரா?**

***- கொ.விக்னேஸ், வெள்ளவத்தை.***

புருஸ்லியின் புகழ் காலத்தால் மறையக் கூடியதல்ல. அவர் இறந்து இரண்டு தசாப்தத்திற்கு மேலாகியும், அவருக்கு ரசிகர் மன்றம் இருப்பது அதற்கு ஒரு சாட்சி. அதே போல் "ஜேம்ஸ் பாண்ட் 007" என்ற திரைப்படமும் வரலாறுதான். பிரிட்டிஷ் எழுத்தாளர் 'இயன் பிளெமிங்' என்பவர் கற்பனைக் கதாபாத்திரங்களைக் கொண்டு எழுதிய கதைதான் ஜேம்ஸ் பாண்டாக ரசிகர்களை ஈர்த்துள்ளது.

இதுவரை 20 படங்கள் அதே கதையை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டபோதும் அத்தனையும் ரசிகர்களை ஈர்த்தது. இப்போது 21 ஆவது "ஜேம்ஸ் பாண்ட் 007" படம் தயாரிக்கப்பட்டுள்ளது. சுமார் 60 மில்லியன் டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட 21 ஆவது ஜேம்ஸ் பாண்ட் 007 படத்தில் டேனியல் க்ரெய்க் கதாநாயகனாகவும் பிரெஞ்சு நாட்டின் ஈவா கிரீன் நாயகியாகவும் நடித்துள்ளனர். வெனிஸ் நகரத்திலிருந்து உலகம் சுற்றியிருக்கிறது படப்பிடிப்பு. ஒரே கதையை 21ஆவது தடவையாகவும் வெற்றி பெறச் செய்திருப்பது "ஹொலிவூட்" காரர்களின் சாதனைதான்.

புருஸ்லியின் நினைவாக நூலகம், தியான அறை, குங்பூ பயிற்சிக் கூடம், பூங்கா என்பன அமைக்கப்படுவதற்குப் பாடுபட்ட அவரின் ரசிகர்களுக்கும், அதற்கு அனுமதி தந்து கௌரவித்த சீன அரசுக்கும் புருஸ்லியின் ரசிகர்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்வோம்.

## தற்போதைய யாழ்ப்பாணம்...
*05 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

சம காலத்தில் நடந்த நடைபெற்றுக் கொண்டிருக்கிற படுகொலைகளால் கணவன்மார்களைப் பறிகொடுத்த இளம் விதவைகள் என்று இன்னொரு அநாதரவான சமூகமும் தமிழர்களின் வாழ்வில் உருவாகி வருகிறது. அவர்களின் பொருளாதார நெருக்கடி, பாதுகாப்பற்ற சூழல், அவர்களின் பிள்ளைகளின் அபலைத் தனமான எதிர்காலம் என்பனவும் கண்கலங்க வைக்கும் நிகழ்வுகளாக நீடிக்கின்றன.

கடத்தப்படுபவர்கள், கொல்லப்படுபவர்கள் பற்றிய தகவல்களைத் தருவதற்கு மக்கள் பயப்படுகின்றனர். ஆனாலும் கொல்லப்படுபவர்கள் புலிகளாகவும், புலிகளின் ஆதரவாளர்களாகவும் இருக்குமிடத்து அத்தகைய கொலைகள், ஆட்கடத்தல்கள் தொடர்பில் மக்களின் சந்தேகம் படைத்தரப்பு மீது இருப்பது போல், வியாபாரிகள், மாற்றுக் கருத்துப் பேசுபவர், நடுநிலையாளர்களாக ஊருக்குள் தம்மைக் காட்டிக் கொண்டவர்கள், அரசியல் விமர்சகர்களாக இருப்போர் மீதான படுகொலைகள், கடத்தல்களை புலிகளே செய்கின்றனர் என்று மக்கள் கருதுகின்றனர். மக்களின் கருத்துக்களைப் பார்க்கின்றபோது, யாழ் குடாநாட்டில் நடக்கும் அசம்பாவிதங்களைப் பார்க்கின்றபோதும் - இரண்டு தரப்பும்தான் இதற்குக் காரணமானவர்கள் என்கின்றனர். இந்தக் கருத்து, புலிகள் பாதுகாப்பில்லை என்று, யாழ்ப்பாணத்தை விட்டுப் போய்விட்டனர் என்ற புலிகளின் கூற்றைப் பொய்யாக்குகின்றது. அரசியல் பணி என்று வந்து முகம் காட்டியவர்கள் அவ்வாறு திருப்பி அழைக்கப்பட்டாலும், முகம் காட்டாத புலிகள் இன்னும் யாழ்ப்பாணத்தில் இருக்கின்றனர். அவர்களே, கொலைகளையும் மிரட்டல்களையும், வரி அறவீடுகளையும் செய்கின்றனர். அவர்களே சில அரச உத்தியோகத்தர்களையும், வியாபாரிகளையும் மிரட்டி தமக்குச் சாதகமான வேலையைச் செய்கின்றனர் என்றும் மக்கள் உறுதியாக நம்புகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகள் அதிகரிப்பதன் காரணமாகவே உலகில் எங்கும் நடக்காத ஒரு காரியமாக உயிருக்கு ஆபத்து என்று கருதுவோர், யாழ். மனித உரிமை அமைப்பிடம் முறையிட்டு, நீதிவான் உத்தரவின் பேரில் யாழ் சிறையில் தற்பாதுகாப்புக்காக சிறைவாசம் அனுபவிக்கின்றனர். இதுவரை 27 பேர் யாழ் சிறையில் தமது உயிரைப் பாதுகாக்க சிறை இருக்கின்றனர்.

குடும்பத் தலைவர்களையும், மகன்களையும் பாதுகாக்க, அவர்களைச் சிறைக்கு அனுப்புவது பற்றி குடும்பத் தலைவிகள் சிந்திக்கின்றனர். இதேநிலை நீடித்தால், குடும்பமாகவே சிறைக்குச் சென்று இருக்கவும் அவர்கள் விரும்பும் நிலை ஏற்படவும் வாய்ப்பு இருக்கிறதைப் புரிந்து கொள்ள முடிகிறது. பட்டினி பற்றி குரல் கொடுக்கும் எவரும், யாழ்ப்பாணத்தில் நடக்கும் ஆட்கடத்தல்கள், அச்சுறுத்தல்கள், படுகொலைகள் பற்றி ஆக்கபூர்வமாக எதுவும் செய்யவில்லை என்ற மக்களின் ஆதங்கத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் மனித உரிமைகள் குறித்த விடயங்கள் கவலை தரும் வகையில் இருப்பதாக சர்வதேச சமூகம் தெரிவிப்பதில் உண்மை இருக்கிறது. ஆனால் தனியே கவலை தெரிவிப்பதால் எத்தகைய நன்மையும் ஏற்படப்போவதில்லை. யாழ்ப்பாணத்தில் நடக்கும் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் தொடர்பில் வாய் திறக்கவே மறுக்கும் மோசமான கலாசாரம் உருவாகியிருப்பதாக மக்கள் கவலை கொண்டுள்ளனர். மக்களின் இவ்வாறான கவலைகளையும், நியாயமான எதிர்பார்ப்புகளையும் இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் காலம் தாமதிக்காமல் கவனத்தில் எடுக்க வேண்டும். காலம் தாழ்த்தி எடுக்கப்படும் முடிவுகளுடன் திரும்பிப் பார்க்கும் போது, உயிர்ப் பலிகளைக் கொடுத்து, வறுமையில் ஒடிந்துபோன ஒரு ஊமைச் சமூகமாகவே தமிழ் சமூகம் இருக்கப்போகிறது. அவ்வாறானதொரு சூழல் புலிகளுக்கும், புலிகளின் பயங்கரவாதத்துக்கும் தேவையாக இருக்கலாம். ஆனால் நாகரீகமான மனித சமூகத்துக்கு அத்தகையதொரு சூழல் ஏற்புடையதாகவிருக்காது. ●

## இறுகும் இலங்கைப்...
*04 ஆம் பக்கத் தொடர்ச்சி....*

உண்மையை இணைத் தலைமை நாடுகளால் புரிந்து கொள்ள முடியாமல் போனது வேதனைக்குரிய விடயம்தான்.

யுத்தச் சூளுரையை விடுத்திருக்கும் பிரபாகரனை இணைத்தலைமை நாடுகள் கண்டிக்குமா? யுத்தமா? சமாதானமா? என்ற முரண்பாட்டுப் போக்கில், பிரபாகரன் யுத்தத்தின் பக்கம் நிற்கிறார். அவரின் சொல்லும் செயலும் அவரைச் சமாதானத்தின் விரோதியாகவே சுட்டிக் காட்டுகின்றன. தமிழ் மக்களின் சகஜ வாழ்வு நிலையைக் குழப்பியடித்து, அவர்களைத் துயரச் சிறைக்குள் தள்ளும் பிரபாகரனே, தமிழ் மக்களின் பிரதான எதிரி. இதனைச் சர்வதேச சமூகம் உணர்ந்து கொள்ள வேண்டும். முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.சாம் தம்பிமுத்துவும் அவரது மகனும் மட்டக்களப்பில் வைத்துப் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டபோது, பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு, அன்ரன் பாலசிங்கத்துக்கு எச்சரிச்சை விடுத்திருந்தது. கடத்தப்பட்டவர்கள் விடுவிக்கப்படாவிட்டால், அன்ரன் பாலசிங்கம நாடு கடத்தப்படுவார் என்று பிரிட்டன் விடுத்த எச்சரிக்கை, புலிகளை வழிக்கு வர வைத்தது. லண்டன் ஈழப் பதீஸ்வரர் ஆலயத்தை மோசடியான முறையில் கைப்பற்றி, அதன் தர்மகர்த்தாக்களான ஜெயதேவனையும் விவேகானந்தனையும் வன்னிக் காட்டுக்குள் சிறை வைத்திருந்த புலிகளுக்கு பிரிட்டன் விடுத்த எச்சரிக்கையே வேலை செய்தது. பிரிட்டனின் தலையீட்டையடுத்தே ஜெயதேவனும் விவேகானந்தனும் விடுவிக்கப்பட்டனர்.

புலிகள் நடத்துவது விடுதலைப் போராட்டமல்ல. பயங்கரவாத யுத்தம். அவர்கள்தான் அதிக தமிழர்களைக் கொன்று குவித்தவர்கள். அவர்களால் தான் தமிழ் மக்களின் துயரங்கள் தொடருகின்றன. ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், தனித் தமிழ் நாட்டுக்கான யுத்தத்துக்குப் பணத்தை அள்ளி வீசுவார்கள்.

இலங்கையில் யுத்த நிலை நீடித்தால்தான் இந்தப் ‘பொருளாதார அகதிகள்’ சீமையில் சௌந்தர்யமாக வாழ முடியும். ஆனால் அன்றாட வாழ்வைக் கொண்டு நடத்த முடியாமல், அவஸ்தைப்படும் பெரும்பாலான வடக்கு - கிழக்குத் தமிழர்களுக்கு தமிழீழம் தேவையில்லை. கௌரவமான தீர்வும், யுத்தமற்ற சகஜ வாழ்வுமே தேவை. பிரபாகரன் யுத்தப் பிரகடனத்தை வெளியிட்டிருக்கும் இந்த நிலையில், இணைத் தலைமை நாடுகளும் இந்தியாவும் சர்வதேச சமூகமும் வெறும் அறிக்கைகளையும் அபிப்பிராயங்களையும் வெளியிடுவதால் மட்டும் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது. சொல் வடிவிலும் செயல் வடிவிலும் தமது பங்களிப்புகளை செய்ய சர்வதேச சமூகம் முன் வந்தால், மட்டுமே பாதிக்கப்பட்டுவரும் அப்பாவித் தமிழ் மக்களையும் இந்த நாட்டையும் அழிவின் விளிம்பிலிருந்து காப்பாற்ற முடியும். ஐரோப்பிய யூனியன், பிரிட்டன், அமெரிக்கா, உட்பட அனைத்து சர்வதேச சக்திகளும் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா அதிக ஈடுபாடு காட்ட வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கின்றன. இலங்கையில் தமிழ் மக்கள், புலிகளாலோ அல்லது அரசாங்கப் படைகளாலோ பாரிய பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டால் அதன் எதிரொலிகள் இந்திய எல்லைகளைத் தாண்டி உள்நுழையக் கூடிய ஆபத்து உண்டென்பதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். ஆயுதம், மற்றும் போதைவஸ்துக் க்டத்தல்களை முறியடிப்பதற்காக இலங்கை - இந்திய கூட்டுக் கடற்படை ரோந்து, உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆயுத, மற்றும் போதைவஸ்துக் கடத்தல்கள்தான் பயங்கரவாத அமைப்புகளின் ஆதார சுருதி. இலங்கை அரசு, புலிகளையும் தமிழ் மக்களையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். தமிழ் மக்கள் எல்லாருமே புலிகள் அல்லர் என்பதை உணர்ந்து கொண்டு, வடக்கு, கிழக்கு மக்களின் அன்றாட அவலங்களுக்கு தீர்வு காண முன்னுரிமை வழங்க வேண்டும். ●

## எண்களின் பலன்கள் எப்படி?

| எழுத்துக்கள் | எண்கள் | கிரகம் |
|---|---|---|
| A,J,I,Y,Q | - 1 எண் | சூரியன் |
| B,K,R | - 2 எண் | சந்திரன் |
| C,G,L,S | - 3 எண் | குரு |
| D,M,T | - 4 எண் | ராகு |
| E,H,N,X | - 5 எண் | புதன் |
| U,V,W | - 6 எண் | சுக்கிரன் |
| O,Z | - 7 எண் | கேது |
| F,P | - 8 எண் | சனி |

உதாரணம்: D.VISAGAN
4 6 1 3 1 3 1 5 = 24

## பிறப்பெண் - 7, கூட்டெண் - 9

7, 16, 25 போன்ற திகதியில் பிறந்து, பிறந்த திகதி, மாதம், வருடம் இம்மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 9 வருமேயானால், இவர்கள் கேது, செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவராவர்.

இவர்கள் பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவர்களாகவும் சிலர் குறைந்த உயரத்துடனும் இருப்பர். சோகமும், மகிழ்ச்சியும் இவர்கள் வாழ்க்கையில் கலந்து வருவதால், முகம் பொலிவிழந்து பின் தெளிவடைந்தது போல் காணப்படும். இவர்களுக்குப் பெயர் நன்றாக அமையாவிட்டாலும் பொருத்தமான எண்ணில் பிறந்த வாழ்க்கைத் துணைவர் அமையாவிட்டாலும், குடும்ப வாழ்க்கை குழப்பமான வாழக்கையாக இருக்கும்.

மனநிலை சரியில்லாது தனிமையில் வேதனைப்பட்டுத் தானாகவே பேசிக் கொண்டிருக்கும் நிலை ஏற்படுகிறது. ஆண்களாக இருந்தால் பெண்களாலும், பெண்களாக இருந்தால் ஆண்களாலும் குழப்பங்கள் ஏற்படுகின்றன. சிலருக்குத் திருமணம் தாமதம் ஆகிக்கொண்டு போவதாலும் இன்னும் சிலருக்கு விவாகரத்து ஏற்படுவதாலும் வேதனைப்பட வேண்டிய நிலை ஏற்படுகிறது.

இதனால், பெயரை நல்ல எண்ணில் மாற்றி அமைத்துக் கொண்டாலோ அல்லது இயற்கையிலேயே பெயர் நல்ல எண்களில் அமைந்து விட்டாலோ நல்ல வாழ்க்கைத் துணைவர், நல்ல குழந்தைகள், நல்ல செல்வம் பெற்று வீடு, வாகனம் போன்ற வசதியுடன் வாழலாம். இவர்களுக்குத் திடமான மனநிலை இருந்தபோதிலும் சில நேரங்களில் கோழையாகி விடுகின்றனர்.

அது மட்டுமல்லாமல், தேவையற்ற காரியங்களில் தலையிட்டுச் சிக்கலை உருவாக்கிக் கொள்ளுகின்றனர். இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் காதல் வயப்பட்டு அதனால் சிக்கலை உருவாக்கி வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை முயற்சியில் ஈடுபடுகின்றனர். ஆனால் பிறந்த திகதிக்குப் பொருத்தமான எண்ணில் பெயர் அமைந்தவர்கள் உத்தியோகத்தாலும், தொழிலாலும், உயர்ந்த நிலையை அடைந்து நல்ல வாழ்க்கையை நடத்துகின்றனர். சிந்தனா சக்தி படைத்த இவர்களுக்குத் தெய்வீக அருள் உண்டு என்ற போதிலும் கெட்ட செயல்களும் ஒரு பக்கம் இழுத்துச் செல்லத் தயாராக இருக்கும்.

பொதுவாக இவர்களில் பலர் வேலை பார்ப்பவராகவும், சிலர் தொழில் செய்பவராகவும் இருக்கின்றனர். ஆனால் மனநிலை சரியில்லாததாகிவிட்டால் தொழில் செய்பவர்கள் தொழிலைக் கவனிக்க மாட்டார்கள். உத்தியோகம் செய்பவர்கள் திடீரென்று வேலைக்குப் போவதை நிறுத்திக் கொள்வர். இப்படிக் குழப்பவாதியாக வாழும் இவர்களுக்குப் பெயர் நன்றாக அமையுமேயானால் படிப்படியாக உயர்ந்த முன்னேற்றம் பெற்றுச் சிறப்பான வாழ்க்கையை அடைந்து பலர் போற்றும் நல்ல மனிதனாக வாழ்கின்றனர்.

ஜோதிடம், சட்டம், சமயம், மருத்துவம் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். பிடிவாத குணம் படைத்த இவர்கள், மற்றவர் கூறுவதை உடனே எடுத்துக் கொள்ளாது தன் மனதில் உதிக்கின்ற படியே நடப்பர். சிலருக்கு நல்ல மனைவி அமைந்துவிட்டால் பணம் சம்பாதிப்பது கஷ்டமாகிவிடுகின்றது. சிலருக்கு எல்லாம் இருந்தும் ஆரோக்கியம் கெட்டுவிடுகின்றது. இன்னும் சிலருக்கு எல்லா வசதிகளும் இருந்து வாழ்க்கைத் துணைவராலோ அல்லது குழந்தைகளாலோ பிரச்சினை வந்து விடுகின்றது.

இப்படிப்பட்ட சூழலில் தவிக்கும் இவர்களுக்குப் பெயர் பொருத்தமான நல்ல எண்ணில் அமைந்து விட்டால் கெட்ட பலன் குறைந்து, நல்லவைகள் இவர்களை நாடி வந்து உயர்வடையச் செய்யும்.

### தொழில்

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு எழுத்து, வழக்குத் தீர்த்தல், மருத்துவம், மருந்து, கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், இரும்பு சம்பந்தமான அனைத்துத் தொழிலும் சிறந்தவையே.

### நோய்

மனநோய், இருதயவலி, முதுகுவலி, மூட்டுவலி, வயிற்றுக் கோளாறு, வாயுக்கோளாறு, மலச்சிக்கல், இரத்த அழுத்தம் போன்றவைகள் வர வாய்ப்பிருப்பதால் நோய் உள்ளவர்கள் 42 எண்ணில் பெயரை அமைத்துக் கொண்டு நோயிலிருந்து விடுபடலாம்.

### பெயர் அமைக்கும் முறை

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களுக்கு, சுக்கிர ஆதிக்கமான 15, 24, 33, 42,51, 60, 69 போன்ற எண்களிலும், புதன் ஆதிக்கமான 14, 23, 32, 41, 50, 59, 77 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொண்டு சிறப்படையலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண் - 6, 5.

யோகமான திகதிகள் - 6, 15, 24; 5, 14, 23.

யோகமான மோதிரக்கல் - வைடூரியம், மூன் ஸ்டோன், டைகர்ஸ் ஐ.

யோகமான நிறம் - வெளிர் நீலம், வெளிர் மஞ்சள்.

ஆகாத திகதிகள் - இல்லை.

ஆகாத நிறம் - இல்லை.

*அடுத்த வாரம் பிறப்பெண் 8, கூட்டெண் 1 பற்றிப் பார்ப்போம்*


வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

நான் பிறந்தது உங்களுக்கு சேவை செய்ய மட்டுமே...

பண்டாரவளை மலையான
மகா வசிய மாந்திரீகம்..



ஸ்ரீ மகா பத்திரகாளித் தாயின் அருளைப் பெற்றுள்ள

இன்றே தொடர்பு கொள்ளவும் 057-2224591-92

ஷர்மா சுவாமிகள்

உள்நாட்டு, வெளி நாட்டு அன்பர்களுக்கு சேவை செய்து அருள் அளிப்பார்.

நாம் வாழும் வாழ்க்கையில் பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறோம். அதிலிருந்து விடுபடுவதே எங்களின் நோக்கம். இப்படிப்பட்ட பிரச்சினைகளிலிருந்து விடுபட இருதடவை யோசிக்காமல் என்னை சந்தித்தால் உங்களுக்கு வெற்றி நிச்சயம் என்பதை உறுதி செய்கிறேன்.

பார்த்துப் பார்த்துக் கொண்டிராதீர்கள் மன நம்பிக்கையோடு செய்து கொள்ளுங்கள்.

இன்றே சுவாமியவர்களைச் சந்தியுங்கள்
தொலைபேசி மூலம் பேசுங்கள். அல்லது முத்திரையுடன் கடித உறையொன்றை அனுப்புங்கள்.

**சந்திப்பு**
பண்டாரவளையில்
திங்கள் முதல் சனிக்கிழமை வரை
காலை 8.00 மாலை 6.00
நெடுஞ்சாலை காரியாலயத்திற்கருகில்
IDL நேர்சிங் ஹோம் மேல் பாதை
வெளிநாட்டவருக்கு விசேட ஏற்பாடுகள்!
தொ. பே. +94-572232441
+94-773227005

**சகலவிதமான வசிய மாந்திரீகம்**
- வீடு, வியாபார விருத்தி
- விவசாய விருத்தி
- நோய் நொடி சுகப்படுத்தல்
- விட்டுபிரிந்த கணவன் மனைவியர் மீண்டும் ஒன்று சேர.
- தாமதிக்கும் திருமணம் விரைவில் நிறைவேற
- குழந்தைப் பாக்கியம் கிட்ட
- விலைபோகாத காணிகள் விற்பனையாக
- எல்லா பரீட்சைகளிலும் சித்திபெற
- ஜாதகம் பார்ப்பது முதல் சகல ஜோதிட விடயங்கள்
- மண் பரீட்சை செய்தல்
- பிராணிகளை அகற்றுதல்

ஷர்மா சாமி அவர்கள்
P.O. Box 2, BANDARAWELA / பண்டாரவளை Regd. No. U/B 99/83
Tel. 077-3227005 057-2224591-92 078-5224681 Fax: 057-2232441
Website : sharmasami.com sribathrakaliamman_temple@yahoo.com

வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி... வசி...

# எர்னஸ்ட் ரதபோர்ட் (1871 - 1937)

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

***தங்கத்தின்*** அணுக்கள், 'நுண்ணிய பில்லியார்ட் பந்துகள்' போன்று, கடினமான, ஊடுருவ முடியாத பொருட்கள் என்று விஞ்ஞானிகள் முன்பு நம்பிக்கை கொண்டிருந்ததற்கு மாறாக, உள்ளே மென்மையானவை என்பதை இது உணர்த்தியது. மிக விரைந்து பாயும் துப்பாக்கிக் குண்டு ஒரு பாகினுள்ளே பாய்ந்து செல்வதைப் போல், சிறிய கடினமான, ஆல்∴பா துகள்களும், தங்க அணுக்களை ஊடுருவித் துளைத்துச் செல்லும் என்பதும் இதன் மூலம் தெரிய வந்தது.

ஆனால், கெய்ஜர், மார்ஸ்டென் என்ற தமது இரு இளம் உதவியாளர்களின் உதவியுடன் ஆராய்ச்சி நடத்தி, சில ஆல்∴பா துகள்கள் தங்கத் தகட்டினைத் தாக்கும்போது கடுமையாகக் கோட்டமடைவதைக் கண்டார். சில சமயம், திரும்பி வந்து தாக்குவதையும், அறிந்தார். இதில் ஏதோவொரு முக்கியமான வினை அடங்கியிருக்கிறது என்பதை உணர்ந்த ரதபோர்ட் தமது பரிசோதனையைத் திரும்பத் திரும்பச் செய்து பார்த்தார். ஒவ்வொரு திசையிலும் சிதறிச் செல்லும் துகள்களின் எண்ணிக்கையை மிகமிகக் கவனமாகக் கணக்கிட்டார். பிறகு, மிகமிகக் கடினமான, ஆனால், மிகவும் நம்பகமான கணிதப் பகுப்பாய்வு மூலம், பரிசோதனை முடிவுகளை விளக்குவதற்கு ஒரேயொரு வழிதான் உண்டு என்று அவர் காட்டினார்.


தங்கத்தின் ஓர் அணுவியல், பெரும்பாலும் முழுக்காலியிடம் (Empty Space) உள்ளது. இந்த அணுவின் பொருண்மை முழுவதும் மையத்திலுள்ள ஒரு நுண்ணிய மையக் கருவில் (Nucleus) செறிந்தடங்கியிருக்கிறது!

ரதபோர்டின் இந்த ஆய்வுக் கட்டுரை (1911), ஒரே கல்லில், இந்த உலகம் பற்றிய நமது பொது அறிவுக் கண்ணோட்டம் முழுவதையும் சிதறடித்துவிட்டது. மிகவும் திடமான பொருளாகத் தோன்றும் ஓர் உலோகம் கூட பெரும்பாலும் காலியிடமேயாகும். திண்மை வாய்ந்தவை என நாம் கருதிய

# உலகை வியக்க வைத்தவர்கள்

ஒவ்வொரு பொருளும், திடீரென அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள வெற்றிடத்தில் நுண்ணிய புள்ளிகளாகக் கரைந்து போயின!

அணு மையக் கரு(Atomic Nucleus ) பற்றிய ரதபோர்டின் இந்தக் கண்டுபிடிப்பு, அணுவின் கட்டமைப்பு (Atomic Structure ) குறித்த இன்றையக் கோட்பாடுகள் அனைத்திற்கும் அடித்தளமாக அமைந்தது. இதற்கு ஈராண்டுகளுக்குப் பிறகு நீல்ஸ் போர் தமது புகழ்பெற்ற ஆய்வுக் கட்டுரையை வெளியிட்டார். அதில் அவர், அணுவை, கதிரியக்க ஆற்றல் அலை வீச்சு இயக்கவியலின்(Quantam Mechanics ) ஆளுகைக்குட்பட்ட ஒரு 'குட்டி சூரிய மண்டலம்'(Miniature Solar System ) என்று வருணித்திருந்தார். இதற்கான உரு மாதிரிக்கு(Model) ஒரு தொடக்க நிலையாக ரதபோர்டின் அணுவியல் அணுவைப்(Nuclear Atom) பயன்படுத்திக் கொண்டார். அதே போன்று, ஹெய்சன்பர்கும், ஷிரோடிங்கரும் அதிக நேர்த்தியான அணுவியல் உருமாதிரிகளை, அச்சு வார்ப்புரு இயக்கவியலையும் (Matrix mechanics ), அலை இயக்கவியலையும் (Wave mechanics ) பயன்படுத்தித் தயாரித்தபோது, அவர்களும், ரதபோர்டின் அணுவியல் அணுவையே பயன்படுத்திக் கொண்டனர்.



அதுமட்டுமன்றி, ரதபோர்டின் கண்டுபிடிப்பு, அறிவியல் ஒரு புதிய பிரிவையும் தோற்றுவித்தது. அதுதான் அணு மையக் கரு ஆய்வியல் (Study of nucleus ) ஆகும். இதிலும், ரதபோர்ட் முன்னோடியாகத் திகழ்ந்தார். 1919 இல், அவர் விரைந்தியங்கும் அல்பாத் துகள்கள் மூலம் தாக்குதல் நடத்தி, நைட்ரஜன் மையக்கருக்களை, ஒக்சிஜன் மையக்கருக்களாக உருமாற்றிக் காட்டினார். இது பண்டைய இரசவாதிகளின் கனவுகளையும் விஞ்சிய ஒரு மகத்தான சாதனையாகும்.

இந்த அணுவியல் உருமாற்றங்கள்தான் (Nuclear transformation ), சூரியனின் எரியாற்றலுக்கு ஆதாரமாக இருக்கும் என்பது விரைவிலேயே தெரிய வந்தது. மேலும், அணுவியல் மையக் கருக்களை உருமாற்றம் செய்வதுதான், அணு ஆயுதங்கள் தயாரிப்பதிலும், அணு மின் நிலையங்களில் முக்கியமான செயல்முறையாக அமைந்தது. எனவே, ரதபோர்டின் கண்டுபிடிப்பு வெறும் அறிவார்ந்த ஆர்வம் மட்டுமே கொண்டதன்று அதைவிட மிக அதிகமான முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உலகம் அறிந்து கொண்டது.

ரதபோர்டின் 'இயல்பு கடந்த ஆளுமை' அவரைச் சந்தித்த எல்லோரையும் வெகுவாகக் கவர்ந்தது. அவர் பருத்து உயர்ந்த உடற்கட்டு கொண்டவர். உரத்த குரல் உடையவர். அளவற்ற ஆற்றல் நிறைந்தவர். அளப்பரிய தன்னம்பிக்கை கொண்டவர் - யாருக்கும் பணிந்து போகாதவர் - அவரது இயல்பு மீறிய திறம்பாட்டினை 'அறிவியல் ஆராய்ச்சியின் அலைமுகடு' என்று அவருடைய சக விஞ்ஞானியொருவர் வருணித்தபோது, 'அதை யார் மறுக்க முடியும்? அந்த அலையை உருவாக்கியதே நான்தானே!' என்று பதிலளித்தார். இதை மறுக்க எந்த விஞ்ஞானியால் முடியும்?

**அடுத்த வாரம்**
**ஜோகன்னஸ் கெப்ளர்**
**வியக்க வைப்பார்....**

# காதிலை பூ கந்தசாமி



**நோட்டீஸ் பலகை**

**நான் சொல்வ தெல்லாம் பொய்.**
**பொய்யைத் தவிர**
**வேறொன்றுமில்லை**
***-காதில பூ கந்தசாமி-***

**வணக்கமுங்கோ!**

எங்கட வேந்தனும், அவரின்ர புலவரும் பேசிக் கொள்ளிறதையும் கேக்கேக்க எனக்குப் பைத்தியம் பிடிச்சிடும் போல இருக்குது. வேந்தனின் சபையில் நடக்கிற உரையாடல்களை நீங்களும் கேளுங்கோ.

"என்ன புலவரே...சபைக்கு வந்ததில் இருந்து இப்படி அமைதியாக இருக்கிறீர்?"

"வேறு என்ன செய்யச் சொல்கிறீர்கள் வேந்தனே. பாராளுமன்றச் சபை நடவடிக்கைகளை நீங்கள் குழப்பும் விதமாக வாய்க்கு வந்தபடி யெல்லாம் கூச்சலிடுவது போல் எனக்கு, காட்டுக் கத்தல் கத்தமுடியாது. அதுதான் மௌனமாக இருக்கிறேன்."

"என் சபையில் புலவர் பாடாமல் இருந்தால், நான் பொற்கிழிகள் வழங்குவதில்லையோ என்ற அவப் பெயர் வந்துவிடப் போகிறதே... எனக்கு எனக்கு அவமானத்தைத் தேடித்தருவதற்கென்றே நீர் திட்டமிடுகிறீர் போல..."

"என்ன இன்றைக்கு, நீங்கள் வம்புக்கு இழுக்க வேறு யாரும் கிடைக்காமல் என்னுடன் ஆரம்பிக்கிறீர்களோ?"

"அதற்காக இல்லை புலவரே. என்னைப் புகழ்ந்து பாடவேண்டும். அப்படி இல்லாவிட்டால், இப்போது நா்ம் இருவரும் தனியாகத்தானே இருக்கின்றோம். சமயத்தைப் பயன்படுத்தி. உங்கள் கோபங்களையெல்லாம் கொட்டி, இகழ்ந்து பாடுங்கள், எதையாவது பாடுங்கள். நீங்கள் சும்மா இருப்பதைப் பார்க்க எரிச்சலாக இருக்கிறது."

"வேந்தே! நான் இகழ்ந்து பாடுவது நடக்கத் தான் போகிறது. அது ஒருபக்கமிருக்கட்டும். அதற்கு முதலில் நீங்கள் பாராளுமன்றத்தில் கூறிய கருத்துக்கள் பற்றி சில விளக்கங்கள் தெரிய வேண்டும்."

"அது தானே பார்த்தேன். புலவரின் மௌனத் துக்குப் பின்னால் புயல் கபடி ஆடிக் கொண்டி ருக்குதே என்று...விசேடமாக எதையும் சொல்ல வில்லை... "அடுத்த பட்ஜெட் தமிழீழத்தில்தான்" என்று சொன்னேன். அதிலென்ன தப்பு."

"தப்பே அதுதானே. தமிழீழத்தின் தலை நகரான திருகோணமலையில் என்று சொன்னீர்கள். ஆனால் உங்கள் தலைவர் திருகோணமலையைக் கைவிட்டு வன்னியைத்தானே தமிழீழத்தின் தலை நகராக மாற்றிக் கொண்டிருக்கிறார். நிலைமை அப்படி இருக்கையில், எப்படி நீங்கள் திருகோண மலையைத் தலை நகரமாகக் கூற முடியும்?"

"ம்...பொருள் தேடி, பிழை தேடி, குற்றம் கண்டு புகழ் தேடும் புலவரிடம் போட்டி போட முடியுமா? ஆனாலும் புலவரே, சிங்களவர்களுக்கு எங்கள் தமிழ் திமிர் என்னவென்று காட்ட வேண்டு மென்பதற்காக ஏதோ கூறிவிட்டேன்."

"அப்படியென்றால் தமிழீழம் அமையாது என்றும், அதுவும் அடுத்த வருடம் 'பட்ஜெட்' தமிழீ ழத்தில் என்பது நடக்கவே நடக்காது என்றும் உங்களுக்குத் தெரிந்துதான் அப்படிச் சொன்னீர் களா?"

"புலவரே, உங்களுடைய இந்தக் கேள்விக்கு ஆம் என்று சொல்லச் சொல்கிறீரா? இல்லை என்று சொல்லச் சொல்லுகிறீரா?"

"வேந்தே! சில உண்மைகளை நீங்கள் புரிந்துகொண்டால் இந்தச் சபைக்கு நல்லது. அதாவது, கூடிய அதிகாரத்தோடு தமிழர்களுக் கென்று ஒரு தனி நிர்வாகம் கிடைத்தால் அந்த நிர்வாகத்துக்குட்பட்ட நிலத்தை தமிழீழம் என்றோ, தாயகம் என்றோ பெயர் சூடிக் கொண்டாடலாம். அதைவிட நிச்சயமாக ஆயுதங்கள் அதைச் சாதிக்க முடியாது. இது ஒருபுறமிருக்கட்டும்... அப்படித்தான் தமிழீழம் ஏதோ ஒரு வழியில் கிடைக் கப் பெற்றால், அதற்கான பாராளுமன்றத்திலோ, சட்டசபையிலோ நீங்களும் உங்களைப் போன்ற போலி வேந்தர்களும் பதவிகளுக்கு வரமுடியாது. இப்போது போல், பதவிகளைத் தூக்கிக் கொடுத்து விட்டு பல் இளித்துக் கொண்டும் இருக்க மாட்டார்கள். இது தவிரவும், அப்படியானதொரு சூழலில் உங்களின் கடந்த கால பழைய வரலாறு களைக் கிண்டி, அந்த நேரத்தில் யார் யார் என்ன செய்தீர்கள் என்ற கணக்கெடுப்பு நடக்கும். அப்படிப் பார்த்தாலும் உங்களைப் போன்றவர்களுக்கு சுதந்திர தமிழ் நிர்வாகத்தில் பதவிகளை வகிக்கும் அருகதை கொஞ்சமும் இல்லை. இதையெல்லாம் தெரிந்து கொண்டும் எப்படி உங்களால் அப்படி ஒரு அறைகூவலை விடுக்க முடிந்தது? அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது."

"இகழ்ந்து பாடச் சொன்னேன் என்பதற்காக உப்படி எட்டுக்கட்டி பாடுகிறீரே. புலவரே! உமக்குக் கொஞ்சமல்ல, நிறையவே வாய்க் கொழுப்பு."

"அது சரி. மொல்லமாறி வேந்தனாக இருந் தாலும் நல்லவன், வல்லவன் என்று புகழ்ந்தால் புலவன் நல்லவன்; இல்லாமல், யதார்த்தத்தைப் பேசினால் புலவனுக்கு வாய்க் கொழுப்பு என்பீர்கள். எல்லா வேந்தர்களுமே ஒரே மாதிரி யாகப் புகழுக்கு மட்டும் வாழ நினைக்கிறபடியால் தானோ என்னவோ, குடிமக்கள் எல்லோருமே குடிகெட்ட மக்களாகவே வாழ்கிறார்கள். இதற்கு ஒரு விடிவே கிடையாதா?"

"யதார்த்தம் என்று எதைச் சொல்லப் போகிறீர் புலவரே?"

"இல்லை, அடுத்த வருடம் 'பட்ஜெட்' திரு கோணமலையில வாசிக்க முடியாவிட்டால் உந்த மூக்குத் தோண்டி மூக்கையும், அது முளைச் சிருக்கிற அசிங்கமான முகத்தையும் கொண்டு எங்கே போவீர்கள், என்ன செய்வீர்கள்? அதற்குப் பிறகும் உயிர் வாழ்வது அவமானமாக இருக் காதா.?"

"இந்தியாவுக்குப் போக முடியாது. ஆனால் ஜேர்மனிக்குப் போகலாம் போல் இருக்கிறது. நான் கேட்கிறேன், வாய் வீரம் பேசினால் அப்படி போகத் தான் வேணுமா? எத்தனையோ பேர் என்னென் னவோ பேசிவிட்டும் இன்னும் திரிகிறார்கள்தானே."

"திரிவார்கள். அவர்கள் கட்டியிருக்கும் கோவ ணம் கூடக் கொடுப்புக்குள் சிரிக்கும். மானத்தை அடவு வைத்த பிறவிகளுக்கு அது தெரியாமலிருக் கலாம். எனக்கு என்னவோ, அருவருப்பாக இருக்கிறது."

"சரி...சரி...சபைக்கு மந்திரி வருகிறார். நமது பெர்சனல் விஷயங்களைப் பிறகு பேசுவோம். மந்திரி மோசமான ஆள். போட்டுக்குடுத்து விடு வார்."

**யாவும் கலப்படமற்ற கற்பனை**

# இந்த வாரம் உங்கள் பலன்

**(30.11.2006 தொடங்கி 06.12.2006 வரை)**

**சோதிட மாமணி தில்லை**

## இந்த வாரக் கிரக நிலை

விருச்சிகம் - சூரியன், வியாழன், வெள்ளி, செவ்வாய். கும்பம் - இராகு. சிங்கம் - சனி (வக்கரகம்), கேது. துலாம் - புதன். சந்திரன் மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

**மேடம்** : (அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.) தொழில் நன்மை, பலவிதப் பேறு, பெரியோர் உதவி, மனக்குறை நீங்கும், பிரயாணக் கஷ்டம், உயர்ந்தோர் நட்பு, குடும்ப மேன்மை, உத்தியோகக் கஷ்டம், வீண்குறை கேட்டல், மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 04.**

**இடபம்** : (கார்த்திகைப் பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை.) தொழில் பகை, அந்நியர் நட்பு, கௌரவக் குறைவு, பண விரயம், வெளியிடப் பிரயாணம், தேகசுகக் குறைவு, மனக்குறையதிகம், குடும்பச் சிக்கல், உத்தியோகப் பயம், மேலதிகாரிகளின் தொல்லை, மாணவர் கல்வி மந்தம், விவசாயிகள், வியாபாரிகள் அற்ப இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**மிதுனம்** : (மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்.) தொழில் பலிதம், மனக்குறை நீங்கும், உயர்ந்தோர் நட்பு, பெரியோர் உதவி, வெளியிட வாழ்க்கை, குடும்பப் பொறுப்பு, உத்தியோக உயர்ச்சி, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

**கர்க்கடகம்** : (புனர்பூசத்து நாலாங் கால், பூசம், ஆயிலியம்.) தொழில் பலிதம், மனக்குறை நீங்கும், உயர்ந்தோர் நட்பு, தெய்வ நம்பிக்கை, தேக சுகம், குடும்ப நன்மை, உறவினர் உதவி, மாணவர் கல்விக் குழப்பம், புதிய கல்வி முயற்சி, உத்தியோகக் கலக்கம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 07.**

**சிங்கம்** : (மகம், பூரம், உத்தரத்து முதற் கால்.) தொழில் விருத்தி, பண வரவு, மனக்குறையதிகம், பெரியோர் சகாயம், இனசன நன்மை, புதிய முயற்சி, வெளியிட வாழ்க்கை, குடும்பக் கவலை, உத்தியோகச் சிறப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 01.**

**கன்னி** : (உத்தரத்துப் பின் முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை.) தொழில் அலைச்சல், பெரியோர் பகை, மனக்குறை நீங்கும், பிரயாணத் தொல்லை, பொருள் இழப்பு, அந்நியர் உதவி, குடும்ப சகாயம், உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**துலாம்** : (சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்.) தொழில் பலிதம், பண வரவு, உயர்ந்தோர் நட்பு, மனக்குறை நீங்கும், இனசன நன்மை, காரியசித்தி, குடும்பப் பயம், உத்தியோகக் கவலை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**விருச்சிகம்** : (விசாகத்து நாலாங் கால், அனுஷம், கேட்டை.) தொழில் பகை, பணச் செலவு, பெரியொர் கவலை, பிரயாண மிகுதி, மனக்குறை நீங்கும், இனசன மகிழ்ச்சி, புதிய முயற்சி, குடும்ப நன்மை, உத்தியோகப் பயம், மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- செவ்வாய்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 04.**

**தனு** : (மூலம், பூராடம், உத்தராடத்து முதற் கால்.) தொழில் அலைச்சல், பயனற்ற செயல், பணச் செலவு, அந்நியர் உதவி, தேகசுகக் கஷ்டம், வெளியிட வாழ்க்கை, உயர்ந்தோர் நட்பு, குடும்பக் கவலை, உத்தியோகப் பொறுப்பு, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வியாழன்.**
**அதிர்ஷ்ட இலக்கம் :- 01.**

**மகரம்** : (உத்தராடத்துப் பின் முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை.) தொழில் மாற்றம், புதிய முயற்சி, கௌரவம், பெரியோர் உதவி, வீண்குறை கேட்டல், குடும்ப மனஸ்தாபம், உத்தியோகப் பற்று, மேலதிகாரிகள் தொல்லை, மாணவர் கல்விக் குழப்பம், விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- புதன்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 03.**

**கும்பம்** : (அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்.) தொழில் மாற்றம், பண விரயம், பெரியோர் சகாயம், இனசன நன்மை, காரியானுகூலம், மனக்குறை நீங்கும், குடும்பத் தொல்லை, பிள்ளைகள் உதவி, உத்தியோக அலைச்சல், மாணவர் கல்வி மாற்றம், விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- வெள்ளி.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 06.**

**மீனம்** : (பூரட்டாதி நாலாங் கால், உத்திரட்டாதி, ரேவதி.) தொழில் நன்மை, காரியசித்தி, உயர்ந்த நிலை, மனக்குறை நீங்கும், பயனுள்ள செயல், உறவினர் உதவி, உத்தியோகப் பகை, மேலதிகாரிகள் உதவி, மாணவர் கல்வி உயர்ச்சி, விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம்.
**அதிர்ஷ்ட நாள்:- திங்கள்.**
**அதிர்ஷ்ட இலக்கம்:- 05.**

Regd. as a News Paper at the G.P.O.(QD/06/NEWS/2006)



## நவீனம்

நாளுக்கு நாள் நவீன கணினித் தொழில்நுட்பம் அதிகரித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், கைத் தொலைபேசிகள் ஊடாகவே கணினி உலகின் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய வகையில் ஜப்பானியர்கள் 'புதிய செல்போன்'களைத் தயாரித்துள்ளனர். டோக்கியோவின் 'சார்ப்' எலக்ட்ரோனிக் நிறுவனம் அறிமுகப்படுத்தும் நவீன செல்போன்களே இவை. உலகம் உருண்டையானது என்பது மாறி இனி அது வடிவானது எனலாம்.



## குளியல்


ஜப்பானின் மேற்கு டோக்கியோவில் 'ஸ்பா' (நீர்த்தொட்டி) ஒன்றில் வைன் நிரப்பப்பட்டு அங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் அதற்குள் நீந்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வைனில் குளிப்பது உடல் ஆரோக்கியத்திற்கு நல்லது என்று ஜப்பானியர்கள் நம்புகிறார்கள். குளித்துக் கொண்டே குடிக்கலாம். குடித்துக்கொண்டே குளிக்கலாம். இதற்கு முன்னர் இந்த இடத்தில் குளித்துவிட்டுத் தான் ஸ்பா தொட்டிக்குள் இறங்க வேண்டுமாம். நமக்கு எப்படி வசதி!




## பயிற்சி

எதிர்வரும் கிறிஸ்மஸ் பண்டிகையில் முதன் முறையாக கிறிஸ்மஸ் தாத்தா வேடமணிபவர்களுக்கு தென் கொரியா சியோலில் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன. வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் பயிற்சி வழங்கப்படுகிறது. பயிற்சியை முடித்துக் கொண்ட ஒரு பகுதியினரையே இங்கு காண்கிறீர்கள்.






## நண்பன்



"பாம்பென்றால் படையும் நடுங்கும்" என்பது பழமொழி. பழைய மொழியும் கூட என்கிறாரோ அமெரிக்காவைச் சேர்ந்த ஜாக்கி பிப்பி. 'பாம்பு மனிதர்' என்ற பட்டப் பெயராலும் அழைக்கப்படுகின்ற இந்த மனிதர், ஒரே நேரத்தில் எட்டுப் பாம்புகளை தனது வாய்க்குள் எவரது உதவியுமின்றித் திணித்து 12.5 செக்கன்களுக்கு அப்படியே வைத்திருந்து உலக சாதனையொன்றினைப் படைத்திருக்கிறார். பாம்புகள் ஒவ்வொன்றும் இரண்டரை அடி நீளமானவை. அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்திலுள்ள ஒர்லாண்டாவில் 2001 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி இவர் இந்த நிகழ்ச்சியைச் செய்து காட்டியிருக்கிறார். வாழ்க்கை பூராவுமே பாம்புகளோடு விளையாடுவதுதான் இந்த மனுசப் பிறவியின் பொழுதுபோக்கு. தனது மூன்றாவது மனைவியை 300 பாம்புகள் கொண்ட குழியொன்றினுள் நின்றுகொண்டே திருமணம் புரிந்து கொண்டாரென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!





## வாயாடி

பிரிட்டனைச் சேர்ந்த காரி ரேர்னர் என்பவர் நிகழ்த்தியிருக்கும் உலக சாதனை ஆச்சரியமானது, அற்புதமானது சில வேளைகளில் எம்மை வாய்விட்டுச் சிரிக்கவும் வைக்கலாம். தாடைக்கு மேலே வாயை அண்டியுள்ள பகுதியிலுள்ள சருமத்தை மிக நீண்ட தூரத்திற்கு இழுத்து அவர் சாதனை புரிந்திருக்கிறார். அதாவது 15.8 சென்டி மீட்டர்கள் அவர் சருமத்தை இழுத்திருக்கிறார். அதாவது, 6.25 அங்குலத்துக்கு அவரது தோல் இழுபட்டிருக்கிறது. அவரது தோல் இப்படி இழுபடுவதற்கு 'எஹ்லேர்ஸ் டன்லொஸ் சின்ட்ரோம்' என்ற நோயே காரணமென டாக்டர்கள் கூறுகின்றனர். இந்த நோயால் பீடிக்கப்பட்டவரின் தோல், இழுபடுவதைக் கட்டுப்படுத்தும் சக்தியை இழந்துவிடுமாம். இதனால் சருமம் தொய்வதோடு மூட்டுப் பகுதிகளும் பாதிக்கப்படுமென்கின்றனர் டாக்டர்கள். இருந்தாலும், இந்த நோயைப் பயன்படுத்தி உலக சாதனையொன்றினைப் புரிந்துவிட்டாரே காரி ரேர்னர். மனிதர் அசகாய சூரர்தான்!



## ஆட்டம்

சிந்திப்பதற்கும், சிந்திப்பதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கும் 24 மணிநேரம் போதாது என்கிறார்கள் ஜப்பானியர்கள். அதற்கிடையில் கிடைக்கின்ற ஓய்வு நேரத்தில் ஹோட்டல்களுக்கு வருபவர்களை எப்படியெல்லாம் சந்தோஷப்படுத்த முடியுமோ, அப்படியெல்லாம் முயற்சிக்கிறார்கள். பிரான்ஸ் நாட்டின் நடனப் பெண்கள் டோக்கியோ ஹோட்டல் ஒன்றில் இரவு நடனமாடும் காட்சியே இது.



## நட்சத்திரம்

ஹைதராபாத்தில் நடந்த 'ஹார்ட் டு ஹார்ட்' கார்னிவல் நிகழ்ச்சியில் டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சாவும், திரை நட்சத்திரங்களான தருண், ஸ்ரேயா ஆகியோரும் கலந்து கொண்டனர். இவர்களைப் பார்ப்பதற்காக கூடிய கூட்டத்திலிருந்து ஒருவர் சானியா மிர்சாவிடம் எப்போது நடிக்க வருகிறீர்கள் என்று கேட்டபோது கேள்விக்கு ஒரே யொரு சிரிப்பை மட்டுமே உதிர்த்தாராம்.